# வாழ்க்கை என்பது...!

அழகான பூந்தோட்டம்

பூக்களுடன் கூடிய ஒரு மரம்
அதில் பல இனக்குருவிகள்

தமிழறிஞர்
கே. வி. குணசேகரம்

# வாழ்க்கை என்பது...!

தமிழறிஞர்

கே. வி. குணசேகரம்

# நூல் விபரம்

நூலின் பெயர் : வாழ்க்கை என்பது...!

நூலாசிரியர் : கே. வி. குணசேகரம்.

பதிப்பாண்டு : 2009

மொத்தப் பக்கங்கள் :

விநியோகம் :

விலை :

## என்னுரை

'இன்பத்தை அள்ளித்தரும் இந்து மதம்' என்ற பத்து நூல்களுக்குப் பின் இந்நூல் வெளிவருகிறது. வாழ்க்கையைப் பற்றிப் புரிந்து கொள்ளாமையாற்றான் பலர் அதைத் துன்பமானது என்று நினைக்கிறார்கள்.

மனிதன் இன்பமடைய வேண்டும் என்பதற்காகத்தான் இறைவன் உலகையும் பொருட்களையும் பல்வேறு உயிர்களையும் படைத்தான். தர்மமான முறையில் வாழ்பவன் எப்பொழுது இன்பமாக வாழ்வான். இது தான் இந்நூலின் அடிப்படை.

வாழ்க்கையின் தத்துவங்கள் அனைத்தையும் கூறுவது திருக்குறள். அதனால் திருக்குறளை ஆதாரமாகக் கொண்டு இந்நூலை எழுதியுள்ளேன். திருக்குறளைத் தற்பொழுது வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் அறிந்து கொள்ளல் வேண்டும் என்பது எனது எண்ணம்.

இந்நூலை கணனி மயப்படுத்திய ராஜ் கெம்பியூட்டர் ஸ்தாபனத்தினருக்கும், எழுத்துப் பிழைகளைத் திருத்தித்தந்த செல்வி. ப. இறைமகள் ஆசிரியை, ஓய்வு பெற்ற அதிபர் திரு.வா.ஜெயரத்தினம் அவர்களுக்கும் அணிந்துரைகள் பாராட்டுரைகள் தந்த அனைவருக்கும் இந்நூலை வெளியிடும் கொழும்பு 12இல் இருக்கும் லங்கா பதிப்பகத்தினருக்கும், நான் கல்வியில் பல சாதனைகள் புரியவும், எனது நூல்களை வாங்கி மாணவர்களுக்குப் பரிசளித்து ஊக்குவித்தும், உதவிகள் செய்தும் வருகின்ற நல்லூர்க் கோட்ட அதிபர் சங்கத்தலைவரும், இலங்கையில் தரம் ஐந்து புலமைப் பரிசில்

பரீட்சையில் அதிகூடிய மாணவர்கள் சித்தியடைந்த யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலை அதிபர் திலகம் திரு.வே. ஞானகாந்தனுக்கும் நன்றி கூறிக்கொள்கின்றேன்.

அன்புடன்
கே. வி. குணசேகரம்
கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

# கடவுள்

உலகம் எப்படி உண்டானது?

அது தானாக உருவாகியதா? இல்லை, யாரோ ஒருவரால் உருவாக்கப்பட்டதா?

இதற்கு மெய்ஞ்ஞானிகளும், விஞ்ஞானிகளும் விளக்கமளித்திருந்த போதும் மெய்ஞ்ஞானிகளின் கூற்றையே தொண்ணூற்றொன்பது சதவீதமான மக்கள் நம்புகின்றனர்.

உலகமும், உலகில் உள்ளவையும் கடவுளால் படைக்கப்பட்டவை என்பதே மெய்ஞ்ஞானிகளின் கூற்று.

விதையில் இருந்து தான் தாவரம் உண்டானது. அந்த விதையையும், மரத்தையும் படைத்தவன் இறைவன்.

ஆணையும் பெண்ணையும் படைத்தவன் இறைவன்.

நடப்பவை யாவும் கடவுளின் திருவிளையாடல்கள் என்று இந்துக்கள் நம்புகின்றனர்.

தீயவை நடந்தால் தமது கர்மபலன் என்றும், நல்லவை நடந்தால் தமது புண்ணிய பலன் என்றும் இந்துக்கள் நம்புகின்றனர்.

இதற்காகத் தம்மைத்தாமே நொந்துகொள்ளும் இந்துக்கள் தான் அனேகர்.

கடவுளின் கிருபையால் தான் நல்லவை நடக்கும் என்ற நம்பிக்கை இந்துக்களுக்கு உண்டு.

எந்தக் காரியத்தைச் செய்வதானாலும் கடவுளை வணங்கி, தான் செய்யப்போகும் கருமத்தைக் கடவுளிடம் ஒப்படைத்துவிட்டுச் செய்பவர்களுக்கு தோல்வி ஒரு போதும்

உண்டாகாது. தற்செயலாகக் கா்மபலனால் தோல்வி வந்தாலும் அது நிலைக்காது.

கடவுள் நிலையானவா்; அழிவில்லாதவா்; அவருக்குப் பிறப்பும் இறப்பும் இல்லை; அவா் எங்கும் இருப்பவா்; எல்லாம் அறிபவா்; அவா் அறிவித்து அறிபவா் அல்லா். உயிா்களின் இன்பதுன்பங்களைத் தாமாகவே உணா்ந்துகொள்ளும் வல்லமை உள்ளவா்; விருப்பு வெறுப்பு இல்லாதவா்; அவருக்கு ஒப்பான எதுவும் உலகில் இல்லை.

இதனால் சைவா்கள் தமது கடவுளான சிவபெருமானை எண்குணத்தவன் என்கிறாா்கள்.

எண்குணங்களாவன தன் வயத்தன் ஆதல், தூய உடம்பினன் ஆதல், முற்றும் உணா்தல், இயல்பாகவே பாசங்களில் இருந்து நீங்குதல், இயற்கை உணா்வினன் ஆதல், பேரருள் உடைமை, முடிவில் ஆற்றல் உடைமை, வரம்பில் இன்பம் உடைமை என்பனவாம்.

கடவுள் ஆன்மாக்களுக்கு அருள் செய்வதற்காகத் திருவருளைத் திருமேனியாகக் கொண்டவா். திருவருள் என்பது அன்பு. அதனாற்றான் திருமந்திரம் ‘அன்பே சிவம்’ என்கிறது.

உயிா்கள் அனைத்தும் இன்பமாக இருக்கவேண்டும் என்பதற்காகவே கடவுள் உலகத்தையும் போகப் பொருட்களையும் படைத்தாா். உலகில் கடவுளால் படைக்கப் பட்டவற்றைத் துன்புறுத்தாது உயிா்கள் அனுபவிக்க வேண்டும் என்பதே கடவுளின் விருப்பமாகும்.

கடவுள் இல்லை என்று நிரூபிக்க முடியாது.

எமது ஊரில் கடவுள் இல்லை என்று ஒருவா் அடித்துக் கூறுவாா். அவா் கோயில்களுக்குச் சென்றது கிடையாது.

திருநீறு பூசியது கிடையாது. வெள்ளிக் கிழமையிலும், விரத தினங்களிலும் தவறாது மாமிசம் உண்பார்.

அவரது மனைவி பதிவிரதை. விரததினமானாலும் கணவனின் விருப்பங்களைப் பூர்த்தி செய்பவள். எதிர்ப்புக்கள் எதுவும் கூறாது மிகவும் மகிழ்வுடன் அவள் மாமிசத்தை விரத நாட்களில் சமைத்துக் கொடுப்பாள். பின் முழுகிவிட்டுத் தனக்கும் பிள்ளைகளுக்கும் சமைப்பாள்.

அன்று வெள்ளிக்கிழமை. விநாயக சதுர்த்தி. கணவன் கொண்டுவந்த மாமிசத்தைச் சமைத்து வைத்துவிட்டு முழுகுவதற்கு ஆயத்தமானாள் அந்தப் பெண். அவ்வேளையில் அவள் மயக்கமடைந்தாள்.

அப்பெண்ணின் கணவனும் பிள்ளைகளும் அவளை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர்.

இரண்டு தினங்கள் கழிந்தும் அவளுக்கு மயக்கம் தெளியவில்லலை.

கணவன் ஆடிப்போனான். அவள் உயர்சாதிப் பெண்; பெரும் பணக்காரரின் ஒரே மகள். அவனைக் காதலித்து வீட்டைவிட்டு அவனுடன் வந்த பின் அவளது பெற்றோரோ, இனத்தவரோ அவளைச் சேர்ப்பதில்லை.

கணவன் மீது கொண்ட அளவற்ற பாசத்தால் அவள் அவனது மனம் நோகாது வாழ்க்கையை நடத்தி வந்தாள். அவளை வைத்தியசாலையில் சேர்த்த பின் அவன் உணவை உண்ணவில்லை.

பிள்ளைகளும், இனத்தவர்களும் உணவை உண்ணும் படி வற்புறுத்திக் களைத்துப் போனார்கள்.

மேலும் இரண்டு நாட்கள் கழிந்தன. அவளுக்கு மயக்கம் தீரவில்லை. அவன் ஆடிப்போனான். அவள் தப்பமாட்டாள் என்று

வைத்தியர்கள் நினைத்து அவளது கணவனை அழைத்து; “ஐயா, உங்கள் மனைவியின் நிலை மிகவும் கவலைக் கிடமாகவுள்ளது. எம்மால் முடிந்தளவு வைத்தியம் செய்துவிட்டோம். இனி இறைவன் தான் ஏதாவது வழி செய்தல் வேண்டும். உங்கள் ஊரில் உள்ள நாவலர் ஶ்ரீ வித்தியா மஹா கணபதி மிகவும் சக்தி வாய்ந்தவர். அவருக்கு நேர்த்தி வையுங்கள்” என்றனர்.

அவன் எதுவும் பேசவில்லை. வெளியே வந்து கால் போன திசையில் நடந்தான்.

“வா ஆருரா, ஏது இந்தப்பக்கம்?” நாவலர் ஶ்ரீ வித்தியா மஹா கணபதி ஆலயக்குருக்கள் கேட்டார்.

ஆரூரன் திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தான். குருக்கள் மங்கலாகத் தெரிந்தார். மஹா கணபதியின் முகம் பிரகாசமாகத் தெரிந்தது.

“நான் பிழை விட்டுட்டன் குருக்கள்…” மேலே கதைக்கமுடியாது விம்மினான். பின் தடுமாறியபடி சொன்னான்; “எனக்காக எனது மனைவி தனது வாழ்வில் உள்ள இன்பங்கள் அனைத்தையும் துறந்தவள். நான் சிறிய சிறிய விடயங்களைக்கூட அவளுக்காகத் தியாகஞ்செய்யவில்லை. அவள் மாமிசம் உண்ணாத சைவக்குடும்பத்தில் பிறந்தவள். ஆனால் எனக்காக மாமிச வகைகளைச் சமைத்துத் தருவேன் என்று காதலிக்கும் போதே கூறினாள். அதை நான் அவளது பலவீனமாக எண்ணி விரத நாட்களிற் கூட மாமிசங்களை வாங்கி வந்து கொடுப்பேன்…..” மேலே கதைக்க முடியாது விம்மி விம்மி அழுதான் ஆரூரன்.

“செய்தவற்றைத் தவறு என்று நீ உணர்ந்துவிட்டாய். இனித் திருந்தி நடப்பாய். உனது மனைவிக்கு எதுவும் நடக்காது. இந்தா திருநீறு கொண்டுபோய் அவளது நெற்றியில் பூசு” என்றார் குருக்கள்.

ஆரூரன் கையை நீட்டினான். குருக்கள் திருநீற்றை அள்ளிப் போட்டார். திருநீற்றுடன் ஓர் அறுகம்புல்லும் இருந்தது.

“அப்பா, உங்களை எங்கையெல்லாம் தேடினோம். காணவில்லை. காலையில் கோயிலுக்கு வந்த ஒருவர் தான் நீங்கள் கோயிலில் இருப்பதாகச் சொன்னார்” என்றான் அவனது மகன் கணேசன்.

ஆரூரன் சுற்றிவரப் பார்த்தான். யாரும் இல்லை. அவனது கையில் திருநீறும் அறுகம்புல்லும் இருந்தது.

மீண்டும் சுற்றிவரப் பார்த்துவிட்டு, “குருக்கள் எங்கே..? இப்ப நின்று எனக்குத் திருநீறு தந்தவர்” என்றான்.

“பன்னிரண்டு மணிக்குத்தானே பூசை. இப்ப பத்து மணி. குருக்கள் வந்திருக்கமாட்டார்” என்றான் கணேசன்.

அதை ஆரூரனால் நம்பமுடியவில்லை; “அப்போ திருநீறு தந்தது யார்?” அவன் தனக்குத்தானே அக்கேள்வியைக் கேட்டுக்கொண்டான்.

அப்பொழுது குருக்கள் வந்தார், “என்ன ஆரூரா கோயிற் பக்கம். கஷ்டம் வந்தால் தான் கடவுளின் ஞாபகம் வரும்” என்று கூறியபடி கோயிலினுள்ளே சென்றார்.

ஆரூரனுக்கு மயக்கம் வருவது போல இருந்தது.

அவர்கள் வைத்தியசாலைக்கு வந்தபோது அவனது மனைவி ஆடாது அசையாது பிணத்தைப் போலக் கிடந்தாள்.

ஆரூரன் அவளின் அருகே சென்று, தான் கொண்டு வந்த திருநீற்றுச் சரையை எடுத்து அதைப் பிரித்துச் சிறிது திருநீற்றை எடுத்து அவளது நெற்றியில் பூசினான். அப்போது அவளது உடல் லேசாக ஆடியது.

மூன்று தினங்கள் கழிந்தன. அவள் எழுந்து கட்டிலில் அமர்ந்தாள். கணவனது மாற்றம் அவளுக்கு மட்டற்ற மகிழ்ச்சியைக் கொடுத்தது. அதன் பின் அவன் மாமிசம் சாப்பிடுவதைக் கைவிட்டான். மஹா கணபதியின் பெரும் பக்தனானான்.

கடவுள் இருக்கிறார் என்பதற்கு இப்படி ஆயிரமாயிரம் கதைகளைக் கூறலாம்.

கடவுள் அன்பு மயமானவர். அன்புடன் வேண்டுவோர்க்கு வேண்டுவன யாவும் அளிப்பவர். மிகுந்த தயாளகுணமுடையவர். அதனாற்றான் மாணிக்கவாசகர், ‘‘தாயிற் சிறந்த தயவான தத்துவனே’’ என்றார்.

கடவுள், புண்ணியங்களைச் செய்த ஆன்மாக்களுக்கு எப்பொழுதும் இன்பங்களைக் கொடுப்பார். தீயவர்களானால் அவர்கள் திருந்துவதற்கு வழியமைத்துக் கொடுப்பார். தன்னாற் படைக்கப்பட்ட அனைத்து உயிர்களும் இன்பமாக வாழவேண்டும் என்று நினைப்பவர் கடவுள்.

கடவுளை அன்போடு வணங்கினால் அவர் வணங்குபவர்களின் உள்ளத்தில் வீற்றிருந்து அவர்களுக்கு வேண்டிய உதவிகள் அனைத்தும் செய்வார். கடவுளை அன்போடு வணங்குவோர் எல்லா உயிர்கள் மீதும் அன்பாக இருப்பர்; ஒழுக்கமாக வாழ்வர். அதனால் நம்பிக்கையுடன் கடவுளை வழிபடல் வேண்டும்.

கடவுளை எப்படியும் வழிபடலாம். ஆகமமுறைப்படி அமைந்த கோயில்களிலும் வழிபடலாம், வீட்டில் பூசையறையில் சுவாமிப்படங்களை வைத்தும் வழிபடலாம். வீட்டில் உள்ள மரங்களின் கீழ்க் கடவுளின் திருவுருவச் சிலைகளை வைத்தும் வழிபடலாம். மனதில் நினைத்தும் வழிபடலாம். இது அவரது மனப்பக்குவ நிலையைப் பொறுத்தது.

கோயிலுக்குச் சென்று வழிபட விரும்புவோர் பல நிபந்தனைக்குட்பட்டே வணங்குதல் வேண்டும். நீராடி, மனத் தூய்மையுடன், தோய்த்து உலர்ந்த ஆடைகளைக் கட்டிக் கொண்டு கோயிலுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்வதே சிறப்பானது. திருவிழாக் காலங்களிற்கூடப் பட்டுப்பீதாம்பரங்கள் அணிந்துகொண்டு கோயிலுக்குச் செல்வதைத் தவிர்த்தல் வேண்டும்.

பட்டாலான உடைகளுடன் கோயிலுக்குச் சென்றால் மனதை ஒடுக்கிக் கடவுளை வணங்கமுடியாது. தாம் உடுத்திய விலையுயர்ந்த ஆடைகளில் வணங்கும் போது அழுக்குப் படிந்துவிடும் என்ற எண்ணம் மனதில் உருவாகினால் ஆண்கள் அட்டாங்க நமஸ்க்காரமும், பெண்கள் பஞ்சாங்க நமஸ்க்காரமும் செய்ய முடியாது. இதைச் செய்யாவிட்டால் பிரயோசனம் இல்லை. வழிபடுவதைவிட வழிபடுபவர்களைக் கெடுப்பது தீமையானது. எனவே மக்கள் கோயிலுக்குச் சென்று கடவுளை வழிபடும் போது மிகவும் அவதானமாக நடந்துகொள்ளல் வேண்டும்.

பட்டாடைகள் சரிகைத் தொண்டுகளைச் செய்ய விடமாட்டாது. கோயில்களில் அழுக்குப் பொருட்கள் இருந்தால் உடனே அவற்றை அகற்றுதல் வேண்டும். விளக்குகளின் திரிகள் எண்ணெய் காணாது எரிந்து மணக்குமுன் எண்ணெய்

விடவேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் பாவம் உண்டாகும். இவற்றைச் செய்யப் பட்டாடைகள் தடையாக இருக்கும்.

கடவுள், வணக்க முறைகளை விடத் தொண்டுகள் செய்பவர்களையே விரும்புவார்.

மனிதன் பற்றுக்கள் உடையவன். கடவுள் பற்றுக்கள் அற்றவர். இது தான் இருவருக்குமிடையில் உள்ள வித்தியாசம். மனிதன் பற்றுக்களை அகற்றினால் அவனும் கடவுளாகி விடுவான். புத்தர், யேசு, முகமதுநபி, இராமன், இராம கிருஷ்ணபரமகம்ஷர் போன்றவர்கள் மனிதராகப் பிறந்து பற்றுக்களை அகற்றியதால் கடவுளானவர்கள்.

பற்றுக்கள் தெய்வீகத் தன்மை என்ற ஒளியை நீக்கி ஆணவம் என்ற இருளை மனதுள் உண்டாக்கும். ஆணவம் உள்ளவன் அசுரனாகிவிடுவான். அதனால் அவனது மனதில் இரக்கம், கருணை, பக்தி, சாந்தம், தர்ம சிந்தனை என்பன இருக்கமாட்டாது. இதனால் அவன் பழி பாவங்களுக்கு அஞ்சாது கொடுமைகளைச் செய்வான். மனிதனின் சிந்தையுள் பற்றுக்கள் புகுந்து அவனை நெறி பிறழ்வடையச் செய்கின்றன. அதனால் ஆசை, அவா, காமம் என்பன அவனைப் பிடித்து ஆட்டும். அந்நிலை ஏற்பட்டால் தெய்வ உணர்வு உண்டாகாது. தெய்வ உணர்வு இல்லாவிட்டால் பழிபாவங்கள் எவையெவையெனத் தெரியாது.

பற்றுக்கள் இல்லாதவனின் மனதில் இரக்கம், அன்பு, கருணை, தர்மசிந்தனை போன்றன நிரம்பியிருக்கும். இவை ஒருவனின் மனதில் இருந்தால் அவன் கடவுளாகிவிடுவான்.

மனிதனைக் கடவுள் ஒழுக்கமுள்ளவனாக மாற்றி அவனை மேன்மையடையச் செய்யவே விரும்புகிறார். ஒழுக்கமான வாழ்வு மேன்மையைத் தரும். மனிதனிடமுள்ள

அசுர இயல்புகளை நீக்கித்தெய்வீக இயல்பை உண்டாக்குவது பக்தி. பக்தி என்பது அளவு கடந்த அன்பு. மனிதன் இறைவன் மீது அன்பு கொள்வானேயானால் அந்த அன்பு உயிர்கள் மீதும் உண்டாகும். இது இறை தத்துவம்.

இறை பக்தியுள்ளவன் அரியாசனத்தில் அமர்ந்திருந்தாலும் தன் நலம் கருதாது எளியவனாகவே வாழ்வான். அப்படியானவனின் மனதில் இறைவன் இருப்பான். அதுபோல அவனும் இறைவனுள் இருப்பான். தன் நலம் என்று சொல்லப்படுகின்ற சுயநலன் தான் உலகில் உள்ள பாவங்கள் அனைத்திற்கும் மூலகாரணியாகும்.

சுயநலம் கடவுளை மறைக்கும், இன்பத்தை அழிக்கும், உண்மையைப் பொய்யாக்கும், பஞ்சமா பாதகங்கள் அனைத்தையும் செய்விக்கும். ஒருவன் சுயநலன் அற்றவனாக வாழத் தொடங்கினால், அதுதான் கடவுளை அடைவதற்கான முதற்படியாகும். துன்பம் பற்றுக்களால் உண்டாகிறது. அதைத்தவிரத் துன்பம் விளைவதற்கு வேறு எந்தக் காரணமும் இல்லை. ஆசை கூடக் கூடத் துன்பம் அதிகரிக்கும். துன்பம் அதிகரித்தால் பாவம் செய்யத் தோன்றும். பாவங்கள் இறைவனை நெருங்கவிடாது தடுக்கும். நீ எதை நினைக்கிறாயோ அதுவாவாய். கடவுளை நினைத்தால் கடவுளாவாய், பற்றுக்களை நினைத்தால் பாவியாவாய். நல்லதும் கெட்டதும் மனதுக்குள்ளேயே உள்ளது. நல்லவற்றை விலக்கினால் தீராத துன்பம் உண்டாகும். தீயவற்றை விலக்கினால் நீங்காத இன்பம் உண்டாகும். எதை வேண்டுமோ அதை நீ பெற்றுக் கொள்ளலாம்.

ஒவ்வொருவரிலும் உள்ள தூய்மையான இறைபக்தி தான் கடவுள் என்ற ஒருவர் இருக்கிறார் என்பதை உணர்ந்து

கொள்ள வைக்கிறது. இந்த உணர்வுதான் ஒழுக்கத்தை உண்டுபண்ணிச் சமய வாழ்வு வாழச் செய்கிறது. சமய வாழ்வு வாழ்பவனால் சாதிக்க இயலாத காரியம் எதுவும் இருக்க மாட்டாது. அப்படி இல்லாவிட்டால் அவன் முழுமையான சமய வாழ்வு வாழவில்லை என்றே கொள்ளல் வேண்டும்.

ஒவ்வொரு உயிரின் உடலும் ஆலயமாகும். அந்த ஆலயத்துள் கடவுள் வீற்றிருக்கிறார் என்பதை ஒவ்வொரு மனிதர்களும் உணர்ந்து கொள்ளல் வேண்டும். அப்படி உணர்ந்து கொண்டால் பாவங்கள் உண்டாக வாய்ப்பே இராது. மற்றய உயிர்களைக் கண்டால் மனதில் எல்லையற்ற மகிழ்ச்சி உண்டாகுதல் வேண்டும். மகிழ்ச்சியுண்டாகாவிட்டால் கடவுள் மீது பற்று இல்லை என்று உணர்ந்து கொள்ளல் வேண்டும். கடவுளின் மீது பக்தியுள்ளவன் எப்பொழுதும் மகிழ்வுடனும் உற்சாகத்துடனும் மனநிறைவுடனும் இருப்பான். இதற்குக் காரணம் தனது துன்பங்கள் யாவற்றையும் அவன் இறைவனிடம் அர்ப்பணித்திருப்பான். இறை சிந்தனை மகிழ்வையும், நிறைவையும் கொடுத்து அவனது துன்ப துயரங்களையும் நோய்களையும் அகற்றும். இதனாற்றான் அவன் மகிழ்ச்சியுள்ளவனாக இருப்பான்.

பெரும் பெரும் மகான்களின் ஆற்றல் அவர்களின் மனதிலேயே இருந்ததாக வரலாறு கூறுகிறது. மன உறுதி கடவுள் வழிபாட்டால் உண்டாகும். அந்த உறுதி ஆற்றலை வளர்க்கும். அந்த ஆற்றல் தீர்க்கதரிசனத்தைக் கொடுத்து நினைத்தவை யாவற்றையும் முடித்து வைக்கும். நினைத்த செயல்களைச் செய்து முடிக்கும் தன்மையை ஒவ்வொருவரும் தமக்குள் உருவாக்கிக் கொள்ளல் வேண்டும். உலகில் வாழ்ந்த மெஞ்ஞானிகள், விஞ்ஞானிகள், சாதனையாளர்களின்

வரலாற்றை எடுத்துப் பார்த்தால், அவர்களெல்லோரும் தமது ஆற்றலைத் தாமே உருவாக்கி வளர்த்த வரலாற்றை அறிந்து கொள்ளலாம். ஒவ்வொருவரிடமும் உள்ள நம்பிக்கைதான் செயலாகி வெற்றியைத் தருகிறது. இந்த நம்பிக்கையை ஒழுக்கமுள்ளதாக்குவது அவர்களிடமுள்ள தெய்வீகத்தன்மை. தெய்வீகத்தன்மை இல்லாத முயற்சியில் ஒழுக்கம் இராது. அதனால் அம் முயற்சி வெற்றியை அளிக்காது. சிலர் தம்மிடமுள்ள ஆற்றலைப் புரிந்து கொள்வதில்லை. சிலர் தமது ஆற்றல் பெரியது என்று நினைக்கிறார்கள். இந்த இரண்டும் தோல்வியையே தரும்.

கடவுள் எல்லோரையும் ஒரு மாதிரியே படைத்தார். குடும்பமும், சூழ்நிலையும் தான் அவர்களை உருவாக்குகிறது. என்னால் சாதிக்க முடியாதது எதுவுமில்லை என்று நினைப்பவன் சாதனையாளனாகிறான். என்னால் முடியாது என்று நினைப்பவன் அழிந்து போகிறான். இதை வேதங்களும் உபநிடதங்களும் அறுதியிட்டுக் கூறுகின்றன.

கடவுள் இல்லாத இடமே இல்லை. அவர் உன்னுள்ளும் இருக்கிறார். உன்னோடு இருப்பவர்களுள்ளும் இருக்கிறார். அதனால் நீயும் மகிழ்வுடன் இருந்து உன்னுடன் பழகுபவர்களையும் மகிழ்வித்தால் நீ கோயிலுக்குச் செல்லத் தேவையில்லை. உன்னுள் இருக்கும் கடவுள் வெளிப்பட்டு உனக்கும் மற்றவர்களுக்கும் அனுக்கிரகம் செய்வார். உன்னையும் மதித்து, மற்றவர்களையும் மதித்து நடந்தால் பெரியதொரு யாகம் செய்த பயன் உனக்கு உண்டாகும்.

மனிதன் உலக இன்பங்கள் அனைத்தையும் அனுபவிக்க வேண்டும் என்பதே மதத்தின் நோக்கமாகும். மறு உலகம் என்று நாம் கேள்விப் பட்டிருக்கிறோமே தவிர அதை

யாரும் கண்டதில்லை. கடவுள் இருக்கிறார், அவர் எமக்கு உதவுவார் என்று நம்பிக்கையுடன் நினைப்பவர்கள் கடவுளைக் காண்கிறார்கள், அவருடன் உரையாடுகிறார்கள், தமக்குத் தேவையானவற்றைக் கேட்டுப் பெற்றுக் கொள்கிறார்கள். இவர்கள் கடவுளுக்குள் இருப்பவர்கள். இவர்கள் தான் சொர்க்கத்தை அனுபவிப்பவர்கள்.

கடவுளை நம்பாதவர்கள் எப்பொழுதும் துன்பத்தையே அனுபவிப்பார்கள், நிம்மதியின்றித் தவிப்பார்கள். இவர்கள் தன்னையும் நம்பமாட்டார்கள், பிறரையும் நம்பமாட்டார்கள். இதனால் இவர்கள் செய்யும் செயல்கள் பெரும்பாலும் தோல்வியில் முடியும். இதனால் இவர்கள் மகிழ்வுடன் இருக்க மாட்டார்கள். தம்மைச் சேர்ந்தவர்களையும் மகிழ்வாக இருக்க விடமாட்டார்கள். இவர்கள் எப்பொழுதும் துன்பத்தை அனுபவிப்பதால் இவர்கள் வீட்டுக்குள்ளேயே நரகத்தை அனுபவிப்பவர்களாக இருப்பார்கள்.

சமயங்கள் கூறுவது ஒழுக்கத்தைப் பற்றியும், இன்பமாக வாழும் முறைகளைப் பற்றியும் தான். சமயவாழ்வு என்பது சமய அநுட்டானங்கள் அல்ல. சமயங்கள் கூறும் ஒழுக்கக் கோட்பாடுகளைப் பின்பற்றி அதன்படி வாழ்வதே. பாடசாலைக்குச் செல்லாத பலர் ஞானிகளாக இருந்திருக்கிறார்கள், விஞ்ஞானிகளாக இருந்து பல அரிய செயல்களைச் செய்திருக்கிறார்கள். பெரும்பெரும் கோடீஸ்வரராக இருக்கிறார்கள். கல்வியின் மூலம் அறிவைத் தேட வேண்டும். தேடிய அறிவின் மூலம் பணத்தைத் தேட வேண்டும். சேர்க்கின்ற பணத்தை அறவழியில் சேர்த்தால் அது சேர்ப்பவனையும், சமூகத்தையும் நல்லபடி வாழவைக்கும். சமயக் கோட்பாடுகளில் நம்பிக்கை வைத்து அதன்படி

வாழ்வோருக்கு கடவுள் எவ்வேளையிலும் உதவி செய்து கொண்டேயிருப்பார். அதனால் அவர்கள் எந்நாளும் சொர்க்கத்திலேயே வாழ்ந்து கொண்டிருப்பார்கள். கடவுளில் நம்பிக்கை வைத்து எந்நாளும் இன்பமாக வாழ எல்லோரும் முயல வேண்டும். சமய விதிகளைப் பேணிக்கொண்டு ஒழுக்கமில்லாது வாழ்வோர் ஒருபோதும் மகிழ்வாக வாழ்வதில்லை. அவர்கள் வீபூதியை உடல் முழுவதும் பூசிக்கொண்டு மதத்திற்கு விரோதமான செயல்களைச் செய்வதால் துன்பத்துடனேயே வாழ்கின்றனர். இவர்களைக் காண்போர் அவர்களிடம் உள்ள வசதிகளை மட்டும் கருத்திற் கொண்டு, அவர்களின் ஆடம்பர வாழ்வை நினைத்துப் பொறாமைப்பட்டுத் தமது வாழ்வையும் கெடுக்கிறார்கள். எந்தவொரு சிந்தனையும் இன்றி நம்பிக்கையுடன் கடவுளை நினைத்துக் கொண்டு ஒழுக்கமாக வாழ்பவர்களுக்கு எந்தக் குறையும் உண்டாகக் கடவுள் விடமாட்டார். இதை உறுதியாக நம்புங்கள். கடவுள் அடியவர்களுக்கு அடியவர். அதனால் அடியவர்கள் நினைத்தவற்றை யெல்லாம் கடவுள் நிறைவேற்றுவார். அதற்காக நாம் உண்ணா நோன்புகள் அனுஷ்டிக்கத் தேவையில்லை.

பகவத்கீதையின் தியானயோகத்தின் பதினாறாவது சுலோகம் இவ்வாறு கூறுகிறது.

'அர்ச்சுனா, அளவுக்கதிகமாக உண்பவனுக்கு யோகமில்லை. அறவே உண்ணாதவனுக்கும் யோகமில்லை. மிகைபட உறங்குபவனுக்கும் மிகைபட விழித்திருப்பவனுக்கும் யோகம் இல்லை'

சாதாரணமாக வணங்குபவன் இறைவனின் அன்பைப் பெறுவான்

தியான யோகத்தின் நாற்பத்தேழாவது சுலோகம் பின்வருமாறு கூறுகிறது.

‘யார் சிரத்தையுடன் மனதை என்பால் வைத்து என்னைப் பூசிக்கிறானோ அவன் யோகிகள் எல்லாருள்ளும் மேலானவன்’

அÑரப்ரஹ்ம யோகத்தின் நான்காவது சுலோகம் இவ்வாறு கூறுகிறது.

‘பார்த்தா, வேறு எண்ணங்கள் எதுவுமின்றி யார் என்னை இடையறாது வணங்குகிறானோ, அவனுக்கு நான் எளிதில் அகப்படுவேன்’.

ராஜவித்தியா ராஜகுஷ்ய யோகத்தின் இருபத்திரண்டாவது சுலோகம் இவ்வாறு கூறுகிறது.

‘என்னை அன்னியனாகக் கருதாது எந்நேரமும் என்னையே நினைத்து என்னை உபாசிப்பவனுக்கு நான் நித்திய இன்பத்தைக் கொடுப்பேன்’

இருபத்தாறாவது சுலோகம் இவ்வாறு கூறுகிறது.

‘யார் அன்புடன் எனக்கு இலை, மலர், கனி அல்லது நீரை பக்தியோடு படைக்கிறானோ, அந்த அன்பு கொண்டவனின் அன்பளிப்பை நான் விருப்புடன் அருந்துவேன்’

இருபத்தொன்பதாவது சுலோகம் இவ்வாறு கூறுகிறது.

‘நான் எல்லா உயிர்களிடத்தும் சமமாக இருக்கிறேன். எனக்குப் பகைவனுமில்லை, நண்பனுமில்லை, பக்தியோடு

பூசிப்பவர்கள் என்னோடு இருக்கிறார்கள். நானும் அவர்களுள் இருக்கிறேன்.'

முப்பதாவது சுலோகம் இவ்வாறு கூறுகிறது.

'தீயசெயல்களைச் செய்தவனும் வேறு ஒன்றையும் எண்ணாது என்னைப் பூசிப்பானானால், அவன் சாது என்று கருதப்படல் வேண்டும், ஏனென்றால் அவன் நன்கு தீர்மானித்தவனாவான்'

தீயவர்கள் கடவுளை நினைக்க ஆரம்பித்தால் அவர்கள் திருந்த ஆரம்பித்தவர்களாவர். வெளிச்சமுள்ள இடத்தில் இருள் இருக்க முடியாது. அதுபோல இறைவனது சிந்தனைகள் உள்ள மனதில் தீய எண்ணங்கள் இருக்கமாட்டாது. அவன் படிப்படியாக அறவானாகி விடுவான். கடவுளின் நாமத்தை மனதில் இருத்துபவர்கள் நாசமடைவதில்லை.

முப்பத்திரண்டாவது சுலோகம் இவ்வாறு கூறுகிறது.

'கீழான பிறவிகளைப் பெற்றோரும் என்னைப் பூசித்தால் நிச்சயமாகப் பரகதியடைவார்கள்'

முப்பத்துநான்காவது சுலோகம் இவ்வாறு கூறுகிறது.

'மனதை என்னிடத்தில் வைத்து என்னைப் பக்தியுடன் வணங்குபவர்கள் என்னை அடைவார்கள்'

இறைவன் அடியவர்களுக்கு இன்பத்தைக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தைக் கொண்டவன். அதனால் மக்கள் தமது குலதெய்வங்களை வணங்கித் தமக்குத் தேவையானவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்.

இறைவன் மானிட உருக் கொண்டு வந்து மக்களின் குறைகளைத் தீர்த்த வரலாற்றை இதிகாச புராணங்களில் நாம் கண்டு கொள்ளலாம்.

ரிஷிகளும் முனிவர்களும் இறைவனின் அருளைப் பெற்று மக்களின் துயரங்களைப் போக்குவதற்காகப் பல மந்திரங்களையும் தேவார திருவாசகங்களையும் உருவாக்கியுள்ளார்கள். அவற்றைப் படித்தால் மக்களின் குறைகள் தீரும். உதாரணத்திற்குச் சில மந்திரங்களைத் தருகின்றேன்.

**திருமணம் நடைபெற**

"சர்வ மங்கள மாங்கல்யே சிவே
சர்வார்த்த சாதகே! சரண்யே
த்ரயம்பகே தேவி நாராயணீ நமோஸ்துதே"

**சுகப்பிரசவம் ஆக**

"ஹே, சங்கர ஸ்மரஹர ப்ரமதா த நாத
மன்னாத ஸாம்ப சசிடே ஹர த்ரிசூலின்
சம்போ சுகப்ரசவக்ருத் பவ மே தயாளோ
ஸ்ரீ மாத்ரு பூத சிவ பாலயமாம் நமஸ்தே"

**ஆயுள் பலம் பெற**

"நமஸ்தோ அஸ்து பகவான் விச்வேஸ் வராய
மஹாதேவாய
த்ரயம்பகாய – த்ரிபராந்த காய த்ரிகாக்னி காலாய
காலாக்னீ
ருத்ராய நீலகண்டாய ம்ருத்யுஞ் ஜாயாய ஸர்வேஸ்ராய
ஸதா சிவாய ஸ்ரீமன் மஹா தேவாய நம"

**கெட்ட கனவுகள் வராதிருக்க**

"துஸ்ஸ்வப்ன துஸ்ஸகுன துர்கதி தௌர்மனஸ்ய
துர்பிNதுர்வ் யஸனதுஸ்ஸ துர்யஸாம்ஸி
உப்பாததா பவிஷபீதிமஸத் க்ரஹார்த்திம்
வ்யாதீம்ஸ்ச நாஸயது மே ஜகதாமதீஸ"

**புத்திர பாக்கியம் பெற**

"நிபாயயந்தீ ஸ்தனமங்கம் த்வாம்
விலோகயந்தீ வதனம் ஹஸந்தீ!
தஸாம் யஸோதா சுதமான்ந பேஜே
தாத்ருஸ : பாஹி ஹரே கதான்மாம்!!"

ஒவ்வொருவரும் தாம் தாம் வணங்கும் தெய்வங்களுக்குரிய தோத்திரங்களைப் பாடினால் கஷ்டம் நீங்கும்.

விநாயகரைத் தொழுவோர் ஔவையாரின் விநாயகர் அகவலைப் படிக்கலாம். அத்துடன் விநாயகரது நாமங்களை 108 முறை சொல்லலாம். அல்லது கணபதி மந்திரத்தை ஓதலாம்.

**கணபதி மந்திரம்**

"ஓம் நமோ வ்ராத பதயே
நமோ கணபதயே நம
ப்ரமதபயே நமஸ்தேஸ்து
லம்போதராய
ஏகதந்தாய விக்னநிநாசினே
சிவ சுதாய"
வரத மூர்த்தயே நமோ நம ஸ்வாஹா

சிவனைத் தொழுவோர் கோளறு பதிகத்தைப் படிக்கலாம். அல்லது சிவனது நாமத்தை 108 முறை ஓதலாம்.

முருகனை வணங்குவோர் கந்தர் சஷ்டிக் கவசத்தை ஓதலாம். முருக நாமத்தை 108 முறை உச்சரிக்கலாம்.

பெண் தெய்வங்கள் தான் சக்தி மிக்கன. பெண் தெய்வங்களுள் காளி வரமளிப்பதில் வல்லவள் என்று இராமகிருஷ்ண பரமகம்சரும், கம்பரும், பாரதியாரும் கூறியுள்ளனர்.

**காளி மந்திரம்**

''ஓம் க்ரீம் க்ரீம் ஹூம் ஹூம் ஹ்ரீம் ஹ்ரீம் தNிணே

காளிதே க்ரீம் க்ரீம் ஹூம் ஹூம் ஹ்ரீம் ஹ்ரீம் ஸ்வாஹா

இலட்சுமி மந்திரத்தை ஓதினால் செல்வம் செல்வாக்குப் பெருகும்.

''ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் ஐம்

ஞானாய கமல தாரிண்யை

சக்த்யை சிம்ம வாஹின்யை

பலாயை ஸ்வாஹா''

ஆஞ்சநேயரை வழிபடுவோர் ஆஞ்சநேய மந்திரத்தை ஓதலாம்.

**ஆஞ்சநேய மந்திரம்**

''புத்திர் பலம் யசோ தைர்யம்

நிர்பயத்வரோகதா

அஜாட்யம் வாக்படுத்வம்ச

ஹனுமத் மரணாத்பவேத்''

அடியவர்கள் மனமுருகித் துதித்தால் கடவுள் உடனே வந்து துதிப்பவர்களின் துயரத்தைத் தீர்ப்பார்.

ஆன்மா

இந்து சமயங்கள் கடவுளுக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை ஆன்மாவுக்கும் கொடுத்துள்ளன. கடவுள் ஒருபோதும் மாறுபாடு அடையாதவர். ஆனால் ஆன்மாக்கள் கணத்திற்குக் கணம் ஆயிரக்கணக்கான மாற்றத்துக்கு உள்ளாக்கப்படும்.

இந்த மாற்றம் பற்றுக்களால் உண்டாகும். இப் பற்றுக்களால் ஆன்மாவானது நான்கு வகையான தோற்றங்களையும், ஏழு வகையான பிறப்புக்களையும் அடையும் என்று இந்து தத்துவ நூல்கள் கூறுகின்றன. மாணிக்கவாசக சுவாமிகள் இது பற்றி விபரமாகச் சிவபுராணத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அண்டசம், சுவேதசம், உற்பிச்சம், சராயுசம் என்பன ஆன்மா எடுக்கும் நால்வகைத் தோற்றங்களாகும்.

அண்டசம் என்பது முட்டையில் இருந்து தோன்றுவன.

சுவேதசம் என்பது வியர்வை, அழுக்குகளில் இருந்து தோன்றுவன.

உற்பிச்சம் என்பது வித்து, வேர், கிழங்கு, கிளைகளில் இருந்து தோன்றுவன.

சராயுசம் என்பது கருப்பைகளில் இருந்து பிறப்பன.

இந்த நான்கு வகையில் தோன்றும் உயிரினங்கள் தேவர், மனிதர், விலங்குகள், பறவைகள், ஊர்வன, நீர் வாழ்வன, தாவரங்கள் என்ற ஏழுவகைப் பிறப்பை மாறி மாறிப் பெறும். இவ் ஏழு பிறப்புக்களில் எண்பத்துநான்கு நூறாயிரம் யோனி பேதத்தில் ஆன்மாக்கள் பிறக்குமெனச் சைவசித்தாந்தம் கூறுகிறது.

இவ் ஏழு வகையாகப் பிறக்கும் உயிர்கள், ஓரறிவுயிர், ஈரறிவுயிர், மூவறியுயிர், நாலறிவுயிர், ஐயறிவுயிர், ஆறறிவுயிர் என ஆறுவகைப் பேதங்களுக்குட்பட்டன.

புற்களும் மரங்களும் பரிசத்தை மட்டும் அறிந்து கொள்ளும் ஓரறிவுள்ள உயிர்களாகும்.

சிப்பியும், சங்கும் பரிசத்தையும், இரதத்தையும் அறியும். இவை ஈரறிவுடைய உயிர்கள். இரதம் என்பது சுவையைக் குறிக்கும்.

கறையானும் எறும்பும் பரிசத்தையும், இரதத்தையும், கந்தத்தையும் அறியும் மூவறிவுள்ள உயிர்கள். கந்தம் என்பது மணம்.

தும்பியும், வண்டும் பரிசத்தையும். இரதத்தையும், கந்தத்தையும், உருவத்தையும் அறியம் தன்மையுள்ள நாலறிவுள்ள உயிர்கள்

விலங்குகளும் பறவைகளும் பரிசத்தையும், இரதத்தையும், கந்தத்தையும், உருவத்தையும், சத்தத்தையும் அறியும் தன்மையுள்ள ஐயறிவுள்ள உயிர்கள்.

தேவர்களும், மனிதர்களும், அசுரர்களும் பரிசத்தையும், இரதத்தையும், கந்தத்தையும், சத்தத்தையும், உருவத்தையும் பகுத்து அறியும் தன்மையையும் கொண்ட ஆறறிவுள்ள உயிர்கள்.

உயிர்கள் பூமியில் வாழும் போது வாழ்ந்த வாழ்க்கையின் பயனைப் பிறவிகள் தோறும் அநுபவிக்கும். அப்பயன் முழுவதையும் அநுபவித்து முடிக்காத உயிர்கள் மீண்டும் மீண்டும் பிறப்பெடுத்து எஞ்சிய பயனை அநுபவிக்கும்.

மனிதப் பிறப்பு கிடைத்தற்கரியது. அதனால் மனிதராகப் பிறக்கும் உயிர்கள் தமக்குக் கிடைத்த பிறப்பை தகுந்த

முறையிற் பயன்படுத்தி பிறப்பில்லாத நிலையை அடைதல் வேண்டும்.

மனிதனே மேலான பிறவி. மனிதன் தனது பிறப்பில் செய்யக்கூடிய நற்செயல்கள் யாவற்றையும் செய்து புகழுடன் வாழுதல் வேண்டும். மனிதன் இறந்த பின்பும் வாழ்வது அவன் செய்த நற்செயல்களால் உண்டான புகழே. புகழ் காலங்கடந்தும் வாழும் தன்மையது. அது உலகம் உள்ளவரை நிலைத்து நிற்கும் என்பதால் மனிதர்கள் புகழ் உண்டாகும் படியான செயல்களைச் செய்தல் வேண்டும்.

ஒவ்வொரு மனிதனும் தான் வாழும் வாழ்க்கைக்குத் தானே பொறுப்பானவனாக இருக்கிறான். தான் எப்படியெல்லாம் வாழ வேண்டுமென்று திட்டமிட்டு அதற்கமையத் தனது வாழ்க்கையை அமைத்துக் கொள்பவன், தான் நினைத்தபடி வாழ்கிறான். ஒருவனது வாழ்க்கை முன்பு அவன் வாழ்ந்த வாழ்க்கையால் தான் உருவானது என்றால், எதிர்காலத்தில் அவன் எப்படியெல்லாம் வாழ வேண்டுமென்று ஆசைப்படுகிறானோ அப்படியெல்லாம் வாழ அவன் தயாராகலா மென்பதை உணர்ந்து கொள்வான். இதை உணர்ந்து கொண்டவன் தான் இந்த உலகத்தில் மேலான மனிதன். அவன் எல்லா மனிதர்களை விடவும், தேவர்களை விடவும் உயர்ந்தவனாகி விடுவான்.

இந்த உலகம் சகல இன்பங்களையும் கொண்ட மாய மாளிகை. இங்கு பிறந்தவர்கள் மாயங்களை உணர்ந்து அதை விலக்கி இன்பங்களைப் பெறல் வேண்டும்.

இன்பத்தைத் தரும் சகல அம்சங்களும் ஒவ்வொரு ஆன்மாக்குள்ளும் கடவுளால் புதைக்கப்பட்டுள்ளது. இதை உணர்பவர்கள் தமது ஆத்மாக்குள் இருப்பவை யாவற்றையும்

நல்ல முறையில் வெளிக்கொணர்ந்து பயன்படுத்தித் தாமும் இன்புற்று உலகையும் இன்புறச் செய்வர். ஒவ்வொரு ஆன்மாவும் தன்னுடைய இன்பத்திற்காகத் தானே செயலாற்ற வேண்டும். இதை உணரும் மனிதர்கள் நாட்டின் தலைவர்களாவார்கள். ஒவ்வொருவரும் இதை உணர்ந்து கொண்டால் நாடு உயர்வடையும்.

ஒவ்வொரு ஆத்மாவும் ஆற்றல் மிகுந்தது. அதை உணர்ந்து தன்னுள் இருக்கும் ஆற்றல் வெளிப்படும் வகையில் செயல்களைச் செய்தல் வேண்டும். தன் கை தான் தனக்கு உதவியே தவிர பிறர்வந்து உதவ மாட்டார்கள்.

எந்த ஆத்மா தன்னைத்தான் புரிந்து கொள்கிறதோ, அந்த ஆத்மா தனக்கு வரும் கேடுகள் தன்னால் தான் தனக்கு வருகின்றன என்பதைப் புரிந்து கொள்ளும். அதனால் அந்த ஆத்மா தனக்கு வந்த கேடுகளுக்குப் பொறுப்பாகத் தன்னை நினைக்குமே தவிரப் பிறரையோ, கடவுளையோ, விதியையோ நினைக்காது. நாம் வலிமையுடன் இருந்தால் பிறரால் எமக்குத் தீமைகள் செய்ய முடியாது. கடவுள் விருப்பு வெறுப்பு அற்றவர். அதனால் அவர் எவருக்கும் துன்பம் செய்ய மாட்டார். விதி என்பது நாம் செய்தவினைகள். தன் ஆற்றல் உணர்ந்த ஆத்மா தன்னைத் தான் செப்பனிட்டுத்தன் வாழ்வைச் சீரமைத்துக் கொள்ளும்.

ஆத்மா செய்யும் செயல்கள் தான் உடலுக்குப் பலனாக வந்து அமையும். வீதியில் நிற்கும் நாய்க்குக் கல்லால் எறிந்தால், அது காத்திருந்து தருணம் வரும் போது கடிக்கும். அது போல ஒரு பயன் தரும் மரத்தை நட்டு அதை நல்ல முறையில் பராமரித்தால் நல்ல பயன் கிடைக்கும். முட் செடியை வளர்த்தால் உடலில் குத்தும். அதனால் வாழ்வு

வளம் பெறவேண்டும் என்று நினைப்பவர்கள் எல்லா உயிர்கள் மீதும் அன்பு வைத்திருப்பார்கள்.

வல்லமை உள்ள ஆன்மா, தனது எதிர்காலத்தைத் தானே உருவாக்கும். அது சந்தர்ப்ப சூழ் நிலைகளை உருவாக்கி, அதை நல்ல முறையில் பயன்படுத்தித் தனது காரியத்தை நிறைவு செய்து மகிழ்ந்திருக்கும்.

கற்ற ஒருவன் தனது படிப்புக்குத் தகுந்த வேலை கிடைக்காமையால் சிற்றூழியனாகச் சேர்ந்தான். அவனது மேலதிகாரி தனது பிள்ளைகளுக்கு வீட்டிற்கு வந்து கணிதபாடம் கற்பிக்க ஓர் ஆசிரியரைத் தேடினார். அவன் தான் கணிதத்தில் அதிவிஷேட சித்தி பெற்றதாகக் கூறித் தானே அவரது பிள்ளைகளுக்குக் கணிதம் கற்பித்தான். பிள்ளைகள் விருப்புடன் கற்றனர். அவன் பிள்ளைகளுடனும் அதிகாரியின் குடும்பத்தவர்களுடனும் அன்பாகப் பழகினான். அவன் இல்லாமல் அந்த உயர் அதிகாரியின் வீட்டில் எதுவும் நடக்காது என்ற நிலை உருவானது.

சில மாதங்கள் செல்ல அத் திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவர் ஓய்வு பெற்றார். அந்த இடத்திற்கு மேலதிகாரியின் பிள்ளைகளும் குடும்பத்தினரும் அவனைச் சிபாரிசு செய்தனர். மேலதிகாரி தனது திணைக்களத் தலைவருக்கு அவனைச் சிபாரிசு செய்தார்.

சில மாதங்களின் பின் அவன் அப்பதவிக்கு நியமிக்கப்பட்டான். சில வருடங்களின் பின் அவனது திறமையை உணர்ந்த அத்திணைக்களத்தின் அமைச்சில் உள்ள உயர் அதிகாரி அவனை அவ் அமைச்சின் செயலாளராக நியமித்தார்.

ஒவ்வொருவரும் தமது எதிர்காலத்தைத் தாமே உருவாக்கிக் கொள்ளல் வேண்டும். அதற்கான ஆற்றல்கள் யாவும் ஒவ்வொருவரின் உடலில் இருக்கும் ஆன்மாவிடம் உள்ளது. இதை உணராத பெரும் பான்மையான மனிதர்கள் எந்தவிதமான சிந்தனைகளுமின்றி மிருகங்களைப் போலவே வாழ்கிறார்கள். இதனால் தான் இப்புவியில் கொடூரங்கள் நடைபெறுகின்றன. துன்பங்களும், துயரங்களும், பஞ்சமும், பசியும் வாட்டுகின்றது.

மிருகங்கள் இயற்கையை உணர்ந்து அதற்கேற்ப நடந்து கொள்கின்றன. அவை இயற்கையை அவதானித்துத் தமக்குத் தேவையானவற்றைப் பெற்றுக் கொள்கின்றன. ஆனால் மனிதர்களுள் பெரும்பான்மையானவர்கள் இயற்கையைப் புரிந்து கொள்வதே இல்லை. இதனால் தான் அவர்கள் துன்பப்படுகின்றனர். இயற்கையைப் புரிந்து கொள்ளாமையாற்றான் அனர்த்தங்களின் போது மனிதர்கள் துன்பப் படுகிறார்கள். இயற்கையை மாற்ற முடியாது. ஆனால் அதை அநுசரிப்பதன் மூலம் இயற்கையை வெல்ல முடியும். அப்படி அநுசரித்துச் செல்பவர்கள் தான் மேலான அறிவை உடையவர்களாக விளங்குகின்றனர்.

ஆன்மா சுத்தமாக இருந்தால், அந்த ஆன்மா பழகும் அத்தனை பேரும் சுத்தமாக இருப்பார்கள். ஆன்மா பரி பூரணமாக இருந்தால் உலகும் பரிபூரணமாக இருக்கும். ஆன்மா தூய்மையானதாக இருந்தால் உலகும் தூய்மையானதாக இருக்கும்.

துன்பங்களுக்குத் தப்ப முடியாது. பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது என்று ஓர் ஆன்மா நினைக்குமானால், அது

வாழ்க்கையில் அனைத்து விடயங்களிலும் தோல்வியையே தழுவிக் கொள்ளும்.

வலிமை மிக்க ஆன்மாக்கள் துன்பங்கள், பிரச்சினைகள், சிக்கல்களிலிருந்து தப்பிச் செல்லாது அவற்றை உறுதியுடன் வரவேற்று இன்பங்களாக மாற்றிக் கொள்ளும்.

மரத்தை நட்டால் பயன்தரும். நல்லபடி கற்றால் உயர்ந்த தொழில் கிடைக்கும். முதலீடு செய்தால் இலாபம் கிடைக்கும். இது போலச் செயல்கள் பலனைக் கொடுப்பவை. அவை தீய செயலாக இருந்தால் தீமையையும், நல்ல செயலாக இருந்தால் நன்மையையும் தரும். இந்தப் பயன்கள் தான் வாழ்க்கையை நிர்ணயிக்கின்றன. அதனால் ஆன்மா தனக்குத் தானே தலைவனாகிறது. அது எதற்கும் கட்டுப்பட்டதல்ல. ஆன்மா முழுமையானது, சுதந்திரம் பெற்றது

வாழ்க்கை எப்பொழுதும் மாறிக் கொண்டே இருக்கும். அதற்கேற்ப ஆன்மா தன்னைத்தானே மாற்றிக் கொள்ளல் வேண்டும். தனது சொந்த அலுவல்களை மட்டும் கவனித்துக் கொண்டிருக்கும் ஆன்மாவால் ஒரு போதும் இன்பத்தைப் பெற முடியாது. அது எடுக்கும் பிறவிகள் தோறும் துன்பப்பட்டுக் கொண்டே இருக்கும். ஆன்மாவுக்கு வேண்டிய அனைத்தையும் இறைவன் படைத்துள்ளான். அவற்றை ஆண்டவன் கொடுத்த அறிவின் மூலம் ஆன்மா பயன்படுத்தல் வேண்டும். பகுத்தறிவைப் பயன்படுத்தி ஒவ்வொருவரும் தமது குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்ளல் வேண்டும். நிறைவேற்றக் கூடிய சக்திகளுடனேயே ஒவ்வொரு ஆன்மாவும் படைக்கப்பட்டது. இதை உணராதவர்கள் தான் துன்பப்படுகிறார்கள். தவறான செயல்களால் தான் தோல்விகளும் துன்பங்களும் உண்டாகின்றன. தோல்விகள்

பல்வேறு விதமான பாடங்களைக் கற்பிக்கும். பகுத்தறிவின் மூலம் தோல்விகள் ஏன் ஏற்பட்டதென்று ஆராய்ந்து தெரிந்து கொள்ளும் ஆன்மா பின்பு ஒருபோதும் தோல்வியடைய மாட்டாது. தோல்வியடைந்த ஆன்மா பலவீனப்பட்டு செயல்களைக் கைவிட்டு விடக்கூடாது. நட்டம் ஏற்பட்டாலும் அதைப் பொருட்படுத்தாது தொடர்ந்து செயல்களை செய்யும் ஆன்மா இறுதியில் வெற்றி பெறும். வெற்றி என்பது மீண்டும் மீண்டும் நம்பிக்கையுடன் செய்யும் செயல்களில் தான் தங்கியுள்ளது. எனவே மனம் தளராது மேலும் மேலும் செயல்களைச் சீர்படுத்திச் செய்தல் வேண்டும்.

இடையறாத முயற்சியின் மூலம் துன்பங்களை வெல்லலாம். மனம் பலவீனப்பட்டாலன்றி தோல்விகள் வராது என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ளல் வேண்டும். எந்த உயர்ந்த நிலையை அடையும் சக்தியும் ஆன்மாவுக்கு உண்டு. அதைப் பயன்படுத்தி ஒவ்வொருவரும் தமது தலைவிதியைத் தாமே உருவாக்கிக் கொள்ளல் வேண்டும்.

யாரும் எதற்கும் உதவாதவர்கள் அல்லர். பத்து வருடங்களுக்கு முன் பரம ஏழையாக வாழ்ந்த பலர் இன்று கோடீஸ்வரராகியுள்ளனர்.

என்னுடன் கற்கும் போது நான் கற்க முடியாதவர்கள் என்று பரிகசித்த பலர் இன்று என்னிலும் மேலான பதவிகளை வகிக்கிறார்கள்.

ஆன்மாவைப் புரிந்து கொண்டவர்களே வாழத் தகுதி பெற்றவர்கள். எனவே ஒவ்வொருவரும் தத்தமது ஆன்மாவைப் புரிந்து கொள்ளல் வேண்டும்.

மனம்

மனிதன் ஐம்பூதங்களினால் ஆக்கப்பட்டவன் என்று சைவசித்தாந்தம் கூறுகிறது.

ஐம்பூதங்களிலான மனிதனை ஆட்டிப்படைப்பது ஐம்பொறிகள்.

ஐம்பொறிகளையும் கட்டுப்படுத்தி வைத்திருப்பது மனம்.

மனத்தின் போக்கிற்கேற்ப ஐம்பொறிகளும் செயற்படும்.

ஐம் பொறிகளும் தத்தமக்குரிய உணர்வுகளை மனத்தின் மூலமே பெறுகின்றன.

உடல் தீண்டப்பட்டதும் மனம் தனது உணர்வுகளை வெளிப்படுத்தும், வெளிப்படுத்தாதும் இருக்கும்.

ஒரு பெண் உடலைத் தீண்டினால் நல்ல மனம் அவளைத் தாயாக, சகோதரியாக நினைக்கும். தீயமனம் அவளை அடைய நினைக்கும்.

கண்களும் இத்தன்மையைக் கொண்டனவாகவே இருக்கின்றன.

மனவலிமை என்ற அங்குசத்தால் ஐம்பொறிகளையும் அடக்கியவர்களை ஞானிகள் என்றும் துறவிகள் என்றும் சொல்வர்.

சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐந்து வகைத் தன்மைகளையும் ஆராய்ந்து அறிந்து அதற்கேற்ப நடந்து கொள்பவனை உலகம் போற்றும்.

இவ்வாறு வள்ளுவர் கூறுகிறார்.

மனதின் ஆற்றல்களை அளவிட முடியாது.மனதின் ஆற்றல்களை நல்ல வழியில் பிரயோகிப்பவன் தானும்

மேன்மையடைந்து சமூகத்தையும் மேன்மையடையச் செய்கிறான். இதனால் உலகம் மேன்மை அடைகிறது.

மனதின் ஆற்றலைத் தீயவழியில் பிரயோகிப்பவன் தானும் துன்பத்தை அனுபவித்து தன்னைச் சார்ந்தவர்களையும் துன்பத்திற்குள்ளாக்குகிறான்.

மனம் எல்லைகள் அற்றது. கட்டுப்பாடுகள் இல்லாதது. இதனால் மனிதன் எல்லைகளை அமைத்துக் கட்டுப்படுத்தி அதன் மூலம் பெறக்கூடிய நன்மைகள் அனைத்தையும் பெற்றுக்கொள்ளக் கற்றுக்கொள்ளல் வேண்டும்.

மனத்தைக் காமதேனு என்றுஞானிகள் கூறுவார்கள். நல்ல மனம் காமதேனுவைப் போலச் செயற்பட்டு விரும்பிய நன்மைகளை எல்லாம் தரும்.

தீயமனம் சாத்தானைப் போலச் செயற்பட்டுத் தீமைகளையும் துன்பங்களையும்தரும்

இதை உணர்ந்து கொள்ளும் மனிதர்கள் தமது வாழ்க்கையைத் தாம் விரும்பியபடி அமைத்துக் கொள்கிறார்கள்.

பெரும் பான்மையான மனங்கள் ஆசையும் அவாவும் கொண்டன.

ஆசையும் அவாவும் கொண்ட மனங்களில் நல்ல எண்ணங்கள் இருக்க மாட்டாது.

எண்ணங்கள் தான் செயல்களாகிப் பாவங்களை உண்டு பண்ணுகின்றன.

ஒருவன் தனது நண்பனின் வீட்டுக்குச் செல்கிறான். அவனின் மனைவி நல்ல அழகி. அவன் அவளைக் காணும் போதெல்லாம் பரவசப்படுவான். அவளை ஒரு முறை தொட்டுப் பார்த்தல் வேண்டும் என்று நினைப்பான்.

அன்று நண்பன் வீட்டில் இருக்கவில்லை. அவன் திரும்பிச் செல்லலாமா என நினைக்கிறான்.

அவனது மனைவி அவனை உள்ளே வந்து அமருமாறு கூறுகிறாள். பின் தேநீர் கொடுக்கிறாள். அவன் தற்செயலாக அவளது விரல்களைத் தொடுவது போலத் தொடுகிறான். அவனுக்குள் ஒரு பரவசம் உண்டாகிறது. தா்மங்கள் எல்லாவற்றையும் அவன் ஒரு கணம் மறந்து விடுகிறான். இப்பொழுது அவனுக்கு அவளின் அணைப்புத் தேவைப்படுகிறது.

இரண்டு நாட்கள் கழிந்த பின்பு வந்து அவளை அவதானித்துப் பார்க்கிறான். அவள் அவனைப் பார்க்கிறாள். உதட்டுக்குள்ச் சிரிக்கிறாள்.

மேலும் ஒரு மாதம் கழிய இருவரும் நெருங்கி விடுகின்றனா்.

தா்ம சிந்தனைகள் மனதில் இருந்தால் இப்படியான கெட்ட நினைவுகள் வராது. வந்தாலும் தா்ம சிந்தனைகள் உள்ள மனம் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளும்.

தா்ம சிந்தனை இல்லாத மனம் ஈசுரத்துரோகங்கள் பலவற்றையும் அஞ்சாமற் செய்யும்.

கொலை, கள்ளுண்ணல், புலாலுண்ணல், களவு, விபச்சாரம், பொய், அழுக்காறு, கோபம், சூது, செய்நன்றி மறத்தல், பெரியோரை மதியாமை, வீண் வாா்த்தைகளைப் பேசுதல் என்பன ஈசுரத்துரோகங்களாகும்.

‘‘கொலையே களவுகட் காமம் பொய் கூறல்

மலைவான பாதகமாம்‘‘ என்று திருமந்திரம் கூறுகிறது.

## கொலை

கொலை என்பது ஓர் உயிரை அதன் உடலில் இருந்து பலாத்காரமாக வெளியேற்றுவது. கொலை தான் உலகில் உள்ள பாவங்கள் எல்லாவற்றிலும் மேலானது, கொடியது. உயிர்கள் தமது கன்ம வினைக்கேற்பப் பிறவிகள் எடுப்பதாகச் சைவசித்தாந்தம் கூறுகிறது. இவ்வுயிர்கள் நான்கு தோற்றங்களையும் ஏழு பிறப்புக்களையும் கொண்டவையென நாம் முன்பு அறிந்தோம்.

எனவே உயிர்கள் பல்வேறுபட்ட பிறப்புகளை எடுக்கும். இதனால் உயிர்களுக்குப் பேதங்கள் கிடையாது. மனிதனாகப் பிறந்து வாழ்ந்த ஓர் உயிர் ஆடாகவோ மாடாகவோ பிறந்திருக்கலாம். எனவே சிற்றுயிர்கள் என்று எதையும் கருதாது ஓர் உடலில் இருந்து அதன் உயிரைப் பிரித்தலைச் செய்யாதிருத்தல் வேண்டும்.

அறமாகிய செயல் எதுவென்றால் ஓர் உயிரையும் கொல்லாமை ஆகும். கொல்லுதல் அறமில்லாத எல்லாச் செயல்களையும் செய்ய வைக்கும்.

மிக உயர்ந்த அறச் செயல் என்பது உயிர்களைக் கொல்லாமல் இருப்பது. அதற்கடுத்த அறம் பொய் சொல்லாமல் இருப்பது.

உயிர்கள் எதையும் கொல்லாமல் வாழும் வாழ்க்கை தான் மிகச் சிறந்த அறவாழ்க்கை என்று நீதி நூல்கள் பலவும் கூறுகின்றன.

வாழ்கையில் ஏற்படும் துன்பங்களுக்கு அஞ்சித் துறவறம் மேற் கொண்டவர்களை விட, இல்வாழ்க்கையில்

இருந்து கொண்டு கொல்லாமையைக் கடைப்பிடிப்பவர்கள் உயர்ந்தவர்கள்.

கொல்லாமை என்ற அறத்தினைக் கைக் கொண்டு வாழும் ஒருவனின் வாழ்நாளில் உயிரைக் கவர்ந்து செல்லும் கூற்றுவனும் செல்லமாட்டான்.

தன்னுடைய உயிர் உடம்பில் இருந்து நீங்கிப் போவதாக இருந்தாலும், அதைத் தடுப்பதற்காக ஒருவன் இன்னொரு உயிரை நீக்கும் செயலைச் செய்யக் கூடாது.

ஓர் உயிரைக் கொல்வதால் வரும் நன்மை பெரிதாக இருந்தாலும், சான்றோர்க்குக் கொலையால் வரும் ஆக்கம் மிக இழிவான தாகும்.

கொலைத் தொழிலின் இழிவை அறிந்த பெரியவர்கள் கொலை செய்து வாழ்பவர்களைப் புலையராகவே கருதுவார்கள்.

நோய் மிகுந்த உடம்போடு வறுமையால் வாடும் இழிவான நிலை, முன்னர் உயிர்க் கொலை செய்தவர்களுக்கு ஏற்படும்.

கொல்லாமையைப் பற்றித் திருவள்ளுவர் மேற்கண்டவாறு கூறுகிறார்.

ஒரு பசுவைக் கொல்வது ஆயிரம் பிராமணர்களைக் கொல்வதற் கொப்பானது என்று சைவ சமயம் கூறுகிறது.

பசுவைக் கொல்வது மட்டுமல்ல, பசுவை வருத்துவது கூடப் பெரும் பாவத்தைத் தரும் என்று இந்து சமயம் கூறுகிறது.

பசுக்களை நீராட்டி, நீறணிந்து, பூச்சூடி, பசிய புல்லும் உணவும் ஊட்டி, தூப தீபங்காட்டி வணங்கவேண்டு மென்று இந்து தர்ம நூல்கள் பலவும் கூறுகின்றன.

பசுவின் உடலெங்கும் இந்து சமயக் கடவுள்கள் அனைவரும் கோயில் கொண்டுள்ளனர். பல்வேறு தெய்வங்களும் உறைந்திருக்கும் கோயிலான பசுவை வணங்கினால் எல்லாத் தெய்வங்களையும் வணங்குகின்ற பேறு உண்டாகும்.

பன்னிரு திருமுறைகளும், ஆகமங்களும், வேதங்களும், பசுவின் பெருமையைக் கூறுகின்றன.

அப்படிப்பட்ட பெருமை வாய்ந்த பசுவைத் தற்போதுள்ளவர்கள் கொன்று அதன் புலாலை உண்டு வருவது வேதனைக்குரியது.

பசுவைக் கொன்று தின்போர் தம் தாயைக் கொன்று தின்போராவர் என்று சண்டேஸ்வர நாயனாரின் வரலாறு கூறுகின்றது.

இருக்கு வேதம் பசுவைப் பற்றி இவ்வாறு கூறுகிறது

‘‘மாதா ருத்ராணாம் ஸ்வயா ஆதித்யானாம்
துஹிதா வசூனாம் அம்ருதஸ்ய நாபிம்
மாகாம் அநாகாம் அதிதிம் வதிஷ்ட அநாகலம்
அதிதிம் கர்ம மாவ திஷ்ட‘‘

பசு உருத்திரர்களது அன்னை, ஆதித்தியர்களது சகோதரி, வசுக்களின் பிள்ளை, அமிர்தத்தின் ஊற்று எவருக்கும் தீங்கிளையாத வீட்டு விருந்தாளி, இவ்வகையான பெருமைகளை உடைய பசுவைக் கொல்வோர் பாவங்களில் இருந்து விடுபடார்.

எனவே மனிதர்களைக் கொல்வது தான் பாவம் என்றில்லை. எந்த ஓர் உயிரைக் கொன்றாலும் பாவம் என்று இந்து சமயம் கூறுகிறது.

இது போலத் தன்னுயிரை விடுதலும் பாபமாகும். எந்த விதமான வியாதிகள் வந்து வருத்தினாலும் உயிரைப் போக்கக் கூடாது. கர்ம வினைகளுக்கேற்ப வியாதிகள் வந்தமையும். அந்த வினை தீரும் வரை அது உடலை வருத்தும். அதனால் நோயால் கஷ்டப்படுபவர்கள் இறைவனைத் துதித்துத் தத்தமக்கு உண்டாகும் நோயைக் குணப்படுத்துதல் வேண்டும்.

## புலாலுண்ணல்

உயிர் நீக்கிய ஊனைப் புசித்தலைப் புலாலுண்ணல் என்று இந்துசமய நூல்கள் கூறுகின்றன.

இன்னொரு வகையிற் கூறுவதானால், கொலை செய்யப்பட்ட உடல்களை உண்ணல்.

கொலை செய்யப்பட்ட உடல்களை உண்பவர்களும் கொலை செய்த பாவத்திற்குள்ளாவார்கள்.

கொலை செய்தவர்கள், அப்புலாலை விற்பனை செய்பவர்கள், அவற்றைப் பணம் கொடுத்து வாங்கி உண்போர் ஆகிய எல்லோரும் பாவிகள் என்று இந்து தத்துவ நூல்கள் கூறுகின்றன.

தனது உடலை வளர்ப்பதற்காக மற்றோர் உயிரின் உடலை உண்கின்றவன் எவ்வாறு அருள் உள்ளவனாக இருக்க முடியும்.

பொருள் உடையவருக்குரிய சிறப்பு, அப்பொருளை வைத்துக் காப்பாற்றாதவருக்கு இல்லை. அருளுடையவர் களுக்குரிய சிறப்பு, புலால் உண்பவர்களுக்கு இல்லை.

கொலை செய்யும் ஆயுதங்களைக் கையில் வைத்திருப்பவனின் உள்ளத்தில் அருள் இல்லாதிருப்பதைப் போல, ஓர் உயிரின் உடம்பை விரும்பி உண்பவனின் உள்ளத்திலும் அருள் இராது.

ஓர் உயிரைக் கொல்லாமல் வாழ்வது தான் அறம். ஓர் உயிரைக் கொன்று அதன் ஊனைத் தின்பது அருளுமாகாது; அறமும் ஆகாது.

ஊன் உண்ணாதிருந்தால் உயிர்கள் நிலைபெற்று வாழும். புலால் உண்டால் நரகம் அவனை அங்கிருந்து வெளியேற விடாது.

புலால் தின்னும் பொருட்டு உலகத்தவர் உயிர்களைக் கொல்லாதிருந்தால், விலையின் பொருட்டு மாமிசத்தை விற்பனை செய்வோர் இல்லாமற் போவர்.

புலால் என்பது இன்னோர் உயிரின் புண் என்பதை ஆராய்ந்து அறிந்து கொண்டால், புலாலை ஒருவரும் உண்ண மாட்டார்கள்.

நல்லறிவை உடைய குற்றமில்லாதவர்கள் ஓர் உயிரானது பிரிந்து விட்ட உடம்பான புலாலை ஒரு போதும் உண்ண மாட்டார்கள்.

நெய் சொரிந்து ஆயிரம் வேள்விகள் செய்வதை விட, ஓர் உயிரைக் கொன்று அதன் உடம்பைத் தின்னாமல் இருப்பது நல்லது.

ஓர் உயிரைக் கொல்லாமலும் அதன் புலாலை உண்ணாமலும் வாழ்கின்றவனை உலகத்தில் உள்ள எல்லா உயிர்களும் கை கூப்பித் தொழும்.

மேற்கண்டவாறு வள்ளுவர் கூறுகிறார்.

திருமூலர் இவ்வாறு கூறுகிறார்; ‘‘பொல்லாப்புலாலை நுகரும் புலையரை எல்லாரும் காண இயமன்றன் தூதுவர்செல்லாகப் பற்றித் தீவாய் நரகத்தில் மல்லாக்காகத்தள்ளி மறித்துவைப்பரே‘‘.

புலால் உண்போரை இயமனின் தூதுவர்கள் பிடித்துச் சென்று மல்லாக்காகக் கிடத்தித் துன்புறுத்துவர். இவர்களுக்கு விடுதலை கிடையாது.

‘‘கொன்றி லாரைக் கொலைச் சொலிக் கூறினார்
தின்றி லாரைக் தினச் சொலித் தொண்டித்தார்
பன்றியாய்ப் படியிற் பிறந்தோழ் நரகு
ஒன்றுவார் அரன் ஆணையி துண்மையே‘‘

கொல்வோரும், கொல்லத் துணை புரிவோரும். கொல்லச் சொல்வோரும், புலால் உண்போரும், புலாலை வற்புறுத்தி உண்ணச் செய்தவரும் பன்றியாகப் பிறப்பர்.

இவ்வாறு இந்து தர்மநூல்கள் புலாலுண்ணலைப் பற்றிக் கூறுகின்றன.

## போதைப் பொருள் உண்ணல்

கள்ளு, சாராயம், கஞ்சா, அபின், போதை மாத்திரைகள் என்பவற்றை உண்ணபவர்கள், ஊசி மூலம் போதைப் பொருட்களை உடலுள் ஏற்றுபவர்கள் அறிவையும் நல்லொழுக்கத்தையும் இழந்து பாவச் செயல்கள் பலவற்றைச் செய்வர்.

போதைப் பொருட்கள் உண்பவனின் அறிவை மயக்கி ஒருவித இன்பத்தைக் கொடுத்துத் தன்போக்கில் அவனை

ஆட்டிப் படைக்கும் வல்லமை கொண்டவை. இதனால் போதைப் பொருட்களை உண்பவர்கள் கொலை, களவு, விபச்சாரம், சூது முதலிய சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டுத் தன்னையும் தனது குடும்பத்தினையும், சமூகத்தையும் அழிப்பர்.

கள்ளுண்ணல் பற்றி திருவள்ளுவர் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

கள்ளின் மேல் விருப்பங் கொண்டு அதைக் குடித்து மயங்கித் திரிபவர்களைக் கண்டு பகைவர்கள் அஞ்ச மாட்டார்கள். அத்தீய பழக்கத்தால் தமக்குள்ள புகழையும் இழந்து விடுவர்.

கள்ளைக் குடிக்கக் கூடாது; சான்றோரின் நன்மதிப்பைப் பெற விரும்பாதவர் கள்ளை வேண்டுமானால் குடிக்கலாம்.

கள் உண்டு விட்டு வரும் மகனைக் கண்டால் பெற்றதாயின் முகம் வெறுப்படையும். அவ்வாறு இருக்குமானால் குற்றத்தைக் கண்டிக்கும் சான்றோரின் முகம் என்னவாகும்?.

நாணம் என்று சொல்லப்படும் நல்லவள், கள் குடித்தல் என்னும் தீமையைச் செய்பவர்களுக்கு எதிரே நிற்காமல் சென்று விடுவாள்.

ஒருவன் பொருளைக் கொடுத்துக் கள்ளைக் குடித்துத் தன்னைத் தான் அறியாத நிலைக்குள்ளாவதற்குக் காரணம், தான் செய்வது இன்ன தென்று புரிந்து கொள்ள முடியாத அறியாமையே ஆகும்.

உறங்கியவர், இறந்தவரை விட வேறுபட்டவர் அல்லர்; அவ்வாறே கள்ளுண்பவரும் அறிவு மயங்குவதால் நஞ்சை உண்டவர் ஆவர்.

கள்ளை மறைந்திருந்து குடித்தாலும் அறிவு மயங்கித் தன்நிலை புரியாது நடந்து கொள்வதால், அதை அறிந்து ஊர் மக்கள் எந்நாளும் இழிவாகப் பேசிச் சிரிப்பார்கள்.

கள்ளைக் குடிப்பவன், ‘நான் ஒருபோதும் கள் குடிப்பவன் அல்லன்’ என்று சொல்வதை விட வேண்டும். ஏனெனில் அவனது நெஞ்சில் ஒளித்திருக்கும் குற்றங்கள் கள்ளுண்டதும் தானாக வெளிப்பட்டு விடும்.

கள்ளுண்டு மயங்கி இருப்பவனுக்குப் புத்திமதிகள் கூறி அவனைத் திருத்த மேற்கொள்ளும் முயற்சி, நீருக்குள் மூழ்கியவனைத் தீவிளக்குக் கொண்டு தேடுவதைப் போன்றது.

எனவே நல்லவர்களாக வாழ விரும்புவோரும், தம்பிள்ளைகளைக் கற்றோர் அவையில் முன்னிருக்கச் செய்ய விரும்புபவர்களும் போதை தரும் பொருட்களை உண்ணக்கூடாது.

## களவு

களவென்பது பிறருடைய பொருட்களை அவர்கள் அறியாமல் எடுத்துத் தன் வசப்படுத்துவதாகும். களவைப் பற்றித் திருவள்ளுவர் பின்வருமாறு கூறுகிறார்.

பிறர் தன்னை இகழக் கூடாது என்று விரும்புகின்றவன், பிறரிடமிருந்து எத்தன்மையான பொருளையும் வஞ்சித்துப் பெற எண்ணாதபடி தன் நெஞ்சைக் காத்துக் கொள்ளல் வேண்டும்.

பிறரின் பொருட்களைத் தவறான வழிகளில் அடையலாம் என்று தன் உள்ளத்தால் நினைப்பதும் தீதானது.

களவெடுத்த பொருட்களால் உண்டாகிய ஆக்கம் பெருகுவது போலத் தோன்றி, இயல்பாக இருந்த ஆக்கத்தையும் அழித்து விடும்.

களவெடுத்து பிறர்பொருளில் இன்பமாக வாழ விரும்புபவர்கள் அளவறிந்து வாழ மாட்டார்கள்.

அளவறிந்து வாழ்கின்றவரின் நெஞ்சில் அறம் நிற்பது போல, களவெடுத்து வாழ்பவனின் நெஞ்சில் வஞ்சம் நிற்கும்.

களவெடுப்பதைத் தவிர மற்ற நல்ல செயல்களை அறியாதவர்கள், அளவு கடந்த தீய செயல்களைச் செய்து அப்போதே அழிவார்கள்.

களவெடுத்து வாழ்பவர்களுக்கு உடம்புங் கூட உற்ற துணையாகாது. களவெடுக்காமல் வாழ்பவர்களுக்குத் தேவர் உலகு தவறாது கிடைக்கும்.

போதை தரும் பொருட்களை உண்பது போலக் களவும் எல்லாப் பாவங்களையும் செய்யத்தூண்டும். அதனால் பிறரது பொருளின் மீது ஆசைப்படாது வாழுதல் வேண்டும்.

## விபச்சாரம்

விபச்சாரம் என்பது தனது மனைவியைத் தவிர்ந்த வேறொரு பெண்ணுடன் கூடி மகிழ்வது, மகிழவிரும்புவது. பெண்களைப் பொறுத்த மட்டில் பணத்திற்காக, பொருளுக்காக, பதவிகளுக்காக தனது கணவனுக்குத் தெரியாது பிற ஆடவருடன் கூடி மகிழல். அல்லது மகிழ விரும்பல்.

தூய்மையான, நற்குணமுள்ள பெண்கள் பலர் இருக்கிறார்கள். அது போலத் தீய குணங்களை உடைய பெண்களும் இருக்கிறார்கள்.

ஆண்கள் ஒருபொழுதும் தனது மனைவியைத் தவிர்ந்த இன்னொரு பெண்ணை மனத்தாற் கூட நினைத்தல் பாவம்.

இன்னொருவனுடைய மனைவியை விரும்பக் கூடாது என்று வள்ளுவர் கூறுவதைப் பார்ப்போம்.

பிறனுக்கு உரியவளாகிய மனைவியை விரும்பி நடக்கும் அறியாமை அறம், பொருள் என்பவற்றை ஆராய்ந்து அறிந்தவரிடம் இல்லை.

அறத்தை விட்டுத் தீய வழியில் ஒழுகுவோர் எல்லோரிலும் பிறன்மனைவியை விரும்பி அவளுடைய வீட்டு வாயிலில் சென்று நிற்பவரைப் போல் அறிவிலிகள் இல்லை.

தினையளவு கூட ஆராய்ந்து பாராமல் பிறனுடைய மனைவி மேல் மோகம் கொள்ளல், எவ்வளவு பெருமை உடையவர்களானாலும் அதனால் பெருமை கிடையாது.

இச்செயல் எளியது என எண்ணிப் பிறருடைய மனைவியோடு நெறி தவறி நடப்பவனை எப்போதும் அழியாமல் பழி சூழ்ந்து நிற்கும்.

பகை, பாவம், அச்சம், பழி என்னும் நான்கு தீமைகளும் பிறன் மனைவியோடு நெறிதவறி நடப்பவனை விட்டு என்றும் நீங்காது.

பிறனுடைய மனைவியை இச்சையுடன் நோக்காத ஆண்மை ஆன்றோர்க்கு அறம் மட்டும் அன்று; நிறைந்த ஒழுக்கமும் ஆகும்.

கடல் சூழ்ந்த பெரிய உலகிலே எல்லோரும் விரும்புதற்குரிய நல்லவர் யார் என்றால், பிறனுக்கு உரிமையானவளின் தோள்களைத் தழுவாதவரே.

ஒருவன் அறத்தின் வழியில் வாழாமல் அறமில்லாத பல செயல்களைச் செய்தாலும், பிறனுக்கு உரியவளின் பெண்மையை விரும்பாமல் வாழ்தல் ஒன்றே நல்லது.

இவ்வாறு கூறும் வள்ளுவர் விபச்சாரம் செய்யும் பெண்களின் தன்மை பற்றி இவ்வாறு கூறுகிறார்.

அன்பு காரணமாக ஒருவனை விரும்பாமல் அவனது பொருள் காரணமாக விரும்புகின்ற பொது மகளிர் பேசுகின்ற இனிமையான வார்த்தைகள் என்றும் துன்பத்தையே கொடுக்கும்.

கிடைக்கக் கூடிய பொருளின் அளவுக்கு ஏற்ப இனிய வார்த்தைகளைக் கூறுகின்ற பண்பற்ற விலை மகளால் வரும் இன்பத்தை ஆராய்ந்து பார்த்து அவளுடன் சேராமல் விட வேண்டும்.

பொருளை மட்டும் விரும்பும் பொது மகளிரின் பொய்யான தழுவல், இருட்டறையில், தொடர்பில்லாத ஒரு பிணத்தைத் தழுவுவது போன்றது.

பொருள் ஒன்றையே இலட்சியமாகக் கொண்ட பொதுமகளிரின் கீழான இன்பத்தை, அருளாகிய சிறந்த பொருளை ஆராயும் அறிவுடையோர் விரும்பமாட்டார்கள்.

இயற்கையான அறிவால் ஆராய்ந்து அறிந்தோர், பொருள் கொடுப்பவர்கள் எல்லோருக்கும் பொதுவான இன்பத்தைக் கொடுக்கும், பொது மகளிரின் இழிந்த தொடர்பை ஒரு போதும் விரும்பமாட்டார்.

தம் அழகால் கர்வம் கொண்டு இழிவான சுகத்தை விற்கும் பொது மகளிரின் தோளை, நல்லொழுக்கத்தைப் போற்றும் சான்றோர் தழுவமாட்டார்.

மனதைக் கட்டுப்படுத்தி அதை ஆளும் ஆற்றல் இல்லாதவர், தம் நெஞ்சில் வேறு பொருளை விரும்பிக் கூடும் பொது மகளின் தோளைத் தழுவுவர்.

வஞ்சம் நிறைந்த பொது மகளிரின் தன்மையை அறிந்து கொள்ளாதவர்கள், பொது மகளிர் தழுவித் தரும் இன்பத்தை மோகினி மயக்கு என்று சொல்வர்.

ஒழுக்க நெறியிலிருந்து தவறிய பொது மகளிரின் மென்மையான தோள், அறிவில்லாத கீழ் மக்கள் ஆழ்ந்து கிடக்கின்ற நரகமாகும்.

இரு வகைப்பட்ட மனமுடைய பொது மகளிரும், கள்ளும், சூதுமாகிய இம் மூன்றும், திருமகளால் நீக்கப்பட்டவர்கள் மட்டுமே உறவு கொள்வதற்கு உரியவை ஆகும்.

பலவீனமுள்ளவர்கள், அடங்காத காமத்தை உடையவர்கள், பஞ்சமா பாதகங்களை அச்சமின்றிச் செய்பவர்கள் தான் பொது மகளிடம் சென்று அற்பமான இன்பத்தை பெறுவர்.

பொதுமகளின் தன்மைகளைப் பற்றித் திருமந்திரம் இவ்வாறு கூறுகிறது.

"இலை நல வாயினும் எட்டி பழுத்தால்
குலநல வாங்கனி கொண்டுண் லாகா
முலை நலங் கொண்டு முறுவல் செய்வார் மேல்
விலகுறு நெஞ்சினை வெய்து கொள்வீரே"

அழகிய இலை, தளிர், காய், பூக்களைக் கொண்ட எட்டி மரம் பழுத்தால் பறவைகள் கூட அருகிற் செல்லாது.

அது போலத்தம் உடல் வனப்பாலும், அழகாலும், பொலிவாலும் மயக்கும் விலை மகளிரின் தொடர்பை நீக்குதல் வேண்டும்.

“இயலுறும் வாழ்க்கை இளம்பிடி மாதர்
புயனுறப் புல்லிப் புணர்ந்தவர் எய்தும்
மயலுறும் லானவர் சார்விது என்பார்
அயலுறப் பேசி அகன் றொழிந்தாரே”

பொலிவும், அழகும் கொண்ட பெண் யானையை ஒத்த இளமையான பெண்கள் மேகம் பொழியும் மழையைப்போல உடலும் உயிரும் உவகை கொள்ளும் படி தழுவிப் பேரின்பத்தைத் தந்தாலும், அவர்களின் மனம் பொருளிலேயே இருக்கும். தாம் தழுவியவரை விட அதிகமான பொருளுடையார்களைக் கண்டால் அவர் தாழ்ந்த சாதிக்காரராக இருந்தாலும், அவர் தேவர்களை விட மேலானவர்கள் என்று கூறி அவர்களைத் தழுவுவர். அவரின் புகழையே பேசுவர். அவரைப் பிரியாது இருப்பர். அவர் பொருளற்றவரானவுடன் ஏசித்துரத்துவர்.

பெண்களின் அங்கங்களில் உள்ள அழகு ஆண்களைத் தடுமாற வைக்கும். அதனால் பெண்கள் தமது அங்கங்கள் அனைத்தையும் மறைத்து வைத்திருத்தல் வேண்டும்.

பெண்கள் தான் எல்லாவற்றிற்கும் உரியவர்கள். சில பெண்கள் ஆசைவசப்பட்டு பொருளுள்ளோரை வசியம் செய்ய முயல்வர். அப்படியானவர் பொன், பொருளுள்ள ஆடவர்களைப் பார்த்துச் சிரித்தாலே போதும். அந்தச் சிரிப்பில் பல வகையான மோகங்கள் பொதிந்திருக்கும். அதைப் புரிந்து கொண்ட ஆடவர்கள் தமது உணர்வுகளைத் தீர்க்க அவளை நாடுவர்.

பெண்களில் பெரும்பான்மையானவர்கள் தமது நலன்களைப் பெருக்குவதற்காகவே பிற ஆண்களை மயக்குகிறார்கள். இவ்வகையான பெண்கள் தமது இலட்சியத்தை அடைந்ததும் தொடர்பு கொண்டவர்களை மெல்ல மெல்ல விலக்கப் பார்ப்பார்கள். அவர்கள் விலகாவிட்டால் பல்வேறு வகையான தந்திரங்களைப் பயன்படுத்தி ஆண்களை விலக்கி விடுவார்கள்.

ஒரு பெண் அன்னிய ஆடவன் ஒருவனைப் பொருளுக்காக விரும்பினாள். அவனும் அவளது மயக்கத்தில் இருந்தான். அதனால் அவனிடமுள்ள பொருட்கள் யாவற்றையும் அவளது காலடியில் கொட்டினான்.

அவள் இன்னொரு தனவந்தனைக் கண்டாள். மெல்லச் சிரித்தாள். ஓரக்கண்ணால் பார்த்தாள். கண் சிமிட்டினாள். உதட்டைக் கடித்தாள்.

தனவந்தன் அவளது மாயவலையிற் சிக்குண்டான். முன்னுள்ளவனை அவளால் விலக்க முடியவில்லை. அதனால் தான் தனித்திருப்பதாகக் கூறி ஒரு நாள் அவனை வீட்டுக்கு வரச் சொன்னாள். அவன் வந்த போது மகிழ்வுடன் வரவேற்று அவனைக் கட்டித் தழுவினாள். அப்பொழுது அவளது கணவன் அவள் கூறியபடி அவ்விடத்திற்கு வந்தான்.

வந்தவன் திகைத்துப் போனான். கணவனும் அவளது உறவினர்களும் அவனை நையப்புடைத்து எச்சரித்து அனுப்பினர்.

அவள் அவனை விலக்குவதற்காகத் திட்டமிட்டு அப்படி நடந்து கொண்டாள்.

சில பெண்கள் தமது பெற்றோரின், கணவனின் விருப்பத்துடன் அந்நிய ஆடவர்களுடன் தொடர்பு கொண்டு

பணம் சம்பாதிக்கின்றனர். சிலர் அவர்களுக்குத் தெரியாமல் தொடர்பு கொண்டு பணம் சம்பாதிக்கின்றனர். இது மனிதன் தோன்றிய காலம் முதல் நடைபெற்று வருகிறது.

விபச்சாரம் செய்வதற்குப் பல காரணங்கள் உண்டு. முக்கியமான காரணி வறுமை.

வறுமையைப் போலத் துன்பமானது எது என்று கேட்டால், வறுமையைப் போலத் துன்பமானது வறுமை ஒன்று தான்.

வறுமை என்று சொல்லப்படும் பாவி ஒருவனைப் பற்றிப் பிடித்தால், அவனுக்கு இப்பிறப்பிலும் மறுபிறப்பிலும் இன்பம் இல்லாமல் போய்விடும்.

வறுமை என்று சொல்லப்படுகின்ற துன்ப நிலை ஒருவனைப் பற்றினால், அவனது பழைமையான குடிப்பண்பையும் புகழையும் அது கெடுத்து விடும்.

வறுமை என்று சொல்லப்படும் துன்ப நிலை வந்தால், பல்வேறு வகைப்பட்ட துன்பங்கள் அவனை வந்தடையும்.

அறத்தோடு பொருந்தாத வறுமை ஒருவனைச் சோந்தால், பெற்ற தாயும் அவனை அன்னியனாகக் கருதிப் புறக்கணிப்பாள்.

‘நேற்றுக் கொலை செய்தது போலத் துன்புறுத்திய வறுமை இன்றும் என்னிடம் வருமோ?’ என்று வறியவன் நாள் தோறும் கலங்கித் துன்புறுவான்.

ஒருவன் நெருப்பினுள்ளே தூங்க முடியும். ஆனால் வறுமைப்பட்டால் ஒருநாளாவது கண்மூடித் தூங்க முடியாது.

இவ்வாறு வறுமையைப் பற்றி வள்ளுவர் கூறுகிறார்.

வறுமைப்பட்ட குடும்பத்திலுள்ள பெண்ணைப் பணக்காரர் தமது இச்சைக்கு ஆளாக்க விரும்புவர். பல பெண்கள் விருப்பமின்றி அவர்களின் இச்சைகளைத் தீர்த்து வாழ்கின்றனர்.

பொருளாசை மிக்க பெண்களும் பொருள் தேடுவதற்காக விபச்சாரம் செய்ய விரும்புகின்றனர்.

உழைத்துத் தம் குடும்பத்தைப் பராமரிக்க முடியாத ஆண்கள் பெண்களை விபச்சாரத்தில் ஈடுபடுத்துகின்றனர்.

ஆண் நோயாளியாக, பலவீனனாக இருந்தால் பெண்கள் பிற ஆடவரை நாடுகின்றனர்.

எல்லா வசதிகள் இருந்தாலும், கணவன் பலசாலியாக இருந்தாலும் காமம் மிகுந்த பெண்கள் பிற ஆடவரை விரும்புகின்றனர். இத்தகைய பெண்கள் தாம் விரும்பும் ஆடவர்களுக்கு நல்ல உணவும், பணமும் பொருளும் கொடுக்கின்றனர்.

காம உணர்வு மிகுந்த ஆண்கள் தமது சொத்துக்கள் முழுவதையும் கொடுத்துத்தம் உணர்வுகளைத் தீர்த்துக் கொள்கின்றனர். இவர்கள், பெற்ற தாயும், தன் மனைவி மக்களும் ஒரு பிடி சோறு கூடக்கிடையாது துன்பப்பட்டாலும் அதைக் கவனிக்காது தமது காம உணர்வைத் தீர்த்துக் கொள்ளவே விரும்புவர்.

காம உணர்வு மிகுந்த பெண்கள் தமது கணவரைக் காட்டிலும் பிற ஆடவர்கள் மீதே அன்பு வைப்பர். நாட்டை ஆளும் மன்னனின் மனைவியானாலும் கூடக் காமம் மிகுந்தால் அவள் அன்னிய ஆடவர்களையே நாடுவாள்.

ஊஜ்ஜைனி என்ற நாட்டின் அரசர் பத்திரகிரியார். அவரின் பெயரைக் கேட்டாலே பல நாடுகள் நடு நடுங்கும்.

அவரது பட்டத்தரசி குதிரைக்காரனுடன் உறவாடியதைப் பத்திரகிரியார் நேரிற் கண்டார்.

அன்றே அவர் கோவணம் தரித்துப் பட்டினத்தடிகளுடன் புறப்பட்டார்.

பல தேசத்து அரசிகள் பிற ஆடவர்கள் மேற் காமம் கொண்டு தமது கணவர்களைக் கொன்று ஆட்சியைக் கைப்பற்றியதை வரலாறு கூறுகின்றது.

காம உணர்வு மிகுந்தால் மனம் தர்மத்தைப் பற்றியோ, ஒழுக்கத்தைப் பற்றியோ, குலத்தைப் பற்றியோ சிந்திக்காது. தனது காம உணர்வுகளுக்குத் தடையாக இருப்பவற்றை ஒழிக்கவே விரும்பும். இதனாற்றான் பலர் தம் கணவர்களையும், பெற்றோர்களையும், மனைவிகளையும், உடன் பிறந்தவர்களையும் கொலை செய்கிறார்கள்.

ஒரு ஆண் அல்லது பெண் காம உணர்வு இல்லாதிருந்தாலும் விபச்சாரம் செய்ய வேண்டிய நிலை உண்டாகும்.

இந்துப் பெண்களில் அனேகர் மத அநுட்டான்களை நெறி முறை தவறாது பின்பற்றி வாழ வேண்டும் என்று நினைக்கிறார்கள். இந்துக்களுக்கு தினமும் விரதநாள். விரத நாட்களில் தமது கணவரைப் பார்ப்பதே குற்றம் என்று பல பெண்கள் நினைக்கிறார்கள். இதனால் ஆண்கள் வேறு பெண்களைத் தேடிச் செல்கிறார்கள். இப்படியான ஆண்கள் பலரை நான் கண்டிருக்கிறேன்.

இதுபோல நடந்து கொள்ளும் ஆண்களும் பலர் இருக்கிறார்கள். இதனால் பெண்கள் பிற ஆடவரை விரும்புகின்ற தன்மை உண்டாகின்றது. இப்படியான பெண்களையும் நான் கண்டுள்ளேன்.

நல்ல மனிதன் என்று என்னால் கணிக்கப் பெற்ற ஒருவர் என்னுடன் உரையாடும் போது சொன்னவற்றைத் தருகிறேன்.

“எனது மனைவி எல்லாக் கடவுள்களையும் வணங்குவாள். எல்லா விரதங்களையும் பிடிப்பாள். அவ்வேளைகளில் நான் விரும்பிய எதையும் செய்ய அவள் மறுத்ததில்லை. மாமிச வகைகளைத் தனது தாயைக் கொண்டு சமைப்பித்துத் தருவாள். நான் மோக மிகுதியோடு அவளை நெருங்கும் போதெல்லாம் எனது மனமறிந்து எனது உணர்வுகளைத் தீர்த்து மகிழ்ச்சிக்குள்ளாக்குவாள்.”

இன்னொரு நண்பர் சொன்னதையும் நான் தருகின்றேன்.

“எனது மனைவி மிக மிக மோசம். தினமும் விரதம். ஆதனால் தினமும் வீட்டைக் கழுவுவாள். மாலை வேளைகளில் நான் வேலை முடிந்து வீட்டுக்கு வந்தால் குளித்து விட்டு வீட்டுக்குள்ச் செல்லுமாறு கூறுவாள். அதனால் இருவருக்கும் பிரச்சினை வரும். நான் இளைஞன். எனக்கு முப்பத்தைந்து வயது. நான் ஆசையோடு அவளை நெருங்கினால், இன்று சதுர்த்தி விரதமென்பாள், மறுநாள் நெருங்கினால் இன்று ஷஷ்டி என்பாள். இன்னொரு நாள் பிரதோஷ விரதம், இன்னொரு நாள் அமாவாசை விரதம், இன்னொரு நாள் பௌர்ணமி விரதம். இப்படி ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விரதம் என்பாள். சில மாதங்களில் தினமும் விரதம் பிடிப்பாள். எனக்கு மிகுந்த கஷ்டமாக இருக்கு” என்றவர் சில நாட்களின் பின் மிகுந்த மகிழ்வுடன் இருந்தார்.

அதற்கான காரணத்தையும் சொன்னார்; “எனது அலுவலகத்தில் என்னுடன் வேலை செய்யும் பெண் ஒருத்தியின் நட்பு எனக்குக் கிடைத்தது. அது வளர்ந்து காதலாகி விட்டது.

நான் அவளது வீட்டிற்குச் செல்லும் போது அவள் என்னை மகிழ்வுடன் வரவேற்பாள். எனது மனநிலையைப் புரிந்தே எவ்வேளைகளிலும் நடப்பாள். சென்ற மாதம் சிவராத்திரி அன்று இரவு பத்து மணிக்கு நான் அவளது வீட்டுக்குச் சென்ற போது என்னை அவள் மிகுந்த மகிழ்வுடன் வரவேற்றாள். அப்பொழுது அவள் அருகில் உள்ள கோயிலுக்குச் செல்லத் தயாராகி இருந்தாள்''.

அவளைக் கோயிலுக்குச் செல்லும்படி கூறினேன், ''முதலாம் ஜாமப் பூசையைப் பார்த்துவிட்டுத் தான் வந்தேன். மூன்றாம், நான்காம் ஜாமப் பூசைகளைப் பார்த்தால் போதும்'' என்றாள்.

அவளின் அழகு என்னைக் கவர்ந்தது. அவளது கையைப் பிடித்தேன். அவள் மறுப்பேதும் சொல்லவில்லை. அன்று மிகவும் மகிழ்வாக இருந்தோம். நான் சென்ற பின்பு அவள் மீண்டும் தோய்ந்து விட்டுக் கோயிலுக்குச் சென்றதாக மறுநாள் சொன்னாள். ''இவள் அல்லவா பெண்'' என்றார்.

இருவரது கருத்துக்களுக்கும் சரி பிழை கூற எனக்கு தகுதி போதாது. எனினும் கணவனை அனுசரித்து மனைவியும், மனைவியை அனுசரித்துக் கணவனும் நடந்து கொண்டால் மகிழ்வாக வாழலாம்.

நிம்மதியின்மை, மகிழ்ச்சிக் குறைபாடுகளாற்றான் அதிகமான குடும்பங்களில் பிரச்சினைகள் உண்டாகின்றன.

மகிழ்ச்சி என்பது மனதில் தான் உள்ளது. அது சமய விதிமுறைகளில் இல்லை. சமய விதிமுறைகள் யாவும் மனிதனின் ஆரோக்கியமான வாழ்விற்காகவே அமைக்கப்பட்டன. எல்லாச் சந்தர்ப்பங்களிலும் சமய விதி முறைகளைப் பேண

முடியாது. கடவுள் தன்னை அன்புடன் வணங்கும் படியும், பிற உயிர்கள் மீது அன்பு கொள்ளும்படியும் கூறியதாக மெய்ஞானிகளும் இந்து தத்துவ நூல்களும் கூறுகின்றன. இதை ஆண்களும் பெண்களும் உணர்ந்து கொண்டால் என்றும் இன்பம் உண்டாகும்.

விபச்சாரம் உலகில் உள்ள குற்றங்கள் அனைத்தையும் செய்ய வைக்கும்.

## பொய்பேசுதல்

பொய் என்பது உண்மையானவற்றை இல்லை என்றும், இல்லாதவற்றை உள்ளதென்றும் கூறுவது. கொலை செய்தவனைக் கண்டால் அதைக் காணவில்லை யென்றும், கொலை செய்தவனைக் காணாது அவன் தான் கொலை செய்தான் என்று கூறுவது தான் பொய். விபச்சாரம் செய்வோர், வியாபாரம் செய்வோர் தான் அதிகமான பொய்களைப் பேசுபவர்களாக இருக்கிறார்கள் என்று பலரும் கூறுகிறார்கள்.

ஒரு பொய்யைச் சொன்னால் அதை நிறுவப் பல பொய்களைக் கூற வேண்டிய நிலை உண்டாகும்.

வள்ளுவர் வாய்மையைப் பற்றி இவ்வாறு கூறுகிறார்.

வாய்மை எனப்படுவது என்னவென்றால், மற்றவர்களுக்கு சிறிதளவேனும் துன்பத்தை உண்டாக்காத சொற்களைப் பேசுவது ஆகும்.

ஒருவன் தன்நெஞ்சம் அறிந்ததைக் குறித்துப் பொய் சொல்லல் ஆகாது. அவ்வாறு சொன்னால் அவனது நெஞ்சே அவனை வருத்தும்.

ஒருவன் தன் உள்ளம் அறியப் பொய் சொல்லாமல் வாழ்வானேயானால், அவன் உலகத்தவரின் உள்ளங்களில் என்றும் நிலைத்திருப்பான்.

ஒருவனுக்குப் பொய் சொல்லாமல் வாழ்வதைப் போன்ற புகழுக்குரியது வேறொன்றுமில்லை. அ∴து அவன் அறியாமலே எல்லா அறங்களையும் கொடுக்கும்.

பொய்யாமை என்ற அறத்தை உண்மையாகக் கைக் கொண்டு வாழ்பவன் மற்றய அறங்களைச் செய்ய வேண்டியதில்லை.

புறத்தில் உள்ள இருளை நீக்குகின்ற விளக்குகள் எல்லாம் விளக்குகள் அல்ல. சான்றோர்க்கு உள்ளத்தில் உள்ள இருளை விலக்கும் பொய்யாமை ஆகிய விளக்கே விளக்காகும்.

யாம் உண்மையாகக் கண்ட பொருட்களுள் வாய்மையை விட உயர்ந்த பொருள் வேறு எதுவும் இல்லை.

பொய் எல்லாக் குற்றங்களையும் செய்ய வைக்கும். பொய் சொல்வோரின் மனதில் மகிழ்ச்சி, கருணை, அன்பு என்பன இருக்கமாட்டாது. அவர்களின் மனதில் வஞ்சகமும், சூதுமே நிறைந்திருக்கும். இதனால் அவர்கள் எந்நாளும் துன்பப் பட்டுக் கொண்டே இருப்பார்கள். பொய் பேசுவோர் பொய் பேசுதலைக் கைவிட்டால் அன்றி நிம்மதியாகவோ, மகிழ்ச்சியாகவோ வாழமுடியாது.

## பொறாமை

பொறாமை என்றால் பிறருடைய வளர்ச்சியைக் கண்டு தனக்குள்த் துன்பப்படுவது. பொறாமைப் படுவோர்

தமக்குத்தாமே துன்பத்தை உண்டாக்கிக் கொள்கிறார்கள். ஒருவன் பொருளைத் தேடினால் அதைக் கண்டு பொறாமைப் படாது தாமும் முயற்சி செய்து வேண்டிய பொருட்களைத் தேட வேண்டுமே தவிர அதை நினைத்துத் துக்கப்படலாகாது. அதற்காகத் துக்கப்படுபவன் தன்னைத் தானே அழித்தவனாவான். இதனால் மனநோயும், இருதய நோயும் உண்டாகும்.

வள்ளுவர் பொறாமையைப் பற்றி இவ்வாறு கூறுகிறார்.

ஒருவன் தனது நெஞ்சில் பொறாமை இல்லாமல் வாழும் இயல்பை ஒழுக்க நெறியாகக் கொள்ளல் வேண்டும்.

தனக்கு அறமும் ஆக்கமும் வருவதை விரும்பாதவனே, பிறனுடைய ஆக்கத்தைக் கண்டு மகிழாமல் அதற்காகப் பொறாமைப்படுவான்.

பொறாமை உள்ளவர்களுக்கு வேறு பகை தேவையில்லை. அது ஒன்றே போதும். பகைவர் தீங்கு செய்யாவிட்டாலும் தவறாமல் தீங்கை அது செய்யும்.

பிறருக்கு உதவி செய்வதைக் கண்டு பொறாமைப்படுபவனது சுற்றம், உடையும் உணவும் இல்லாமல் கெடும்.

பொறாமை உடையவனைக் காணப் பொறுக்காத திருமகள், தன் தமக்கைக்கு அவனைக் காட்டிவிட்டு நீங்கிச்சென்று விடுவாள்.

பொறாமை என்ற கொடிய பாவி, ஒருவனது செல்வத்தை அழித்துத் தீய வழியில் அவனை வழி நடத்தும்.

எனவே இன்னொருவனது வளர்ச்சியைக் கண்டு துயரப்படாது வாழக் கற்றுக்கொள்ளல் வேண்டும்.

சினம்

பலவீன முள்ளவர்களுக்கே எடுத்ததற்கெல்லாம் கோபம் உண்டாகும். கோபத்தை அடக்கியவன் மனதை அடக்கியவனாவான். கோபத்தை அடக்கியவன் பூமியைப் போல பொறுமை உள்ளவனாக இருப்பான். இவனை எதிரிகளாற் கூட வெல்ல முடியாது. கோபம் அனைத்துப் பாவங்களையும் செய்ய வைக்கும், நீதியை மறைக்கும், தர்மத்தைத் தடுக்கும், அஞ்சாது பழிபாவங்களைச் செய்ய வைக்கும். மகிழ்ச்சியைக் கெடுக்கும், பல்வேறு விதமான நோய்களை உண்டு பண்ணும் அதனால் சினங் கொள்ளாது வாழப் பழகுதல் வேண்டும்.

சினத்தைப் பற்றி வள்ளுவர் பின்வருமாறு கூறுகிறார்.

பலிக்கும் இடத்தில் சினம் வராமல் காப்பவனே சினம் காப்பவன் ஆவான். பலிக்காத இடத்தில் சினத்தைக் காத்தால் என்ன?. காக்காமல் விட்டால் என்ன?.

பலிக்காத இடத்தில் சினம் கொள்வது தீமையைத் தரும். பலிக்கும் இடத்திலும் சினம் கொள்வதும் தீது.

யாரிடத்திலும் சினங்கொள்ளாமல் அதை மறத்தல் நன்று. தீமையான விளைவுகள் பல சினத்தால் வந்து சேரும்.

முகமலர்ச்சியையும் அகமகிழ்ச்சியையும் கொல்கின்ற சினத்தை விட ஒருவனுக்குப் பகையானவை வேறு எவையும் இல்லை.

ஒருவன் தன்னைக் காத்துக் கொள்ள விரும்பினால், சினத்தை அடக்க வேண்டும். அடக்கா விட்டால் சினம், அவனை அழித்து விடும்.

சேர்ந்தவர்களை அழிக்கும் சினமாகிய நெருப்பு, அவனது இனம் என்னும் தெப்பத்தையும் சுட்டழிக்கும்.

நிலத்தைக் கையால் அறைந்த பின் துன்பப்படுவது போல, சினத்தைப் பொருளாகக் கொண்டவனுக்கும் துன்பம் வருவது நிட்சயமானது.

பல சுடர்களையுடைய பெரு நெருப்புச் சுடுவது போன்ற துன்பங்களை ஒருவன் செய்தாலும், அவன் மேல் கோபம் கொள்ளாதிருத்தல் நல்லது.

ஒருவன் தன் மனதில் கோபத்திற்கு இடம் கொடுக்காமல் இருப்பானேயானால், அவன் நினைத்த நன்மைகளையெல்லாம் நினைத்தவாறு பெறுவான்.

கடுங்கோபம் கொள்பவர் இறந்தவனைப் போன்றவர். கோபத்தை அடியோடு விட்டவர் துறவிக்கு ஒப்பானவர்.

எண்ணங்கள் ஆசைகளை வளர்க்கின்றன. ஆசைகள் நிறைவேற்றாவிட்டால் சினமாக உருவெடுக்கிறது. கோபப்படுபவர்களை அவதானித்துப் பார்த்தால், அது அவர்களின் நிறைவேறாத ஆசைகளாகவே இருக்கும். சினம் கொள்பவனுக்கும் பைத்தியக்காரனுக்கும் எது சொன்னாலும் விளங்காது. அடங்காத சினம் கொண்டவனைப் பைத்தியக் காரனைவிட மோசமானவனாகவே சமூகம் கருதும்.

## சூது

பொருள் வைத்து விளையாடும் விளையாட்டுக்கள் அனைத்தும் சூதெனப்படும். சூது குடியைக் கெடுக்கும். பிறரின் பொருளைக் கவரத் தூண்டும், குடும்பத்தைக் கவனிக்காத நிலையை உண்டு பண்ணும். அதனால் குடும்பம் கெட்டழிவதோடு குடும்பத்தின் மானமும் போய்விடும்.

சூதாடுபவர்கள் மனநோயுடையவர்களைப் போல எவ்வேளையிலும் நடந்து கொள்வர்.

வள்ளுவர் சூதாடுவதைப் பற்றிப் பின்வருமாறு கூறுகிறார்.

வெற்றி கிடைத்தாலும் ஒரு போதும் சூதாடுவதை விரும்பக் கூடாது. அந்த வெற்றி தூண்டிலை இரை என்று நினைத்து மீன் விழுங்குவதைப் போன்றது.

ஒரு பொருளைப் பெறுவதற்காக நூறு பொருளை இழக்கும் சூதாடிகளுக்கு, நன்மை பெற்று வாழும் சிறப்பான வாழ்க்கை உண்டாகாது.

ஒருவன் உருளுகின்ற சூதாட்டக் கருவியை உருட்டி இடைவிடாமல் சூதாடினால், அவனுடைய பொருள் யாவும் உருண்டோடிச் சென்று பகைவரை அடையும்.

ஒருவனுக்குத் துன்பங்கள் பலவற்றையும் உண்டாக்கி, அவனது புகழைக் கொடுக்கின்ற சூதைப்போல வறுமை தருவது வேறொன்றுமில்லை.

சூதாடும் கருவியையும், சூதாடும் இடத்தையும், சூதாடும் செயலையும் கைவிடாதவர், எல்லாப் பொருள்களையும் உடையவராக இருந்தாலும் ஈற்றில் ஒன்றுமில்லாதவராகி விடுவார்.

சூது என்று சொல்லப்படுகின்ற மூதேவியால் விழுங்கப்பட்டவர், வயிறு நிறைய உண்ண முடியாதவராகிப் பல துன்பங்களுக்குட்பட்டு வருந்துவர்.

சூதாடும் இடத்தில் ஒருவன் தனது காலத்தைக் கழிப்பானானால், அது அவனது மூதாதையர் தேடி வைத்த செல்வத்தையும் நற்பண்புகளையும் கெடுக்கும்.

சூது, உள்ள பொருள்களையும் அழித்துப் பொய் சொல்லும் நிலைக்கு ஆளாக்கி, அருளையும் கெடுத்துப் பல வகையான துன்பத்தைக் கொடுத்து வருத்தும்.

ஒருவன் சூதாடுவதை மேற்கொண்டால், அது புகழ், கல்வி, செல்வம், உணவு, உடை ஆகிய ஐந்தையும் அவன் அடைய முடியாத நிலையை உண்டாக்கும்.

பொருள் வைத்துச் சூதாடி அதை இழக்க இழக்க மேலும் மேலும் சூதாடவேண்டு மென்ற ஆசை அதிகரிக்கும். சூதாட்டம் போல, உடல் துன்பப்பட்டு வருந்த வருந்த உயிர் வாழ வேண்டும் என்ற ஆசை மிகுந்து வரும்.

## புறங் கூறாமை

ஒருவரின் செயல்களைப் பற்றி அவரில்லாத வேளைகளில் பிறருடன் கதைப்பதைப் புறங்கூறல் என்று சொல்லப்படும். இது தீராத பகையை ஏற்படுத்தும். பகையால் துன்பங்கள் பலவும் வந்து சேரும். இதனால் பொருட்சேதமும் துயரமும் ஏற்படும்.

புறங்கூறுவது பற்றி வள்ளுவர் பின்வருமாறு கூறுகிறார்.

ஒருவன் அறத்தைப்பற்றிப் பேசாது அறமல்லாதவற்றைச் செய்தாலும், மற்றவனைப்பற்றி புறங்கூறாமல் இருக்கிறான் என்று சொல்லப்படுவது நன்று.

அறத்தை அழித்துப் பேசித் தீயவற்றைச் செய்வதை விட, ஒருவன் இல்லாத இடத்தில் அவனைப் பழித்துப் பேசி நேரில் புகழ்ந்து பேசுதல் தீமையானதாகும்.

புறங்கூறிப் பொய்யாக உயிர்வாழ்வதை விட, வறுமையுற்று இறந்துவிடுதல், அறநூல்கள் கூறுகின்ற ஆக்கம் யாவும் தரும்.

ஒருவன் எதிரே இருக்கும் போது கடுமையான வார்த்தைகளைச் சொல்லலாம். அவன் இல்லாதவிடத்துப் புறங்கூறக் கூடாது.

பிறரின் பழியை ஒருவன் புறங்கூறினால், அவனது பழியைப் பிறர் நோக்கி அவனைப் பழிப்பர்.

மற்றவர்கள் மகிழும்படியாகப் பேசி நட்புக்கொள்ளத் தெரியாதவர்கள் தம்மைவிட்டு வெறுத்து நீங்கும்படியாகப் புறங்கூறி நண்பரைப் பிரித்துவிடுவர்.

புறங்கூறுவோனுடைய உடல் பாரத்தையும், ‘இவனையும் சுமப்பது எனது அறம்’ என்று கருதி நிலம் சுமக்கிறதோ..?

பிறருடைய குற்றங்களைக் காண்பதைப் போலத் தன் குற்றத்தையும் காண்பவனால், உயிர்களுக்கு வாழ்க்கையில் துன்பம் உண்டாகுமோ.?

## பயனில்லாத வார்த்தைகளைப் பேசுதல்

பயனில்லாத வார்த்தைகளை பேசுபவன் தன்னைத் தானே அழித்துக் கொள்பவனாவான். வார்த்தைகள் பெறுமதி மிக்கவை; அழியாது நீண்ட காலம் வாழ்பவை; உயிருள்ளவை, அதனால் சொற்களின் அர்த்தத்தை நன்கு உணர்ந்து அளவுடன் பேசுதல் வேண்டும்.

பயனில்லாத பேச்சுக்கள் பேசுபவனைப் பற்றி வள்ளுவர் இவ்வாறு கூறுகிறார்.

கேட்பவர் எல்லோரும் கோபப்பட்டு வெறுக்கும்படி பயனில்லாத சொற்களைப் பேசுபவன் எல்லோராலும் இகழப்படுவான்.

பலர் முன்நிலையில் பயனில்லாத சொற்களைப் பேசுதல், அறமில்லாத தீய செயல்களைச் செய்வதை விடத் தீமையானதாகும்.

ஒருவன் பயனில்லாத பொருளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அதைப்பற்றி விரிவாகச் சொல்லும் சொற்கள், அவன் அறமில்லாதவன் என்பதைத் தெரியப்படுத்தும்.

பயன் எதுவும் இல்லாத பண்பற்ற சொற்களைப் பலரிடத்தும் பேசுதல், அறத்தோடு பொருந்தாமல் நன்மைகளில் இருந்து நீங்கச் செய்யும்.

பயனில்லாத சொற்களை நல்ல பண்புடையவர்கள் பேசினால், அது அவர்களுடைய உயர்வான மேன்மையையும் மதிப்பையும் நீக்கிவிடும்.

பயனில்லாத சொற்களைப் பேசுகின்றவனை மனிதன் என்று சொல்லக்கூடாது; அவனை மக்களுள் பதர் என்று சொல்லல் வேண்டும்.

நன்மையைத் தராத அறமில்லாத சொற்களைச் சொன்னாலும் சொல்லலாம்; சான்றோர் அறமில்லாத சொற்களைச் சொல்லாமல் இருப்பது நன்மையானதாகும்.

அறியாமையைத் தருகின்ற மயக்கத்தில் இருந்து நீங்கிய அறிவை உடையவர், பயனற்ற சொற்களை மறந்தும் சொல்லமாட்டார்.

சொல்லும் பொழுது பயனுள்ள சொற்களை மட்டுமே சொல்லுங்கள். பயனில்லாத சொற்களைச் சொல்லாதீர்கள்.

## செய்நன்றி மறத்தல்

ஒருவர் செய்த சிறிய உதவியைக் கூட மறக்கலாகாது. செய்நன்றி மறந்தால், மறப்பவர்களின் வாழ்வில் எந்நாளும் துன்பங்கள் ஏற்படும். இவர்களுக்கு உதவக் கடவுள் கூட விரும்ப மாட்டார்.

வள்ளுவர் செய்நன்றி அறிதல் என்னும் அத்தியாயத்தில் பின்வருமாறு கூறுகிறார்.

தான் ஓர் உதவியும் முன் செய்யாதிருக்கப் பிறன் முன் வந்து தனக்குச் செய்யும் உதவிக்குக் கைம்மாறாக மண்ணுலகையும் விண்ணுலகையும் கொடுத்தாலும் அது அவ்வுதவிக்கு ஈடாகாது.

உதவி தேவைப்படுமிடத்து ஒருவன் செய்த உதவி சிறிதாக இருந்தாலும், அதன் பயனை ஆராய்ந்தால் அது உலகத்தை விட மிகப் பெரியதாகும்.

ஒருவன் பயன் கிடைக்கும் என்று நினைக்காமல் செய்த உதவியின் அளவு கடலை விடப் பெரியது.

ஒருவன் திணையளவாகிய உதவியைச் செய்த போதிலும் அதன் பயனை அறிந்தவர் அதனைப் பனையளவாகக் கொள்வர்.

முன்பு செய்யப்பட்ட உதவிக்கு கைம்மாறாகச் செய்யப்படும் உதவி, முன்பு செய்யப்பட்ட உதவியின் அளவை உடையதல்ல. அது உதவி செய்யப்பட்டவரின் பண்புக்கு ஏற்ற அளவை உடையது.

குற்றமற்றவர்களின் உறவை ஒருபோதும் மறக்கக்கூடாது. அதேபோலத் துன்பம் வந்த காலத்தில் உதவியவரின் நட்பை ஒருபோதும் விடலாகாது.

தான் துன்பமடைந்த வேளையில் அதைப்போக்கி உதவியவரின் நட்பைப் பெரியோர் ஏழேழு பிறவிகளிலும் மறவாமல் போற்றுவர்.

ஒருவர் செய்த நன்றியை மறப்பது நன்றன்று. அவர் செய்த தீமையை அப்பொழுதே மறப்பது நன்று.

கொலை செய்ததற்குச் சமமான தீமையை ஒருவர் எமக்குச் செய்தாலும், அவர் முன்பு செய்த ஒரு நன்மையை நினைத்துப் பார்த்தால் அத்தீமை பற்றிய துன்பம் மறைந்துவிடும்.

எந்தப் பழி, பாவங்களைச் செய்தவர்களும் தப்பிப் பிழைக்க வழியுண்டு. ஆனால் ஒருவர் செய்த உதவியை மறந்தவனுக்குத் தப்பிப் பிழைக்க வழி இல்லை.

இம்மையிலும் மறுமையிலும் தாமும் தம் குடும்பத்தினரும் இன்பமாக வாழ வேண்டும் என்று நினைப்பவர்கள் ஒரு பொழுதும் மேற்கூறப்பட்ட செயல்களைச் செய்தலாகாது.

## குடும்பம்

மேற்கூறப்பட்ட ஈசுரத்துரோகங்கள் எதையும் செய்யாது வாழ வேண்டும். குடும்பம் என்பது பெற்றோர்களும், பிள்ளைகளும், இரத்த உறவினர்களும் சேர்ந்து ஓரிடத்தில் வாழ்தல். இதை இல் வாழ்க்கை என்றும் சொல்லப்படும்.

ஈசுரத்துரோகங்கள் எதையும் செய்யாது வாழும் குடும்பம் உயர்ந்த நல்ல குடும்பம். இக் குடும்பம் எப்பொழுதும் மகிழ்வுடன் இருக்கும்.

நடுவு நிலைமையும், நாணமும் உயர் குடியில் பிறந்தவரிடத்தில் அல்லாமல் மற்றவர்களிடத்தில் இயல்பாக ஒருசேர அமைவதில்லை.

உயர் குடியில் பிறந்தவர்கள் ஒழுக்கமும் வாய்மையும் நாணமும் ஆகிய இம் மூன்றில் இருந்தும் தவறாமல் இயல்பாகவே நல்லவழியில் வாழ்வார்கள்.

உண்மையான உயர் குடியில் பிறந்தவர்களுக்கு முகமலர்ச்சி, கொடுத்து உதவும் தன்மை, இனிய சொல், பிறரை இகழ்ந்து கூறாமை ஆகிய நான்கு பண்புகளும் இயல்பாகவே இருக்கும்.

பல கோடி ரூபா மதிப்புள்ள பொருள்களைக் கொடுத்தாலும் உயர் குடியில் பிறந்தவர் தம் குடியின் சிறப்புக் குன்றுவதற்குக் காரணமான செயல்களைச் செய்யமாட்டார்கள்.

தான் பிறருக்குக் கொடுத்துதவும் தன்மை வறுமையால் குறைவடைந்த போதும், உயர்ந்த குடியில் பிறந்தவர்கள் கொடுத்துதவும் பண்பிலிருந்து விலக மாட்டார்கள்.

எம் மாசற்ற குடிப்பண்புகள் அற்றுப் போகும் படி வாழ மாட்டோம் எனக் கருதி வாழ்வோர், வஞ்சனை கொண்டு தகுதியில்லாத செயல்களை மறந்தும் செய்ய மாட்டார்கள்.

உயர்குடியில் பிறந்தவர்கள் செய்யும் குற்றம், வானத்து நிலவில் காணப்படும் களங்கத்தைப் போல எல்லோருக்கும் நன்கு தெரியும்.

ஒருவனது நல்ல பண்புகளுக்கிடையே பண்பற்ற செயல்கள் காணப்பட்டால், அவனது குடிப்பிறப்புப் பற்றிச் சந்தேகம் ஏற்படும்.

நிலம் எத்தன்மையது என்பதை அதில் முளைத்த முளை காட்டும். அது போல ஒருவனது வாய்ச் சொல் அவன் எக் குலத்தவன் என்பதைக் காட்டி விடும்.

ஒருவன் நன்மையடைய வேண்டுமானால் நாணம் உடையவனாக இருத்தல் வேண்டும். தன் குடி உயரவேண்டுமானால் அனைவரிடமும் பணிவு உள்ளவனாக நடந்து கொள்ளல் வேண்டும்.

ஈசுரத் துரோகங்கள் எதையும் செய்யாத உயர்ந்த குடும்பத்தில் பிறந்தவர்கள் தம் வாழ்க்கையை நல்ல முறையில் அநுபவித்து மற்றவர்களையும் நல்ல முறையில் வாழ உதவி செய்வார்கள். இக் குடும்பத்தில் உள்ளவர்கள் அனைவரும் இல் வாழ்க்கையில் மிகுந்த மகிழ்ச்சியுடையவர்களாக இருப்பார்கள்.

அனாதைகளுக்கும், ஏழைகளுக்கும், இரப்போர்க்கும் துணையாக இருப்பவன் இல்வாழ்வானே.

தென்புலத்தார், தெய்வம், விருந்தினர், சுற்றத்தவர் என்பவர்களுடன் தன்னையும் போற்றுதல் இல்வாழ்வானது தலையாய கடனாகும்.

பழிக்கு அஞ்சி அறவழியில் பொருள்சேர்த்து அதனைப் பகிர்ந்துண்டு வாழும் இல்வாழ்வானது பரம்பரை என்றும் அழியாது நிலைத்து நிற்கும்.

இல்வாழ்க்கையின் பண்பும் பயனுமாக இருப்பது அன்பும் அறச்செயல்களுமாம்.

ஒருவன் அறநெறிகளுக்குட்பட்டு இல்வாழ்வு வாழ்வதே சிறப்பானதாகும். அதை விடுத்துத் துறவு வாழ்வினை மேற்கொள்வதால் எந்தப் பயனையும் அவன் அடையமாட்டான்.

அறநெறி வழிநின்று இல்வாழ்வை மேற்கொள்பவன் பிற முயற்சிகளில் ஈடுபட்டோர் யாவரிலும் சிறந்தவன்.

பிறரையும் அறவழியில் வாழச்செய்து தானும் அறவழியில் இருந்து விலகாது வாழ்பவனது இல்வாழ்க்கை தவம் செய்வாரைவிட மிக்க வலிமை உடைய வாழ்க்கையாகும்.

அறம் என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது இல்லறமே ஆகும். அதுவும் மற்றவன் பழிக்கும் குற்றம் இல்லாமல் இருந்தால் மேலும் சிறப்புடையதாகும்.

அறநெறிக்குட்பட்டு இவ்வுலகில் வாழும் இல்வாழ்வான் வானுலகில் வாழும் தெய்வங்களைப் போலப் போற்றப்படுவான்.

இவ்வாறு இல்வாழ்வு வாழ்பவனின் மனைவியும் பிள்ளைகளும் நல்ல முறையில் வாழ்ந்து தம்மிடம் உதவி கோரி வருவோர்க்குத் தம்மாலான உதவிகளைச் செய்வார்கள்.

இல்வாழ்க்கைக்கு ஏற்ற நற்பண்புகளை உடையவளாகித் தன் கணவனின் பொருளாதார வளத்திற்கேற்ப வாழ்க்கை நடத்துகின்றவளே வாழ்க்கைத்துணை ஆவாள்.

இல்வாழ்க்கைக்குத் தக்க நற்பண்புகள் இல்லாளிடம் இல்லாவிட்டால், ஒருவனுடைய வாழ்க்கையில் பல்வேறு விதமான வசதிகள் இருந்தாலும் அதனால் பயன் எதுவும் ஏற்படமாட்டாது.

நற்குணங்களையுடைய இல்லாள் வாழும் வீட்டில் இல்லாதவையென எதுவும் இருக்கமாட்டாது. நற்குணங்கள் அவளிடம் இல்லையாயின் அவ்வீட்டில் எதுவும் இராது.

கற்பு என்னும் உறுதி இல்லாளிடத்து இருக்குமேயானால், அவளைவிடப் பெருஞ்செல்வம் கணவனுக்கு வேறு இல்லை.

தெய்வத்தைப் போல தனது கணவனை மதித்து நடக்கும் பெண் பெய் என்று சொல்லும்போது பெய்யும் மழைக்கு ஒப்பானவள் ஆவாள்.

தன்னையும் காத்து தனது கணவனின் நலன்களையும் பேணிக்காத்து அன்பாகப் பேசி வாழ்கின்றவளே பெண்.

மகளிரை அடக்கிச் சிறைக் கைதிகளைப் போல் நடத்துவதால் எந்தப் பயனும் ஏற்படமாட்டாது. அவர்கள் தமது நிலையைத் தாமே உணர்ந்து தம் குடும்பப் பெருமையைக் காத்துக்கொள்ளல் வேண்டும்.

கணவனின் மன இயல்புகளை அறிந்து அவனது மனம் கோணாமல் இல்லறம் நடத்தும் பெண்ணானவள் சிறப்புகள் பல உடைய மேலுலக வாழ்வைப் பெறுவாள்.

கணவனது புகழைக் காக்க விரும்பும் மனைவி இல்லாதவர்களுக்கு, இகழ்ந்து பேசும் பகைவர் முன் காளை போல் நடக்கும் கம்பீரநடை இல்லை.

மனைவியின் நற்பண்புகளே இல்வாழ்க்கைக்கு மங்கலம் என்றும் அதன் பேறாக நல்ல மக்களைப் பெறுதலே நல்லணிகலம் என்றும் பெரியோர் கூறுவர்.

நல்ல முறையில் குடும்பம் நடத்தும் இல்வாழ்வான் நல்ல பிள்ளைகளைப் பெறுவான். அப்பிள்ளைகளும் நல்ல முறையில் வாழும்

அறிவுடைய மக்களைப் பெறுவதை விடப் பெரும்பேறு எவையும் இல்லை.

பழியில்லாத நல்ல பண்புடைய மக்களைப் பெற்றோரை ஏழு பிறவிகளிலும் தீவினைகள் எவையும் சென்று சேராது.

தன்னுடைய பிள்ளைகள் தன்னுடைய பொருள்கள் என்று அறிஞர் கூறுவர். மக்களாகிய அவர்தம் பொருட்கள் அவரவர் நல்வினை தீவினைப் பயனால் வந்து சேரும்.

தந்தை மகனுக்குச் செய்யும் நல்லுதவி, கற்றவர் மத்தியில் தன் மகன் முந்தியிருக்கும்படியாக அவனை கல்வியில் மேன்மை அடையச் செய்தலாகும்.

தம் மக்களின் அறிவுடைமை, தமது குடும்பத்தினருக்கு இன்பம் பயப்பதைவிட உலகத்து உயிர்களுக்கெல்லாம் இன்பம் பயப்பதே சிறப்பானது.

தன்மகனை நற்பண்புள்ளவன் எனப்பிறர் சொல்லக் கேள்வியுற்ற தாய், தான் அவனைப் பெற்ற காலத்தில் அடைந்த மகிழ்ச்சியை விடப் பெரிதும் மகிழ்வாள்.

மகன் தன் தந்தைக்குச் செய்யும் கைம்மாறு, இவனுடைய தந்தை இவனை மகனாகப் பெற என்ன தவம் செய்தாரோ என்று பிறர் புகழ்ந்து சொல்லும் சொல்லாகும்.

இல்வாழ்வான் தனது மனைவி பிள்ளைகளுடன் நல்ல முறையில் குடும்பம் நடத்துதல் வேண்டும். மனைவியானவள் கணவனது சொற்களைக் கேட்டு அதன்படி நடத்தல் வேண்டும். கணவன் மனைவியைப் புறக்கணிக்காது அவளது வார்த்தைகளைக் கேட்டு நடத்தல் வேண்டும். குடும்பத்தில் கணவனோ, மனைவியோ உயர்ந்தவர்கள் அல்லர். இருவரும் சமமானவர்கள். இதைக் குடும்பத்தவர்கள் அனைவரும் உணர்ந்து கொள்ளல் வேண்டும். எப்பொழுதும் கணவன் மனைவி மீது மட்டற்ற அன்பைச் செலுத்தல் வேண்டும். அது போல மனைவியும் கணவன் மீது மட்டில்லா அன்பைச் சொரிதல் வேண்டும்.

கணவன் மனைவியின் அழகு, பொலிவு, பெண்மை ஆகியவற்றிற்கு அடிமையாகி அவளே தஞ்சம் என்றிருத்தலாகாது. அப்படி இருந்தால் அவன் ஈசுரத்துரோகம் செய்பவனாக மாறிவிடுவான்.

மனைவியிடம் பெறும் இன்பத்தை விரும்பி அவளின் சொற்படி நடப்பவர் சிறந்த பயனை அடைய மாட்டார்; மக்களாலும் மதிக்கப்படமாட்டார்.

தனது கடமைகளைப் பெரிதாக விரும்பாமல் மனைவியின் பெண்மையைப் பெரிதாக மதிப்பவனின் செல்வம் வெட்கத்திற்குரியதாகிப் பெரும் வேதனையைத் தரும்.

மனைவியிடம் தாழ்ந்து நடக்கும் இழிந்த நிலை ஒருவனுக்கு எப்பொழுதும் நல்லவரோடு சேர்ந்து இருக்கும் போது நாணத்தைத் தரும்.

மனைவிக்கு அஞ்சி நடக்கின்ற மறுமைப் பயன் இல்லாத ஒருவன் செயலாற்றும் ஆண்மைத் தன்மையைப் பெற்றிருந்தாலும் ஒரு போதும் அவன் பெருமை அடைய மாட்டான்.

மனைவிக்குப் பயந்து வாழ்கின்றவன் எப்பொழுதும் நல்லவர்களுக்கு நன்மையானவற்றைச் செய்வதற்கும் அஞ்சுவான்.

மனைவியின் தோளுக்கு அஞ்சி வாழ்கின்றவர் தேவரைப் போலச் சகல சௌகரியங்களும் பெற்றுச் சிறப்பாக வாழ்ந்தாலும் பெருமை இல்லாதவரே ஆவார்.

மனைவிக்கு அடிமைப்பட்டு அவளின் ஏவலைச் செய்து வாழ்கின்றவனுடைய ஆண்மையை விட, இயல்பாக நாணத்தை உடைய பெண்மையே பெருமைக்கு உரியது.

மனைவியின் விருப்பப் படி நடப்பவர், தம் நண்பர்களின் குறைகளையும் நீக்கமாட்டார், பிறருக்கு நன்மையும் செய்யமாட்டார்.

அறச் செயலும் அதற்குக் காரணமாக அமைந்த பொருள் தேடும் முயற்சியும் மற்றக் கடமைகளும் மனைவிக்கு அடிமையாகி அவள் ஏவுவதைச் செய்வோரிடத்தில் இல்லை.

எதையும் நன்றாக எண்ணி முடிவு எடுக்கும் மன உறுதி உள்ளவர்களுக்கு மனைவியின் ஏவலுக்குக் கட்டுப்பட்டு நடக்கும் பேதைமை இல்லை.

கணவனும் மனைவியும் எப்பொழும் தமது உறவினர்களுடனும். தம்மோடு பழகுபவருடனும் அன்போடு பேசுதல் வேண்டும்.

அன்பில்லாதவர்கள் எல்லாப் பொருட்களையும் தம்பொருள் என உரிமை கொண்டாடுவர். அன்புள்ளவர்கள் தமது உடலால் பிறருக்கு சேவை செய்து வாழ்வர். (உடலுறுப்புக்களையும் தானமாக வழங்குவர்.)

அன்பு எல்லோரிடமும் விருப்பம் உடையவராக வாழும் தன்மையைத் தரும். அந்த அன்பு, நட்பு என்ற அளவற்ற சிறப்பினையும் தரும்.

உலகில் இன்பமாக வாழ்கின்றவர்கள் அடையும் சிறப்பு, எல்லோரிடத்தும் அன்பு உடையவராகிப் பொருந்தி வாழும் வாழ்க்கையின் பயன் என்று அறிஞர் கூறுவர்.

அன்பு வழியில் இயங்கும் உடம்பே உயிர் உள்ள உடம்பாகும். அன்பு இல்லாத உடம்பு எலும்புகளைத் தோலால் போர்த்த வெற்றுடம்பு ஆகும்.

தம்மை நாடி வருவோரைப் போற்றி அவர்களது கோரிக்கைகளை நிறைவேற்றி வைப்பவர்களின் வாழ்க்கை என்றும் இன்பமுள்ளதாக இருக்கும்.

முகம் மலர்ந்து மற்றவர்களை வரவேற்கும் குடும்பத்தவர்களின் வீட்டில் திருமகள் மகிழ்வுடன் வீற்றிருப்பாள்.

பிற உயிர்கள் மீது அன்புவைத்துள்ளவர்கள் கடவுள்களின் அவதாரங்கள்.

அறவழியில் பொருள் தேடி, அதைப் பகுத்துண்டு வாழ்பவர்கள் தான் உலகில் மேலானவர்கள்.

அன்பு நிறைந்த மனையாளைப் பெற்றவன் மஹாலக்ஷ்மியைப் பெற்றவனாவான்.

அன்பு நிறைந்த குடும்பத்தைப் பெற்றவர்கள் ஐஸ்வர்ய லக்ஷ்மியை பெற்றவர்களாவர்

உலகையே அடைய வேண்டுமானாலும் அன்பு கொடுக்கும். அனைவரிடமும் அன்பு செலுத்தி வாழ்பவர்கள் முடி சூடா மன்னர்களாகவே வாழ்வர்.

இவ்வாறு இந்து தத்துவ நூல்கள் கூறுகின்றன.

வேதங்கள் இந்துக்களின் மூலநூல்கள் அவை மக்களை நான்கு வர்ணத்தினராகப் பிரித்து வைத்துள்ளன. எந்த நாட்டிலும் இந்த நான்கு வர்ணத்திற்கு மேற்பட்ட வர்ணத்தினர் எவரும் இல்லை.

பிராமணன், சத்திரியன், வைசிகன், சூத்திரன் என்பனவே அந்த நான்கு வர்ணங்களும் ஆகும்.

பிராமணர் வேதமோதல், வேதம் ஒதுவித்தல், யாகம் செய்தல், யாகம் செய்வித்தல், தானம் கொடுத்தல், தானமேற்றல் என்ற ஆறு தொழில்களைச் செய்கின்றனர்.

சத்திரியர் வேதமோதல், யாகம் செய்தல் தானம் கொடுத்தல், பூமியைக் காத்தல், யானை, குதிரை தேர்ப்படைப் பயிற்சி பெறுதலும் பராமரித்தலும் ஆகிய ஆறு தொழில்களைச் செய்வர்.

வைசிகர் வேதமோதல், யாகம் செய்தல், தானங் கொடுத்தல், பசுக்களைக் காத்தல், வாணிபஞ் செய்தல், பயிரிடுதல் ஆகிய ஆறு தொழில்களைச் செய்வர்.

சூத்திரர் பயிரிடுதல், வணிகஞ் செய்தல், முதல் மூன்று வர்ணத்தாரும் ஏவியதைச் செயவர்.

சூத்திரர்கள் இதிகாச புராணங்களை ஒதுவதற்கும், வேதத்தின் பொருளைக் கேட்பதற்கும், பிதிர்க்கிரிகைகள் செய்வதற்கும், தானம் கொடுப்பதற்கும் உருத்துடையவர்கள். சூத்திரர்களில் மது மாமிசம் உண்ணாதோர் சற் சூத்திரர் என்றும், அவற்றை உண்போர் அசற் சூத்திரர் என்றும் கொள்ளப்படுவர்.

தம்தம் வர்ணத்துக்குள்ளேயே அவ்வவ் வருணத்தவர் திருமணம் செய்து கொள்ளல் வேண்டும். பிராமணன் தன்னிலும் தாழ்ந்த மூன்று வர்ணத்துப் பெண்களையும், சத்திரியன் தன்னிலும் தாழ்ந்த இரண்டு வர்ணப் பெண்களையும், வைசிகன் தன்னிலும் தாழ்ந்த ஒரு வர்ணப் பெண்களையும் விவாகம் செய்தால் அவர்களுக்குப் பிறக்கும் பிள்ளைகள் அனுலோமர் என அழைக்கப்படுவர்.

சத்திரியர்கள் தமக்குத் தாழ்ந்த இரு வருணத்தினரையும், தம்மில் உயர்ந்த ஒரு வர்ணத்தினரையும், வைசிகர் தம்மில் தாழ்ந்த ஒரு வர்ணத்தினரையும், தன்னில் உயர்ந்த இரு வர்ணத்தினரையும், சூத்திரர்கள் தம்மில் உயர்ந்த மூன்று வர்ணத்தினையும் திருமணம் செய்து

கொண்டால் அவர்களுக்குப் பிறக்கும் பிள்ளைகளை பிரதிலோமா் என்பா். நான்கு வா்ணத்தினரும் பிறன் மனையாளுடன் கூடிப் பிள்ளைகளைப் பெற்றால் அவா்கள் அந்தராளா் எனப்படுவா். அனுலோமா், பிரதிலோமா், அந்தராளா் முதலியோா் நான்கு வா்ணத்திரைக் கூடிப் பிள்ளைகளைப் பெற்றால் அவா்களை விராத்தியா் என்றழைப்பா்

இது தவிர தொழில் செய்பவா்களுக்குப் பிரத்தியேகப் பெயா்கள் சூட்டப்பட்டுள்ளன.

மரவேலை செய்பவன் தச்சன்.

இரும்பு வேலை செய்பவன் கொல்லன்.

பொன்னாபரணங்கள் செய்பவன் தட்டான்.

துணி துவைப்பவன் வண்ணான்.

இவை தொழிற் பெயா்களே அன்றி சாதிகள் அல்ல என்று வேதங்கள் கூறுகின்றன.

வேதகாலத்தை விட இன்று வசதிகள் பெருகிவிட்டன.

தொழில்களும் பெருகி விட்டன.

அன்று பிராமணா்களும் சத்திரியா்களும் வைசிகா்களுமே வசதியாக வாழ்ந்தனா். இன்று மேற்கூறிய மூன்று வா்ணத்தினரை விடப் பல சூத்திரா்கள் வசதியுடன் வாழ்கின்றனா். இருப்பினும் மனித மனங்கள் எள்ளளவும் மாறவில்லை.

வேதகாலத்தில் போட்டி, பொறாமை, வஞ்சகம், சூது போன்றவற்றுடன் வாழ்ந்த மனிதன் இன்றும் அதுபோலவே வாழ்கின்றான்.

அன்று வாழ்ந்த மனிதா்களைப் பற்றி இதிகாச புராணங்கள் கூறுகின்றன.

இன்று வாழும் மனிதர்களை நாம் நேரில் சந்திக்கின்றோம். புராண இதிகாச நாயகர்களைப் பற்றிப் படித்துள்ளோம்.

இவர்களுக்குள் வேறு பாட்டைக் காண முடியவில்லை.

இன்றும் பாண்டவர்கள் வாழ்கிறார்கள், இராமர்கள் வாழ்கிறார்கள்

அது போலவே கௌரவர்கள் வாழ்கிறார்கள், துச்சாதனன்களும் வாழ்கிறார்கள், இந்திரர்களும் வாழ்கிறார்கள்.

காலத்தாலோ கடவுளாலோ இவர்களை மாற்ற முடியவில்லை

குடும்பத் தலைவன் இராமனைப் போலவும், தருமனைப் போலவும் வாழுதல் வேண்டும்.

சகோதரர்கள் பாண்டவர்களைப் போல வாழ வேண்டும்.

நெறிமுறைகள் வழுவாது வாழும் குடும்பத்தில் நல்ல குழந்தைகள் பிறக்கும்.

குழந்தை பிறந்து பத்தாவது அல்லது பன்னிரண்டாவது நாளில் குழந்தைக்குப் பெயர் சூட்டுதல் வேண்டும். பெயரிடும் போது பிறந்த நட்சத்திரத்திற்குரிய பாத எழுத்து முதலில் வரக்கூடியதாகப் பெயர் சூட்டுதல் வேண்டும். தனது குலதெய்வத்திற்குரிய நாமங்களில் ஒன்றைக் குழந்தைக்கு சூட்டுவது உத்தமமானது. எண் சோதிடத்தை நம்புவோர் அதற்கேற்ற வகையில் குலதெய்வத்தின் பெயரைச் சூட்டலாம்.

தாய் தனது குழந்தைக்குத் தாய்ப்பால் ஊட்டுவதே நன்று. அப்படி ஊட்ட முடியாத விடத்து 31 அல்லது 32 ஆவது நாள் பசுப்பால் ஊட்டலாம்.

குழந்தை பிறந்து 6,8,10 ஆவது மாதம் அல்லது ஆண்டு நிறைவில் ஆண் குழந்தைகளுக்கு அன்னம்

கொடுக்கலாம்.7,9,11 ஆவது மாதத்தில் பெண் குழந்தைகளுக்கு அன்னம் கொடுக்கலாம்.

மூன்றாம் மாதம் அல்லது ஐந்தாம் மாதம் அல்லது ஏழாம் மாதம் முடியெடுக்கலாம். உத்தராயணத்தில் முடியெடுப்பது உத்தமம். தட்சணாயணம் சிறப்பில்லை. தை, மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி, ஆனி மாதங்களில் ஒன்றில் முடி எடுப்பது நல்லது. திங்கள், புதன், வியாழன், வெள்ளிக் கிழமை உத்தமமானது.

ஐந்து வயது வரை குழந்தைகள் பெற்றோரின் அரவணைப்பில் இருத்தல் வேண்டும். குழந்தைகள் வெளியுலகைப் பார்த்துப் புரிந்து கொள்ளும் காலம் அது. நல்லது கெட்டது அறியாத பருவம் அது. ஆதனால் குழந்தைகள் தாம் காணும் பொருட்களை யெல்லாம் ஆய்வு செய்ய முற்படும். அதற்கான காரணங்களைக் கேட்கும். அவற்றிற்கெல்லாம் பெற்றோர் தகுந்த காரணங்களைக் கூறுதல் வேண்டும். எவ்வேளையிலும் தவறான கருத்துக்களைக் கூறுதல் கூடாது. ஏனெனில் அப்பருவத்தில் ஏற்படும் அனுபவங்கள் தான் குழந்தையின் எதிர்காலத்தை நிர்ணயிப்பவை.

குழந்தைகள் என்றும் குறும்புகள் மிக்கவை. அவை சில சமயம் பெற்றோருக்கு நெருக்கடிகளையும், துன்பங்களையும், சிக்கல்களையும் கொடுக்கும். இவ்வேளைகளில் பெற்றோர் மிகுந்த கவனத்துடன் நடந்து கொள்ளல் வேண்டும். இதற்காகத் தண்டிப்பதோ, பயமுறுத்துவதோ கூடாது. சில பெற்றோர் பேய், பிசாசு, பூதம் என்று கூறிப் பயமுறுத்துவர்.

பயமில்லாது வாழும் குழந்தைகள் தான் பிற்காலத்தில் பெரிய பெரிய அறிஞர்களாக வாழ்ந்திருக்கிறார்கள்.

பயம் பல விதமான துன்பங்களைக் கொடுக்கும்.

பயம் ஒருவனைத் தீர்க்கமான முடிவு எடுக்கவிடாது.

ஒரு தொழிலைச் செய்ய விடாது.

மற்றவர்களுடன் கூடி வாழ விடாது.

தான தர்மம் செய்ய விடாது.

எந்நேரமும் எச்சரித்துக் கொண்டிருப்பதால் நிம்மதியாக வாழ விடாது.

பயம் மனதைக் கெடுத்து அதீத கற்பனைகளை உருவாக்கி வாழ்க்கையைக் கெடுக்கும்.

எனவே குழந்தைகளைப் பயப்படாது துணிவுடன் வாழ வைக்கும் நடவடிக்கைகளில் பெற்றோர் ஈடுபடல் வேண்டும்.

எல்லோரையும் மதிப்பதற்குக் கற்றுக் கொடுத்தல் வேண்டும். விளையாட்டுக்குக் கூட குழந்தைகளுக்குக் கீழ்த்தரமான சொற்களைச் சொல்லிக் கொடுத்தல் கூடாது.

மற்றவர்களை மதிக்காத குழந்தைகள் பிற்காலத்தில் பெற்றோரையும் மதிக்க மாட்டார்கள்.

ஐந்து வயதில் பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்லுதல் வேண்டும். குழந்தையாக இருக்கும் பொழுது வீட்டில் பழகிய பழக்கங்கள் தான் பாடசாலையிலும் இருக்கும். பிள்ளையின் முதல் ஆசிரியர் தாய் என்பதை உணருதல் வேண்டும்.

பிள்ளைகள் முதலில் தம் குடும்பத்தினரைப் பார்த்தும், பின்பு அயலில் உள்ளவர்களைப் பார்த்துமேதம் பழக்க வழக்கங்களை உருவாக்கும். அதனால் குடும்பத்தினர் மிகவும் அவதானமாக நடந்து கொள்ளல் வேண்டும்.

பெற்றோர் தமது பிள்ளைகளின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு பிள்ளையின் முன்னேற்றத்திற்காக உழைத்தல் வேண்டும். ஒருவன் பெறும் செல்வங்கள் அனைத்திலும் சிறந்த செல்லம் மக்கட் செல்வம்.

மிக மிகத் தாழ்ந்தவர்கள் உயர்வடைய இரண்டு வழிகள் உண்டு.

ஒன்று பொருள்களைத் தேடுதல், மற்றது பிள்ளைகளுக்கு கல்வியறிவூட்டல்.

எனக்குத் தெரிந்த ஒருவர் மிகமிகத் தாழ்ந்தவர். பெற்றோரோ உறவினர்களோ அவரை மதிப்பதில்லை. அவர் மிகவும் கஷ்டப்பட்டுப் பொருட்களைத் தேடினார். அவரை அவமதித்தவர்கள் எல்லோரும் அவரைத்தேடி வந்து புகழ்ந்து பொருள் பெற்றனர்.

முன்பு நடந்ததை அவர் நினைத்துப் பார்த்தார். ஊர்க்கோயிலில் திருவிழாக்கள் நடைபெறும் போது அவர் அர்ச்சனைத் தட்டுடன் நிற்பார். கோயிற் குருக்கள் அவரிடம் அர்ச்சனைத் தட்டைப் பெறாது பணமுள்ளவர்களிடமும், புகழுள்ளவர்களிடமும் அர்ச்சனைத் தட்டைப் பெறுவார்.

கோயில் கட்டிட வேலைகளுக்குப் பணம் கேட்டு யாரும் அவரின் வீட்டுக்கு வந்தது கிடையாது. அவர் கோயிலுக்கு ஏதாவது கொடுக்க வேண்டும் என்று நினைத்தால் உண்டியலில் பணம் போடுவார். இல்லாவிட்டால் தேங்காய் அடித்துக் கற்பூரம் கொழுத்துவார்.

இன்று அவர் பெரிய பணக்காரர். அவர் கோயிலுக்குச் செல்லாவிட்டால் பூசை நடைபெறாது.

அவர் என்னைக் காணும் வேளைகளில் சொல்வார், "ஐயா, எல்லாம் காசுக்குப் பின்னால் தான்"

நான் சிரிப்பேன். அவர் பரம ஏழையாக இருந்த காலத்திலும் அவரை நான் மதித்தேன். உதவிகள் செய்தேன். எந்தத்தகுதியில்லாதவனும் விதிவசத்தால் பொருளுடையவனாக

மாறுவான். அப்பொழுது கேவலப்படுத்தியவர்களிற் பலர் தமது தேவைகளுக்காக அவனைப் புகழ்வார்கள் என்று எனக்குத் தெரியும்.

பொருள் உடையவர்கள் அப்பொருள் மூலம் எல்லாவற்றையும் தேடிக்கொள்ளமுடியும். அவர்கள் அறிவையும் தேடிக் கொள்வார்கள். நான் கூறிய நண்பர் மழைக்குக் கூடப் பாடசாலையில் ஒதுங்கி நிற்காதவர். பணம் வந்த பின்பு சமூகம் அவரை மதிக்கத் தொடங்கியது. அவரைக் கூட்டங்களில் பேச வற்புறுத்தியது. அந்த வற்புறுத்தல் அவரை அறிவாளியாக்கியது.

751. பொருள்அல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருள் அல்லது இல்லை பொருள்.

ஒரு பொருளாக மதிக்கத் தகாதவரையும் மதிக்கத் தக்கவராகச் செய்யும் தன்மை வாய்ந்தது செல்வத்தைத் தவிர வேறு எதுவும் இல்லை.

752. இல்லாரை எல்லாரும் எள்ளுவர்; செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு.

பொருள் இல்லாமல் வேறு பல நலன்கள் உள்ளவனாக இருந்தாலும் அவன் மதிக்கப்படுவது இல்லை; வேறு நன்மைகள் எதுவும் இல்லா விட்டாலும் பொருள் உள்ளவனை எல்லோரும் மதிப்பர்.

753. பொருளென்னும் பொய்யா விளக்கம் இருள் அறுக்கும்
எண்ணிய தேயத்துச் சென்று.

பொருள் என்று சொல்லப்படுகின்ற நல்ல விளக்கு, நினைத்த இடங்களுக்கெல்லாம் சென்று எண்ணிய படி குறைகளைத் தீர்க்கும்.

757. அருள்என்னும் அன்புஈன் குழவி பொருள்என்னும்
செல்வச் செவிலியால் உண்டு.

அன்பினால் பெற்றெடுக்கும் அருள் என்ற குழந்தை, பொருள் என்று சொல்லப்படுகின்ற செவிலித்தாயால் வளர்வதாகும்.

759. செய்க பொருளை; செறுநர் செருக்கறுக்கும்
எஃகுஅதனின் கூரியது இல்.

ஒருவன் பொருளைச் சேர்க்க வேண்டும், அவனுடைய பகைவரின் செருக்கை அடக்கவல்ல கூரிய ஆயுதம் பொருளன்றி வேறு இல்லை.

760. ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு எண்பொருள்
ஏனை இரண்டும் ஒருங்கு.

சிறந்ததாகிய பொருளை மிகுதியாகத் தேடியவர்களுக்கு அறமும் இன்பமும் ஆகிய இரண்டும் ஒன்றாகச் சேரும் எளிய பொருள்களாகும்.

பொருளைப்பற்றி வள்ளுவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

பொருளையும் அறிவையும் பெற வேண்டுமென்று எவன் நினைக்கிறானோ அவன் அவற்றைப் பெற்றுக் கொள்வான்.

எனது இன்னொரு நண்பர் கூலிவேலை செய்பவர். அவருக்கு ஐந்து பெண்பிள்ளைகள். அதற்காக அவர் ஒருநாளும் கவலைப்பட்டதில்லை. என்னிடம் உதவிகள் பெறுவார். குறித்த தினத்தில் கொண்டு வந்து தந்து விடுவார். பின் கடன் பெறுவார். அவர் கேட்கின்ற போதெல்லாம் நான் கொடுக்கத் தவறுவதில்லை.

ஐந்து பெண்களும் படிப்பில் கெட்டிக்காரிகள். அத்துடன் தகப்பனுடன் சேர்ந்து தோட்டத்தில் வேலை செய்வார்கள்.

பெண்கள் வளர்ந்த பின்பு எனது நண்பர் என்னிடம் கடன் பெறுவதில்லை. ஐந்து பெண்களும் வீட்டிலேயே தொழில்கள் செய்தனர். ஒருத்தி பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பாள். இன்னொருத்தி கோழி வளர்த்தாள். இன்னொருத்தி தையல் வேலை செய்தாள். மற்ற இரு பெண்களும் அவர்களுக்கு உதவியாக இருந்தனர்.

காலப்போக்கில் ஐவரும் உயர்ந்த பதவிகளைப் பெற்றனர். இப்பொழுது எனது நண்பர் இருபது இலட்ச ரூபா பெறுமதியான மோட்டார் வாகனத்தில் கோயிலுக்கு வருகிறார்.

பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு அறிவை ஊட்டல் வேண்டும்.

அறிவு, அழிவுவராமல் காக்கும் கருவியாகும். அத்துடன் பகை கொண்டவர் அழிக்க முடியாத பலம் பொருந்திய உள்ளரனும் ஆகும்.

அறிவுள்ள மக்களைப் புகழுள்ளவர்களாக வாழப் பெற்றோர் உதவி செய்தல் வேண்டும். புகழுடன் வாழும் பெருமை பற்றி வள்ளுவர் பின்வருமாறு கூறுகிறார்.

233. ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பது ஒன்று இல்.

ஒருவன் பெறும் உயர்வு மிகுந்த புகழைத்தவிர, இவ்வுலகில் நிலையான பொருளாக அழியாமல் நிலை நிற்பது வேறொன்றும் இல்லை.

234. நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்
போற்றாது புத்தேள் உலகு.

ஒருவர் இந்த உலகில் நிலைத்து நிற்கும் புகழைப் பெற்றால் வானுலகம் தேவரைப் போற்றாமல் புகழ் பெற்றவரையே போற்றும்.

புகழோடு வாழாதவன் வாழக்கூடாது என்கிறார் வள்ளுவர்.

236. தோன்றின் புகழோடு தோன்றுக; அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.

புகழைத் தேடிச் செல்லல் ஆகாது. தன்னைத் தான் புகழ்தலும் ஆகாது. புகழ் தேடிவருமாறு வாழ வேண்டும்.

தனக்குரிய கடமைகளை உரிய முறையில் உரிய நேரத்தில் செய்து முடித்தல் வேண்டும்.

பாகுபாடு காட்டாது செயல் புரிதல் வேண்டும்.

செயலின் பயனை எதிர் பார்க்கக்கூடாது.

மகிழ்வுடன் இன்முகத்துடனும் கடமையைச் செய்தல் வேண்டும்.

கூலியை எதிர் பார்க்கக் கூடாது.

எப்பொழுதும் மற்றவர்களுக்கு உதவி செய்தல் வேண்டும்.

பதவிகளைத் தேடி அலைதல் கூடாது.

செயல் வீரனைத் தேடிப் பதவிகள் வரும் என்ற நினைப்புடன் செயல் புரிதல் வேண்டும்.

கூலி வேலை செய்தாலும் மேற்கூறியவாறு செய்தால் பணம், பொருள், பதவி, புகழ் யாவும் தேடி வரும்.

இதற்கு உதாரணமாக நான் வாழ்ந்தேன்.

இலங்கையில் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் அதிக மாணவர்கள் சித்தியடைந்தது நல்லூர்க் கோட்டத்தில் உள்ள யாழ் இந்து ஆரம்ப பாடசாலையிலாகும். இது எப்படிச் சாத்தியமானது? அயராத உழைப்பும். நடுவுநிலையும், விடா முயற்சியும் கொண்ட யாழ்ப்பாணம் இந்து ஆரம்பபாடசாலையின் அதிபர் திரு.வே.ஞானகாந்தனின் செயற்பாடே. அவர் இந்துக்

கல்விப் பாரம்பரியத்தை உருவாக்கினார். யாழ்ப்பாணத்தின் கல்விப் பாரம்பரியத்தைத் தனது செயலால் முறியடித்தார். அவர் நல்லூர்க் கோட்ட அதிபர் சங்கத் தலைவராகப் பல ஆண்டுகளாகப் பணியாற்றி வருகிறார். அவரைப் பற்றியும், அவரது நிர்வாகத் திறமை பற்றியும் அவர் சமூகத்துடனும் ஆசிரியர்களுடனும் நடந்துகொள்ளும் முறைகள் பற்றியும் அவதானித்த பின்பு நான் ‘‘அன்பான வேண்டுகோள்’’ என்ற நூலை எழுதினேன். அவரது பெருமுயற்சியால் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் அதிபர் திரு.வீ.கணேசராசா தலைமையில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் 22.03.2009 அன்று எனது மணிவிழா கொண்டாடப்பட்டது. அப்படி ஒரு விழா இதுவரை கொண்டாடப்படவில்லை.

செயல் வீரனுக்குப் புகழ் தேடிவரும் என்பதற்கு உதாரணம் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. க.கணேஷ் அவர்களின் பாராட்டுச் செய்தியாகும்.

‘‘தொட்டதனைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்கு கற்றனைத்தூறும் அறிவு’’ என்ற வள்ளுவர் குறளுக்கு இலக்கணமாய் வாழ்ந்துகாட்டி, மணிவிழாக் கண்ட நல்லூர் கோட்ட கல்விப்பணிப்பாளர் திரு. கே. வி.குணசேகரம் அவர்கள், கல்வித்துறையில் ஆற்றிய அரும்பணிகள் மகத்தானவை. கற்றோம், பட்டம் பெற்றோம், தொழிலொன்று பெற்றோமென்பதோடு அமையாது தாம் பெற்ற கல்வியைத் தனது அறிவுத் தேடலின் மூலம் அற்புதமான இலக்கியங்களைப் படைத்துத் தனது அடையாளத்தைக் கல்விச் சமூகத்தில் தனித்துவப்படுத்தியுள்ளார். சிறுவர் முதல் பெரியோர் வரை எந்தத் தரப்பினர்க்கும் ஏற்ற வகையில் ஆக்கங்களைத் தந்த

இவர், தர்மத்தின் வழி வழுவாது நிற்கும் சமூகமொன்றை உருவாக்கும் நன்நோக்கில் ஔவையின் ஆத்திசூடியை, வள்ளுவனின் குறளை, கண்ணனின் கீதையை இலகுநடையில் கதைகளாக்கி எவர்க்கும் விளங்க வைத்த பாங்கு போற்றற்குரியது. நல்லாசானாய் சேவையை ஆரம்பித்து நன்மாணாக்கரை உருவாக்கிய கே. வி. குணசேகரம் அவர்கள் பின்நாளில் நல்லூர்க் கோட்டக் கல்விப் பணிப்பாளராகச் சேவையாற்றும் போது கல்வித்துறையில் சமூகத்தின் நலன் சார்ந்த சாதனைகள் பல புரிந்து நாளைய சந்ததிக்கு நல்லதொரு வழிகாட்டியாய்த் திகழ்கிறார். அதுபோல தனது சமூகப்பணிகளை மேலும் தொடர மனமுவந்து வாழ்த்துகின்றேன்.

அதுபோல மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் திரு. வே. தி. செல்வரத்தினம் அவர்களின் மணி விழாச் செய்தியும் எனது புகழை எடுத்தியம்புகிறது.

கல்விக்காகவும், அதனை வளர்த்தெடுப்பதற்காகவும் எமது மதிப்பிற்குரிய நல்லூர்க்கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. கே. வி. குணசேகரம் இப் பிறப்பெடுத்துள்ளார் என்ற எண்ணம் தோன்றுகின்றது. அதிபராகச் சேவையாற்றிய காலத்தில் ஏழைப் பிள்ளைகளின் அறிவுக் கண்களைத் திறக்க அரும்பெரும் தொண்டாற்றினார் என்றால் மிகையாகாது. கோட்டக் கல்விப் பணிப்பாளராகப் பதவியேற்ற பின்பும் தரம் 5 மாணவர்களின் பெறுபேற்றை உயர்த்த கோட்டங்களுக்கு தரம் 5 வினாத்தாள் தயாரித்து, ஆசிரியர்களைக் கொண்டு மதிப்பீடு செய்து, பின்னூட்டல் நடைபெற்று, பொதுப் பரீட்சையில் உயர் எண்ணிக்கையான மாணவர்கள் சித்திபெறக் காரணமாக இருந்துள்ளார். 1330 திருக்குறள்களுக்கும் கதை எழுதிய

ஒரேயொருவா் திரு. கே.வி குணசேகரம். இதன் மூலம் எமது வாழ்விற்கு ஆதாரமான குறள்களை எழுதி விளங்க வைத்தவா். ஒரு எழுத்தாளராக, ஏழை மாணவா்களின் கல்வித் தொண்டனாக விளங்கிய கோட்டக் கல்விப் பணிப்பாளா் திரு.கே.வி குணசேகரம் தொடா்ந்து கல்விக்குத் தொண்டாற்றவும், எழுத்தாளனாகவும் வாழ எனது வாழ்த்துக்கள். சுகபலத்துடன் வாழ்ந்து சிறப்புற வாழ எனது பிராா்த்தனைகள்.

இது தவிர யாழ்ப்பாணக் கல்வி வலயக் கல்விப் பணிப்பாளா் திருமதி. அ. வேதநாயகம் அவா்களின் செய்தியும் எனது புகழை உயா்த்திக் கொண்டேயிருக்கிறது.

என் மதிப்பிற்குப் பிடித்த எளிமையும், தாழ்மையும், கலை இலக்கிய ஆளுமையும் கொண்டவா் தான் நல்லூா்க்கோட்டக்கல்வி அலுவலரான திரு. கே.வி.குணசேகரம் அவா்கள். ஒரு மனிதனின் மதிப்பான, செழிப்பான அமைதியான வாழ்க்கை வளா்ச்சிக்குப் பற்பல காரணிகள் ஏதுவாக இருப்பினும் முதல் காரணியாக இருப்பது அவரது அறிவியல் சாா்ந்த விழுமியங்களும், தான் தொழிற்படும் சமூக நீரோட்டங்களை இலக்கு நோக்கி வழுவாது இட்டுச்செல்லும் பண்பு சாா்ந்த செயற்பாடுகளும் ஆகும். இத்தகைய செழுமைக்கும், மதிப்பிற்கும், புகழ்ச்சிக்கும் உரியவராகவும், எமது நிா்வாகக் கட்டமைப்பின் கீழ் உயரிய பாடசாலை ஒன்றை வடிவமைத்துக் கட்டியெழுப்பிய சிறப்பிற்குரிய கல்வியாளராகவும், நிா்வாக ரீதியிலும், கல்வி அபிவிருத்தி நோக்கி நல்லூா்க் கல்விக்கோட்டத்தைப் பெறுபேறுகளின் அடிப்படையில் தேசிய நிலையில் முன்னணி வகிக்க வித்திட்ட பெருந்தகையாகவும் வியந்து பாராட்டுவதிலே என்னுள்ளும் மகிழ்ச்சி பிரவாகித்து ஓடுகின்றது. தன்னுடைய கோட்டத்தை

முன்னுதாரணமாக விளங்க வைக்க வேண்டும் என்பதில் தனது சேவை நேரத்திற்கு அப்பாலும் முனைந்து செயற்பட்டவர். பேர், புகழ் நிறையப் பெற்றாலும் கர்வம் கொள்ளாத சுபாவத்தையும் நல்ல பண்பியல்புகளையும் தன்னகத்தே கொண்டு நல்லாசிரியராக, அதிபராக, சிறந்த நிர்வாகியாக விளங்கிய இவருக்கு நடைபெறும் மணிவிழா நிகழ்வானது மிகமிகப் பொருத்தமானது எனக்கருதுகின்றேன். கல்வியாளன் என்றும் ஓய்வு கொள்வதில்லை. அந்த வகையில் தொடர்பணியாற்றி மேன்மேலும் நலமும் பலமும் பெருக இதயம் நிறைந்து வாழ்த்துகின்றேன்.

பேராசிரியர்கள், கலாநிதிகள், விரிவுரையாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்களென சுமார் ஆயிரத்திற்கு மேற்பட்ட மேதாவிகள் அன்று என்னை வாழ்த்திப் பாராட்ட யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் குவிந்திருந்தனர்.

நடுவுநிலை தவறாது பற்றற்று வாழ்பவன் எந்நாளும் புகழுடன் வாழ்வான். அவன் சொல்வதை மக்கள் வேதவாக்காக ஏற்பர்.

நல்லூர் கோட்டத்தில் உள்ள அனைத்து அதிபர்களும் என்மீது அளவில்லாத அன்பு கொண்டவர்கள். அதனால் நான் கூறுவதையெல்லாம் கேட்பார்கள்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி இலங்கையில் உள்ள மிகப் பெரிய கல்லூரிகளில் ஒன்று. அக் கல்லூரியின் விழாக்களுக்குப் பிரதம விருந்தினராகப் பழைய மாணவர்களை மட்டும் தான் அழைப்பார்கள். வேறு எவரையும் அழைப்பதில்லை. ஆனால் அந்தச் சட்டத்தை மீறி நடனகலா

மன்றத்தின் பதினாறாவது ஆண்டு விழாவிற்கு என்னைப் பிரதம விருந்தினராக அழைத்தனர்.

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி இலங்கையில் மிகப் பெரிய பெண்கள் பாடசாலை. அப்பாடசாலை 2008 ஆம் ஆண்டு விளையாட்டுப் போட்டிக்கு என்னையும் எனது மனைவியையும் பிரதம விருந்தினராக அழைத்துக் கௌரவித்தது.

25.03.2009 அன்று ஓய்வு பெற்ற என்னையும் எனது மனைவியையும் அழைத்து இரண்டாயிரத்திற்கு அதிகமான மாணவிகளும் நூற்றுக்கு மேற்பட்ட ஆசிரியர்களும் சிற்றூழியர்களும் கௌரவித்தனர்.

2003ஆம் ஆண்டு உலகச் சைவ மகாநாடு மலேசியாவில் நடைபெற்ற போது எனது ஆத்திசூடிக் கதைகள் நான்கு தொகுதியாக வெளியீடு செய்யப்பட்டன. அன்றைய தினம் நான் மலேசியாவுக்குச் செல்லவில்லை. ஆனால் அன்று உலகச் சைவமகாநாட்டு மண்டபம் போன்று விசாலாட்சி மண்டபம் காட்சியளித்தது.

2006ஆம் ஆண்டில் இருந்து 2009ஆம் ஆண்டு வரை நல்லூர்க்கோட்டப் பாடசாலைகளில் அதிபர்களாகப் பணிபுரிந்து ஓய்வு பெற்ற அதிபர்களும் எனது மணிவிழாவில் கலந்து பரிசுகள் அளித்துக் கௌரவித்ததை என்னால் மறக்க முடியாது.

இவ்விழாக்களில் நூற்றுக்கும் அதிகமான மாலைகளை எனக்குச் சூடினார்கள். பொன்னாடை போர்த்தினார்கள், பரிசுப் பொருட்கள் தந்தார்கள்.

அத்துடன் செட்டித்தெரு மெ.மி.த.க. பாடசாலை, ஆனைப்பந்தி மெ.மி.த.க.பாடசாலை, கந்தர்மடம் சைவப்பிரகாச

வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், அபிவிருத்திச் சங்கத்தினர் என்னையும் எனது குடும்பத்தினரையும் அழைத்துக் கௌரவித்தனர்.

இப்புகழ் எனது இலக்கியங்கள் நிலைத்து நிற்கும் வரை இருக்கும்.

ஒருவன் பணி செய்யும் இடம் கோயில். அந்த இடம் எப்பொழுதும் புனிதமானதாக இருத்தல் வேண்டும். ஒருவனது குடும்பத்தை இயக்குவது அவன் செய்யும் தொழில். ஓய்வான பின்பும் செய்த பணியின் மூலம் கிடைக்கும் ஓய்வூதியமே பணி செய்தவரின் குடும்பத்தைப் காப்பாற்றுகிறது. அதனால் வேலைத் தளத்தைக் கோயிலாக ஒவ்வொருவரும் கருதுதல் வேண்டும்.

வீட்டை மட்டும் குடும்பமாகக் கருதாது பணி செய்யும் இடத்தின் உறுப்பினர்களையும் குடும்பத்தவர்களாக நினைப்பவர்களே பணி புரிவதில் வெற்றி பெற்றவர்கள்.

வெற்றியடைய வேண்டும் என்று நினைப்பவர்களுக்குக் கர்வம், சினம், காமம், ஆகிய மூன்றும் இருக்கக் கூடாது.

உதவிகள் செய்யாத தன்மையும், பெருமை இல்லாத தன்மானமும், தகுதியில்லாத மகிழ்ச்சியும் ஒருவனுக்கு இருக்கக் கூடாது. முக்கியமாக குடும்பத் தலைவர்களுக்கு (வேலைத் தள உயர் அதிகாரிகளுக்கு) இருக்கவே கூடாது.

தன்னிடமுள்ள குற்றங்களை முதலில் நீக்கி விட்டுப் பின்னர் பிறருடைய குற்றத்தை ஆராய்ந்து பார்க்கும் ஒருவனுக்கு உண்டாகத்தக்க குற்றம் எதுவும் இல்லை.

எப்பொழுதும் தன்னைப் பெரிதாக எண்ணித் தற் பெருமை கொள்ளுதல் கூடாது. அத்துடன் நன்மை தராத செயல்களை ஒருபோதும் விரும்பவும் கூடாது.

தான் விரும்புபவற்றைப் பகைவர்கள் அறியாத வண்ணம் செயலாற்றித் தனது கருமம் முடிப்பவனைப் பகைவனின் வஞ்சகமான சூழ்ச்சிகள் எதுவும் செய்யாது.

வேலைத்தளமும் குடும்பம் என நினைப்பவர்கள் எப்பொழுதும் எல்லோரையும் மதித்தல் வேண்டும். பெரியோரை பேணல் வேண்டும். அறிவுள்ளவரைப் பகைத்தல் கூடாது.

இதை வள்ளுவர் பின்வருமாறு கூறுகிறார்.

அறம் உணர்ந்தவர்களாய்த் தன்னை விட வயதில் மூத்தவராய் உள்ள அறிவுடையவரின் நட்பை ஆராய்ந்து பெறல் வேண்டும்.

பெரியவர்களைப் போற்றித் தனக்குச் சுற்றத்தவராக்கிக் கொள்ளுதல்,ஒருவன் பெறத்தக்க அரிய பேறுகள் எல்லாவற்றிலும் அரிதானதாகும்.

தம்மை விட அறிவில் சிறந்த பெரியவர்களைத் தமக்குச் சுற்றத்தவராக ஆக்கி அவரைப் பின்பற்றி நடத்தல், வல்லமை எல்லாவற்றிலும் சிறந்த வல்லமையாகும்.

தக்க பெரியாரைத் துணையாகக் கொண்டு வாழும் ஒருவனுக்கு, அவனது பகைவர்களால் ஒரு போதும் தீங்கு செய்ய முடியாது.

முதல் இல்லாத வணிகர்க்கு அதனால் வரும் வருமானம் இல்லை. அதே போலத் தம்மைத் தாங்கிக் காப்பாற்றத் துணையில்லாதவனுக்கு நிலைத்த வாழ்வு இல்லை.

நல்லவர்களின் தொடர்பைக் கைவிடுதல், பலரது பகையைத் தேடிக் கொள்வதை விடப் பத்து மடங்கு தீமையைத் தரும்.

குடும்பத் தலைவனோ அல்லது வேலைத் தளத்தின் தலைவனோ ஒரு செயலைச் செய்யுமுன் அச்செயலைப் பற்றித் தெரிந்தவர்களோடு கலந்துரையாடல் வேண்டும்.

ஒரு செயலைச் செய்யத் தெரிந்தவர்களோடு நன்கு ஆலோசித்து, தாமும் நன்கு சிந்தித்துச் செயற்பட்டால் செய்ய முடியாத செயல் என ஒன்றும் இல்லை.

பின்பு வரவிருக்கும் வருவாயைக் கருதித் தன்னிடமிருக்கும் மூலதனத்தை இழந்து விடக் கூடிய செயலை அறிவுடையவர்கள் செய்ய மாட்டார்கள்.

தமக்கு இழிவு வரக்கூடாது என்று அஞ்சுபவர்கள், தாம் தெளிவாக அறிந்து கொள்ளாத எந்தச் செயலையும் செய்யத் தொடங்க மாட்டார்கள்.

ஒருவன் செய்யத் தகாத செயல்களைச் செய்வதாலும் கெடுவான்; செய்யத்தக்க செயல்களைச் செய்யாது விடுவதாலும் கெடுவான்.

செய்யத்தக்க செயலைச் செய்யும் போது நன்றாக எண்ணி முடிவெடுத்த பின்பே துணிந்து தொடங்க வேண்டும். முடிவெடுத்துத் தொடங்கிய பின்பு எண்ணிப் பார்ப்பது தவறாகும்.

தக்க வழியில் செய்யப்படாத செயலுக்குப் பலர் துணையாக நின்றாலும் அது முடிவடையாது குறையாகவே இருக்கும்.

செய்யும் செயலின் வலிமையையும், தனது வலிமையையும், பகைவனுடைய வலிமையையும், இருவருக்கும் துணையாக இருப்பவர்களின் வலிமையையும் ஆராய்ந்து செயற்படல் வேண்டும்.

தன்னால் செய்ய முடிந்த செயலையும், அதை எப்படிச் செய்ய வேண்டும் என்பதையும் அறிந்து செயற்படுபவனுக்கு முடியாத செயல் என ஒன்றும் இல்லை.

மற்றவர்களுடன் ஒத்துப் போகாமல், தனது வலிமையின் அளவையும் அறியாமல், தன்னைப் பெரிதாக நினைப்பவன் விரைவில் கெட்டுப் போவான்.

உழைப்பால் வரும் வருமானம் சிறிதாக இருந்தாலும், செலவு செய்யும் வழி பெரிதாக இல்லாவிட்டால் தீங்கு இல்லை.

செயலை முடிப்பதற்கு ஏற்ற காலத்தையும் இடத்தையும் அறிந்து செயற்பட்டால், உலகமே வேண்டுமென நினைத்தாலும் அதுவும் கைகூடும்.

உலகத்தை வெல்ல நினைப்பவர்கள் அதைப் பற்றி எண்ணிக் கவலைப்படாது அதற்கு ஏற்ற காலத்தை எதிர் பார்த்துக் காத்திருப்பர்.

கிடைத்தற்கரிய காலம் வந்து வாய்க்குமானால், அந்த வாய்பை நல்ல முறையில் பயன்படுத்திச் செய்வதற்கரிய செயல்களைச் செய்தல் வேண்டும்.

செய்யும் செயல்களை நன்கு ஆலோசித்து எண்ணி தக்க இடத்தில் செய்தால், அஞ்சாமையைத் தவிர வேறு துணை தேவையில்லை.

இவ்வாறு வள்ளுவர் கூறுகிறார்.

நாம் தேவாரங்களை, மந்திரங்களை, இறை நாமங்களைத் தினமும் உச்சரிப்பது போலத் திருக்குறளையும் தினமும் படித்தல் வேண்டும். மனனம் செய்வது நன்று. வாழ்க்கையின் அனைத்து நடைமுறைகளையும் திருக்குறள் எடுத்துச் சொல்வதால், மனிதர்கள் தாம் செய்யவிருக்கின்ற

செயல்களைச் செய்யுமுன் அது சம்பந்தமாகக் கூறும் குறள்களைப் படித்தல் நன்று. குறள்களில் அனைத்து விடயங்களும் கூறப்பட்டுள்ளன.

ஒருவர் உடையவர் என்று சிறப்பாகச் சொன்னால் ஊக்கத்தை உடையவரே. ஊக்கமில்லாதவர் வேறு எதைப் பெற்றிருந்தாலும் அவர் உடையவர் ஆகமாட்டார்.

ஒருவனுக்கு ஊக்கம் உடைமையே நிலையான உடைமையாகும். மற்றய பொருள் உடைமை யெல்லாம் நிலையாது அவரை விட்டு நீங்கி விடும்.

சோர்வில்லாத ஊக்கமுடையவனிடத்துச் செல்வமானது, தானே அவன் இருக்குமிடத்திற்கு வழிகேட்டுக் கொண்டு போய்ச் சேரும்.

நீர்ப்பூக்களின் தண்டின் நீளம் அவை நிற்கும் நீரின் அளவினவாகும்; அது போல உள்ளத்தில் ஊக்கம் எந்த அளவு இருக்கிறதோ அந்த அளவிற்கு உயர்வு இருக்கும்.

எண்ணுவதை உயர்வாக எண்ணுதல் வேண்டும். எண்ணியளவு உயர்வு கை கூடா விட்டாலும் உயர்வாக எண்ணுவதை விட்டு விடக் கூடாது.

உடம்பை மறைக்குமளவிற்கு அம்புகளால் புண்பட்ட போதும், யானை தனது பெருமையை நிலைநிறுத்தும். அதே போல ஊக்கமுடையவர்கள் தமக்கு அழிவு வந்த காலத்திலும் தளரமாட்டார்.

யானை பருத்த தேகத்தையும் கூரிய கொம்புகளையும் உடையது. ஆனால் ஊக்கம் மிகுந்த புலி தாக்கினால் அது அஞ்சும்.

ஒருவனுக்கு வலிமையாவது ஊக்க மிகுதியே; ஊக்கமில்லாதவர்கள் மரங்களே. அவர்கள் தோற்றத்தில் மக்களைப் போல இருத்தலே வேறுபாடு.

எதைச் செய்தாலும் புகழ் உண்டாகும்படி செய்தல் வேண்டும். ஊக்கமுள்ளவன் எத்தொழிலையும் சிறப்பாகச் செய்வான்.

திரு. வைரமுத்தாபிள்ளை தில்லைநடராசா கிராம சேவகராகக் கடமை புரிந்தவர்.

அவர் கடமை புரிந்த ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவிலும் உள்ள அனைத்தையும் கோவைப்படுத்தியுள்ளார்.

சிறந்த எழுத்தாளரான அவர் தான் கடமையாற்றிய பகுதிகளில் நடந்த சம்பவங்களைச் சுவையான நாவல்களைப் போல எழுதியுள்ளார். அது வரலாற்றுப் பொக்கிசம்.

கிராமசேவையாளரின் கடமைகள் எவையெவை என்ற குறிப்புக்கள்.

தான் சென்ற நீதிமன்ற வழக்குகள், பொலிஸ் பதிவுகள் யாவும் கோவைப்படுத்தி நூலாக்கியுள்ளார்.

ஒரு மனிதனுக்குத் தேவையான படிவங்கள், அவற்றைப் பூர்த்தி செய்யும் முறைகள்.

தான் கடமை புரிந்த இடங்களின் புவியியல் நிலை, மண்ணின் தன்மை, மக்களின் தொழில்கள்.

தனது பணியில் ஏற்பட்ட அனுபவங்கள்.

கடமைகளைக் கையளிக்கும் விதங்கள்.

தான் கடமை புரிந்த இடங்களில் வாழ்ந்த, வாழ்ந்து கொண்டிருக்கின்ற பெரியவர்கள், கலைஞர்களின் பூரண விடயங்கள்.

இப்படியான தகவல்களைத் தொகுத்துப் பன்னிரண்டு நூல்களை வெளியிட்டுள்ளார்.

கிராம சேவகர்களும், மக்களும் கற்றுப் பயனடையவேண்டும் என்பதே அவரது நோக்கம்.

இவற்றையும் நூலாக்கலாம் என்று இவற்றைப் பார்த்த பின்பு தான் என்னால் புரிந்துகொள்ள முடிந்தது. கல்வி அறிவும், சேவை மனப்பாங்கும், தாராளமாக உதவிகள் செய்யும் தன்மையும் கொண்ட திரு. தில்லைநடராசாவைப் போன்றவர்களைக் காண்பது அரிது.

திரு கைலாயப்பிள்ளை நந்தகுமாரர் அவர்களை அறியாத ஆசிரியர்கள் எவரும் இருக்கமாட்டார்கள். நூலகராகக் கடமை புரியும் அவர் வடக்குமாகாண அமைச்சின் யாழ்ப்பாணத்திற்கான இணைப்பாளராகக் கடமை புரிகிறார். போக்குவரத்துப் பிரச்சினைகளால் பல்வேறு விதமான துன்பங்களை யாழ்ப்பாணத்தில் பணிபுரியும் கல்வி அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், பணியாட்கள், மாணவர்களின் போக்குவரத்துப் பிரச்சினைகளை வடமாகாணக் கல்வி அமைச்சுடன் தொடர்பு கொண்டு மிகவிரைவாகத் தீர்த்து வைக்கிறார். இடமாற்றங்கள், சம்பள உயர்வுகள் போன்றவற்றை உடனுக்குடன் செய்து கொடுக்கிறார். பிரயாண வசதியில்லாது கல்வியாளர்கள் படும் சிரமங்கள் யாவும் திரு. நந்தகுமார் அவர்களால் இலகுவாகத் தீர்த்து வைக்கப்படுகிறது. தனது சக்திக்கு அப்பாற்கூடச் சென்று உதவிகள் பலவும் புரிவதால் இன்று யாழ்ப்பாணக் கல்விச் சமூகம் அவரைப் போற்றிப் புகழ்கிறது.

இவர்களைப்போல இன்னொரு துறையில் தொண்டாற்றியவர் திரு தம்பையா சிதம்பரப்பிள்ளை.

ஆசிரியரான திரு. சிதம்பரப்பிள்ளை அவர்கள் 1971ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கத்தில் அங்கத்தவரானார்.

1979ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை தொடர்ந்து கட்டைவேலி, நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராகப் பணியாற்றுகிறார்.

கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் கிராமிய வங்கிகள், விவசாய உற்பத்திச் சங்கங்கள், நூலகம், சிற்றூண்டிச்சாலைகள், சிற்றூர்திச்சேவைகள், அரசின் உதவியுடன் நிர்வாகப் பயிற்சியகம் என்பன இயங்குகின்றன.

அரச வங்கிகள் பல நெல்லியடிப் பட்டணத்தில் இருந்த போதும் கிராமிய வங்கியின் சேவையைத் தான் மக்கள் பெரிதும் விரும்புகின்றனர். மக்களுக்குக் கிராமிய வங்கி 500 இலட்சம் ரூபாவைக் கடனாக வழங்கியுள்ளது.

நிரந்தர வைப்பிலிடும் பணத்திற்கு அரசவங்கிகளை விடக் கூடுதலான வட்டியினை வழங்கி வருகின்றது.

மேற்படி சங்கம் கலாச்சாரப் பெருமன்றம் ஒன்றை அமைத்து யாழ்ப்பாணத்து எழுத்தாளர்களின் நூல்கள் பலவற்றை வெளியிட்டும், விமர்சனம் செய்தும், எழுத்தாளர்களைக் கௌரவித்தும் வருகிறது. இத்தகைய பணியை நான் அறிந்தவரை நெல்லியடி கட்டைவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தைத் தவிர வேறெந்தக் கூட்டுறவுச் சங்கமும் செய்ததில்லை.

ஒவ்வொரு துறையிலும் சேவை செய்து புகழோடு வாழலாம் என்று புரியவைத்தவர்கள் இவர்கள்.

ஊக்கத்தைப் பற்றி வள்ளுவன் மேற் கண்டவாறு கூறுகிறார்.

வெற்றி என்பது மனவலிமையில் மட்டும் தங்கியுள்ளது. அறிவுள்ளவன், பணம் பொருளுள்ளவன், செல்வாக்குள்ளவன் மனவலிமை இல்லாவிட்டால் அறிவையும், பணம் பொருளையும், செல்வாக்கையும் இழந்து விடுவான்.

ஒருவனுக்கு வாய்த்த துணையின் நன்மை செல்வத்தைக் கொடுக்கும்; செய்யும் தொழிலின் நன்மை அவன் விரும்பிய எல்லாவற்றையும் கொடுக்கும்.

மேலும் மேலும் உயர்வடைய விரும்பிச் செயலில் ஈடுபடுவார்கள், தம்முடைய புகழ் கெடுவதற்குக் காரணமான செயல்களைச் செய்யாமல் விட வேண்டும்.

சோம்பல் ஒருவனது வாழ்க்கையை அழித்துவிடும். சோம்பல் உள்ளவன் நல்ல உணவை உண்ண மாட்டான். நல்ல உடைகளை அணிய மாட்டான், நல்லபடி வாழ மாட்டான். குடும்பத் தலைவன் சோம்பியிருந்தால் அவனது பரம்பரை நாசமாகி விடும்.

அழிக்கும் இயல்புடைய சோம்பலையுடைய அறிவில்லாதவன் பிறந்த குடும்பம், அவனுக்கு முன்பே அழிந்து விடும்.

சோம்பலுக்கு அடிமையாகி முயற்சியில்லாமல் வாழுபவனின் குடும்பத்தின் பெருமை அழிவதோடு குற்றங்களும் பெருகும்.

கால தாமதம் செய்தல், மறதி, சோம்பல், அளவுக்கதிகமான நித்திரை ஆகிய இந் நான்கும் கெடுகின்ற இயல்புடையோர் விரும்பி ஏறும் மரக்கலன்கள் ஆகும்.

நாட்டை ஆளும் அரசனின் உறவு தானே வந்து சேர்ந்தாலும் கூடச் சோம்பலுடையவர் ஒரு போதும் சிறந்த பயனை அடைய மாட்டார்.

நல்ல குடியில் பிறந்தவனென்றாலும் சோம்பலுக்கு ஆளானால் அது அவனை அவனுடைய பகைவர்களுக்கு அடிமையாகுமாறு செய்து விடும்.

ஒருவனுடைய சோம்பலில் கரிய மூதேவி வாழ்கிறாள். சோம்பலில்லா தவனின் முயற்சியில் திருமகள் வாழ்கிறாள்.

ஊழ்வினை காரணமாகத் தெய்வத்தின் துணை இல்லாது இருந்தாலும், ஒருவன் முயற்சியால் தனது உடம்பை வருத்திய வருத்தத்தின் கூலியாவது கிடைக்கும்.

சோர்வு இல்லாமல் கடும் முயற்சி செய்கின்றவர் ஊழையும் தன் முயற்சியால் வென்று விடுவார்.

குடும்பத் தலைவன் எப்பொழுதும் குடும்பத்தினருடனும், அயலவர்களுடனும், சுற்றத்தவர்களுடனும் சேர்ந்து ஒழுகுதல் வேண்டும். சேர்ந்து ஒழுகாதவன் புறக்கணிக்கப்படுவான்.

குடும்ப அங்கத்தவர்கள், நெருங்கிய நண்பர்கள் ஏதாவது தேவை கருதி வந்தால் அவர்களது குறிப்புக்களை உணர்ந்து உதவுபவனே சிறந்த மனிதன்.

பொதுவாக எதற்கும் அஞ்சக்கூடாது. வாழ்க்கை என்பது துன்பமானது. கஷ்டங்கள் நிறைந்தது. அடிக்கடி சோதனைக் குட்படுவது. இதை நன்கு புரிந்தவன் எதற்கும் அஞ்சமாட்டான்.

அச்சம் தான் மரணம் என்று ஓர் அறிஞர் கூறியுள்ளார்.

மனம் பயந்தால் உடல் நடுங்கும். மனம் உறதியாக இருந்தால் செயலும் உடலும் உறுதியாக இருக்கும்.

பிள்ளைகள் பெற்றோரைக் கண்டு அஞ்சக்கூடாது. அஞ்சினால் வாழ்வு பாழாகி விடும்

மாணவர்கள் ஆசிரியர்களைக் கண்டு அஞ்சக் கூடாது. அஞ்சுகின்ற மாணவனுக்குக் கல்வியில் வெறுப்பு உண்டாகும்.

தொழிலாளர்கள் மேலதிகாரியைக் கண்டு அஞ்சக்கூடாது. அஞ்சினால் முன்னேற்றம் ஏற்படாது.

ஒருவர் மீது அன்பு, மதிப்பு, மரியாதை கொள்ளுதல் வேண்டுமே தவிர அவரைக் கண்டு பயப்படக்கூடாது. சில பெற்றோர் பிள்ளைகளைக் கட்டுப்படுத்துவதற்காக அவர்களைப் பயமுறுத்துவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். பயப்படும் பிள்ளைகள் பிற்காலத்தில் துணிவில்லாதவர்களாக வாழ்வார்கள்.

இந்துக்கள் பெண்களைத் தெய்வங்களாகப் போற்றுகின்றனர். உலகில் உள்ள சிறந்த பொருட்களை யெல்லாம் பெண்களாகப் போற்றுகின்றனர்.

பயன்தரும் பொருட்களை யெல்லாம் பெண்களாக உருவகித்துள்ளனர்.

பூமாதேவி பெண்.

நதிகள் யாவும் பெண்.

தானியங்கள் பெண்.

கல்வித் தெய்வம் பெண்.

தனத்திற்கு தெய்வம் பெண்.

வீரத்திற்குத் தெய்வம் பெண்.

ஆண் தெய்வங்களை விடச் சக்தி மிகுந்தவை பெண் தெய்வங்கள்.

ஆனால் நடைமுறை வாழ்க்கையில் இந்துக்களில் பலர் பெண்களை மனித உயிர்களாக ஏற்றுக் கொள்வதில்லை.

பெண்கள் ஆண்களுக்குச் சமமாக இருக்கக் கூடாது.

ஆண்கள் சாப்பிட்ட பின்பு தான் பெண்கள் சாப்பிடல் வேண்டும்.

திருமணமென்றால் பெண்ணைப் பெற்றவன் தான் சீர்வரிசைகள் கொடுத்தல் வேண்டும்.

இப்படியெல்லாம் இந்து ஆண்களிற் பலர் செயற்படுகிறார்கள்.

வேதங்கள், சாஸ்திரங்கள்படிப்பவர்கள் கூட அவை கூறியபடி நடப்பதில்லை.

பெண்கள் எப்படிப்பட்டவர்கள், அவர்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று பால பாடத்தில் ஆறுமுக நாவலர் அவர்கள் கூறியுள்ளார்கள்.

பெண்களுக்குக் கற்பாவது விவாகஞ் செய்யமுன் பிதா மாதாக்களாலும், விவாகஞ் செய்த பின் கணவனாலும், கற்பிக்கப்பட்ட படியே நீதி வழுவாமல் ஒழுகுதலாம், பெண்கள் இளமைப் பருவத்திலே பிதாவினாலும், யெளவனத்தில் கணவனாலும், மூப்பிலே புத்திரனாலும் காக்கத்தக்கவர். ஆகையால் ஒருபோதும் பெண்கள் சுவதீனரல்லர். கணவனும் புதல்வனும் இல்லாத மனைவியை அவளுடைய கணவனின் ப'த்தார் காக்கக்கடவர். அவர்கள் இல்லாதபோது அவளுடைய தாய் வீட்டார் காக்கக்கடவர். தகப்பன் கணவன் பிள்ளைகள் இவர்கள் இல்லாமல் தனித்திருக்க விரும்பும் பெண், பிறந்த குலம், புகுந்த குலம் இரண்டுக்கும் வசையை உண்டாக்கிவிடுவாள்.

பிதாமாதாக்கள் பெண்ணுக்குச் சிறுபிராயத்திலே கடவுளுடைய குணமகிமைகளையும், புண்ணிய பாவங்களையும், சுவர்க்க நரக பலன்களையும், கடவுளை வழிபடு முறையையும், கணவனுக்குத் தொண்டு செய்யும் முறையையும் கற்பித்து, வீட்டு வேலைகளைப் பழக்கல் வேண்டும். பெண்களுக்கு உரிய தருமங்கள் எல்லாவற்றுள்ளும் முக்கிய தருமம் பதிவிரதம்.

“குலமகட் கழகு தன் கொழுநனைப் பேணுதல்” என்றார் பெரியோர்.

சூரியோதயத்துக்கு முன்னே நித்திரைவிட்டெழுதல், கடவுளைத் தியானித்துத் துதித்தல், வீடு விளக்கஞ் செய்தல், பாத்திரசுத்தி செய்தல், தேவ பூசைத் திரவியங்கள் அமைத்தல், மாமன் மாமியரை வந்தித்தல், கணவனுடைய பணிவிடையைச் செய்தல் இவை முதலியனவெல்லாம் மங்கல வாழ்க்கையையும் செல்வத்தையும் விரும்பிய நன்மனைவியின் செய்கைகளாம்.

உரலிலேனும், உலக்கையிலேனும், அம்மியிலேனும், வாயிற்படியிலேனும், முற்றத்திலேனும் இருக்கலாகாது. இருந்தாற் சீதேவி நீங்குவள்.

நாடோறும் தன் நாயகன் உண்டபின் தான் உண்ணுதல், அவன் சயனித்த பின் தான் சயனித்தலும், அவன் நித்திரைவிட்டு எழுவதற்கு முன்னே தான் நித்திரை விட்டெழுதலும் பதிவிரதைக்குரிய செய்கைகளாம். கணவன் கொடுத்த பொருளை வீணாகச் செலவழியாமையும், அவனுடைய வரவுக்கேற்பச் செலவழித்தலும், கடுஞ் சொல்லின்மையும், இன்சொற் சொல்லலும் நற்செய்கைகளாம்.

பதிவிரதை தன் வீட்டுக்கு வரும் துறவிகள் முதலிய பெரியோர்களையும், அதிதிகளையும் உபசரித்து, அவர்களுக்கு அன்னங்கொடுத்தல் வேண்டும். குருடர், முடவர், வியாதியாளர், விருத்தர் முதலானவர்கள் வந்தால் முகமலர்ச்சியோடு இயன்ற மட்டும் பிை‘ கொடுத்து, இனிய வார்த்தைகளைச் சொல்லி அனுப்பவேண்டும். யாவரோடாயினும் இடி, இடித்ததுபோல் உரத்த சத்தத்தோடு பேசலாகாது. இனிய குரலோடு மிருதுவாகப் பேசல் வேண்டும்.

நாயகனுடைய ஆயுள் பெருகும் பொருட்டு மஞ்சளணிதல் வேண்டும். தன்னாயகன் பெயரைச் சொல்லலாகாது. அவனுடைய உச்சித்திட்டத்தை (உண்ட மிச்ச உணவு) அமிர்தம் போலப் பூசித்தல் வேண்டும். நாயகன் வீட்டுக்கு வரும்பொழுது அவனை முகமலர்ச்சியோடு எதிர்கொண்டு கை கால் கழுவச் சலங்கொடுத்து உபசரித்தல் வேண்டும்.

தகாத வார்த்தை பேசல், தலைக்கடையிலே நிற்றல், பலகணி வழியாகப் பார்த்தல், சிரித்தல், பகலிலே நித்திரை செய்தல், காரியஞ் செய்யாமை, ஆஞ்ஞையில்லாமல் (அனுமதி) வெளியே போதல், அயலாரோடு பேசுதல், பொதுப் பெண்கள் போலப் பார்த்தல், தம்மை அழகுபெற அலங்கரித்தல், கூத்து முதலியவைகளைப் பார்க்க விரும்புதல், கணைக்காலும் தனமுந் தெரிய ஆடை உடுத்தல், முதிர்ந்த வயசுடையவர் இல்லாத வீட்டுக்குப் போதல், கூட்டத்தினுள்ளே புன்னகை செய்தல், வேசை, தூர்த்தை, கற்பு நிலைகெட்டவள், யாமக்காரி இவர்களுடன் கூடுதல், கணவனை விட்டு அயலூருக்குப் போதல், கணவனை விட்டுத் தீர்த்தயாத்திரை முதலானவை செய்தல், தான் விரும்பிய இடத்திலே தூங்குதல், அயல் வீட்டில் இருத்தல் இவையெல்லாம் ஒழுக்கங் கெடுதற்கு ஏதுவாம்.

மனைவியானவள் தனக்கு ஈசுரசங்கற்பத்தினால் வாய்ந்த கணவனை அழகில்லாதவனாயினும், நற்குணம் இல்லாதவனாயினும், வியாதியாளனாயினும், வறியவனாயினும், கல்வியில்லாதவனாயினும், வயோதிபனாயினும் அவனைச் சிறிதும் அவமதியாது நன்கு மதித்து வழிபடல் வேண்டும். இயன்ற மட்டும் தன் கணவனுக்குக் கோபம் பிறவாவண்ணம்

நடக்க முயலல் வேண்டும். ஒருபோது கோபம் பிறந்தால் அதனைத் தணித்தல் வேண்டும். ஒருபோது கணவன் அநீநியாகக் கோபித்துக் கண்டித்தாலும், தானும் கோபித்து எதிர்வார்த்தை பேசாது மௌனமாயிருந்து, இதமேபேசி, அக்கோபத்தை ஆற்றல் வேண்டும். ''பெண்டிர்க் கழகெதிர் பேசா திருத்தல்'' என்று பெரியோர் விதித்திருக்கின்றார்.

மனைவியானவள் தன் கணவனுடைய குற்றங்களைப் பிறருக்குச் சொல்லலாகாது. ''தூற்றும் பெண்டிர் கூற்றெனத் தகும்'' என்றார் ஔவையார். கணவனுடைய துர்குணங்களைச் சொப்பனத்திலும் நினைக்கலாகாது. அவனுடைய நற்குண நற்செய்கைகளையே பாராட்டி அவனை மெய்யன்போடு உபசரித்தல் வேண்டும்.

மனைவியானவள் தன்னுடைய பிதா மாதா சகோதரர் முதலிய சுற்றத்தார்கள் எல்லோரிடத்தினும் பார்க்கத் தன் நாயகனிடத்தே அன்புவைத்தொழுகல் வேண்டும். பதிவிரதையானவள் தான் தரித்த ஆபரணங்கள் எல்லாவற்றையும் துறந்திருந்தாலும் தன் மாங்கல்யத்தை மாத்திரம் ஓரிமைப்பொழுதாயினும் துறந்திருக்கமாட்டாள். அது போலவே தன் பிதா மாதா முதலிய சுற்றத்தார்கள் எல்லோரையும் விட்டு நீங்கினாலும் தன்னாயகனை மாத்திரம் விட்டு நீங்காள். மனைவியும் கணவனும் ஒருமைப்பட்டு மகிழ்ந்திருந்தால் குலமுழுவதும் மகிழ்ச்சியடையும். அதனாலே தருமம் பொருள் இன்பம் என்னும் மூன்று பயனுண்டாகும். மனைவியானவள் தன்னாயகன் தன்வீட்டில் இருக்கும் பொழுது மாத்திரமே தன்னை ஆபரணம் புஷ்பம் முதலியவைகளினாலே

அலங்கரித்துக் கொள்ளல் வேண்டும். தன்னை அவன் பிரிந்திருக்கும் பொழுது அலங்கரித்துக்கொள்ளலாகாது.

மனைவி கற்புநிலை தவறுவாளானால் குலங்கெடும், அதனால் எல்லாப் பயனுங்கெடும். ஆகையால் முயற்சிகொண்டு மனையாளைத் தருமமுடையவளாய் இருக்கும்படி காத்தல் வேண்டும். அவள் இரவினும் பகலினும் சற்றேனும் அயலவரோடு பேசாதிருக்கும்படி மாமியார் முதலானவர்கள் அவளைக் காக்கக்கடவர்கள். பெண்கள் தங்களைத் தாங்களே காத்தல் வேண்டும். அதுவே அவளுக்கு நல்ல காவலாகும்.

விவேகமில்லாத சில பெண்கள் செல்வர் வீட்டுப் பெண்கள் தரித்திருக்கின்ற ஆடை ஆபரணங்களைப் போலத் தங்களுக்கும் வாங்கித்தரும் பொருட்டு தங்கள் கணவர்களை வருத்துகின்றார்கள். கடன்பட்டாயினும் வாங்கிக் கொடுத்தாலொழியத் திருப்தியடையார்கள். வாங்கிக் கொடாத பொழுது அவர்களை அவமதிக்கின்றார்கள். விவேகமுள்ள பெண்கள் தங்கள் கணவர்கள் தங்கள் பொருள் வரவுக்கேற்ப வாங்கிக் கொடுப்பவற்றைப் பெற்றுக் கொண்டு செய்நன்றி அறிந்தவர்களாய்த் திருப்தியடைவார்கள். தம்மினும் செல்வராயுள்ளவர்களைப் பார்த்துப் பெருமூச்செறிந்து வீண்வருத்தமடையாமல், தம்மினும் வறியவர்களாய் இருப்பவர்களைக் கண்டு தமக்கு உள்ளதே மிக்கதென்று மனமகிழ்ச்சி அடைவார்கள்.

நன்மனையாள், வீட்டிலே தன் கணவன் யாதொரு தொழிலும் இல்லாதிருக்கும் பொழுது, கடவுளுடைய குணமகிமைகளை அறிவிக்கும் நூல்களைத் தனக்கு வாசித்து அவைகளின் பொருளை அறிவிக்கும்படி பிரார்த்திப்பாள். தன் கணவன் இடம்ப நிமித்தம் (ஆடம்பரமாக) செலவு செய்ய

எண்ணினால், இனிய வார்த்தைகளைச் சொல்லித் தடுத்து, வீணிலே செலவாகும் பணத்தைத் தருமத்திலே செலவிடும்படி வேண்டிக்கொள்வாள். தன் கணவன் பிதா மாதாக்களையாயினும் சகோதரர்களையாயினும், சகோதரிகளையாயினும் பகைக்காதபடிக்கும், அவர்களோடு எதிர்வார்த்தை பேசாதபடிக்கும், அவர்களை அன்போடு பாதுகாக்கும் படிக்கும், பணிந்து இனிய வார்த்தைகளினாலே வேண்டிக்கொள்வாள். கெட்ட மனைவியாளோ இப்படிச் செய்யாமல் எந்நாளும் குடும்பத்திலே கலகமே விளைவிப்பாள்.

தூரஸ்திரி முதனாள் சண்டாளிக்கும், இரண்டாவது நாள் பிரமக்கொலை செய்தவளுக்கும், மூன்றாவது நாள் வண்ணாத்திக்கும் சமமாவாள். ஆதலினால் அவள் இந்த மூன்று நாளும் யாதொரு கருமத்திற்கும் உரியவளல்லள். இராத்திரியில் வீட்டுக்கு விலக்கானால் அவ்விராத்திரியை மூன்று பாகமாக்கி, முதலிரண்டு பாகத்தில் விலக்கலானால் அந்நாள் முதலாகக் கொள்ளல் வேண்டும். மூன்றாவது பாகத்தில் விலக்காணால் மற்ற நாள் முதலாகக் கொள்ளல் வேண்டும்.

வீட்டுக்கு விலாக்காயுள்ள மூன்று நாளும், சரீரசுத்தி நிமித்தம் நதி முதலியவைகளைத் தீண்டாமல் வேறொருவரைத் தண்ணீர் தரச்சொல்லிச் சரீரசுத்தி செய்து, ஒரு நேரம் பசுற்பொழுதில்லே போசனஞ் செய்து கொண்டிருத்தல் வேண்டும். இம்மூன்று நாளும் இராத்திரியிற் புசித்தலும், பகலிலே நித்திரை செய்தலும் வீட்டுக்கு விலக்காயுள்ள மற்றைப் பெண்களைத் தீண்டலும், தன்னாயகனெதிரே முகங்காட்டலும், அவனோடு பேசலும், நெற்குத்துதல் முதலிய தொழில்களும் ஆகாவாம்.

தூரஸ்திரி தொட்ட வெண்கலப் பாத்திரத்தையும் பித்தளைப் பாத்திரத்தையும், மூன்று தரம் வெள்ளையிட்டு நெய் பூசிக் காய்ச்சிற் சுத்தியாம். அவள் படுத்த நிலம் கோமயத்தினாலே மெழுகிற் சுத்தியாம். இவள் இருந்த இடத்திலே இரண்டுவிற்கிடைக்குள்ளே தொட்டாற்றீட்டாகும். இரண்டு விற்கிடைக்குள்ளும் காஷ்டத்தினாலேனும் (புல், வைக்கோல், கிடுகு முதலியவற்றால் செய்த மறைப்புக் கட்டி) திருணத்தினாலேனும் மறைத்தால் அப்பாலுள்ள நிலத்திலே தீட்டில்லை.

தூரஸ்திரி நாலாநாள் மண்ணினாலே தந்தசுத்தி செய்து சூரியோதயத்திற்கு மேல் ஆறுநாளிகை சென்ற பின், உடம்பு முழுவதும் கோசலமும் புற்று மண்ணும் பூசி, புடைவையை உவர்மண் முதலியவற்றினாலே சுத்தி செய்து நதி முதலியவைகளிலே ஸ்நானம் பண்ணல் வேண்டும். ஸ்நானம் பண்ணினவுடனே தன்னாயகன் முகத்திலே விழித்தல் வேண்டும். மற்றைப் புருஷர் முகத்திலே விழிக்கலாகாது. அப்பொழுது நாயகன் இல்லையாயின், தன்னாயகனை மனசிலே சிந்தித்துச் சூரியனைத் தரிசித்தல் வேண்டும். இப்படிச் செய்துகொண்டு வீட்டிலே போய் பஞ்சகவ்வியமேனும் பாலேனும் நெய்யேனும் உட்கொண்டு திரும்பவும் ஸ்நானஞ்செய்து அன்று முழுதும் பாத்திரங்களைத் தீண்டாமலும் இருத்தல் வேண்டும். ஐந்தாநாள் ஸ்நானம் செய்த பின்பு பணிக்கு உரியவளாவாள்.

நாலாநாட்டொடங்கிப் பன்னிரண்டா நாள் வரையும் ருது உண்டானால் சலமோசனத்துக்குச் சுத்தி செய்வது போலச் சுத்தி செய்தல் வேண்டும். அப்பால் பதினெட்டாம் நாள் வரையும் ருது உண்டானால் ஸ்நானம் பண்ணல் வேண்டும்.

அப்பால் ருது உண்டானால் மூன்றுநாள் விலக்காயிருந்து, நாலாநாள் ஸ்நானஞ் செய்தல் வேண்டும்.

மனையாள், தன்கணவன் இறந்துவிட்டால், விதவைக்குரிய ஒழுக்கங்களை வழுவாமல் செய்தல் வேண்டும். விதவை மயிருடனிருத்தலும் ஆபரணந் தரித்தலும் வெற்றிலை பாக்கு உண்ணலும் ஆகாவாம். வெள்ளைப் புடைவை தரித்தல் வேண்டும். செபம், தியானம், பூசை, திருக்கோயிலிலே திருவலகிடுதல், திருமெழுக்கிடுதல், பூக்கள் கொய்து திருமாலைகள் தொடுத்தல் முதலிய பணிகளை நாடோறும் விதிப்படி செய்தல் வேண்டும். மிக முதிர்ந்த வயசையுடைய பெரியவர்களிடத்திலே அறிவு நூல்களைக் கேட்டல் வேண்டும்.

கற்புநிலை தவறிய பெண்கள் நரகத்திலே அக்கினி மயமாகிய இரும்புப்பாவையைத் தழுவி வருந்துவார்கள். இயமதூதர்கள் அவர்களை இரும்புக் குடத்தினுள்ளே புகுத்தி அதன் வாயை அடைத்து அக்கினி மேல் வைத்து எரிப்பார்கள். அவர்கள் சரீரத்தை உரலில் இட்டு இடிப்பார்கள். அக்கினிமயமாகிய சிலையிலே சிதறும்படி அறைவார்கள். இருட்கிணற்றிலே விழுத்துவார்கள். அங்கே இரத்தவெள்ளம் பெருகும்படி கிருமிகள் அவர்கள் உடம்பைக் குடையும். பின்னும் அவர்கள் அக்கினி நரகத்தில் வீழ்த்தப்பட்டு என்செய்தோம் என்செய்தோம் என்று நினைத்து நினைத்து அழுங்குவார்கள்.

பரபுருசரை இச்சித்துத் தீண்டின பெண்களை இயமதூதர்கள் அக்கினியிற் காய்ச்சிய ஊசியினாலே குத்துவார்கள். அவர்களுடம்பிலே தாமிரத்தை உருக்கி வார்ப்பார்கள். பரபுருசரை இசித்துப் பார்த்த பெண்களுக்குக்

கண்களிலே அக்கினியிற் காய்ச்சிய ஊசியினாலே குத்தி முற்கூறிய மற்றைத் துன்பங்களையும் செய்வார்கள்.

கணவன் சொற்படி நடவாதவள் நாயாயும் நரியாயும் பிறப்பாள். கணவனை இகழ்ந்தவள் புலியாய்ப் பிறப்பாள். புருசரை இச்சித்தவள் பேய்வடிவமடைவாள். கணவன் பசித்திருக்க புசித்தவள் பன்றியாய்ப் பிறப்பாள்.

கற்புநிலை தவறிய பெண்கள், பிறவிதோறும் பிரமேகம் கிரந்தி, சூலை கிரகணி குடல்வாதம் குட்டம் முதலிய எண்ணில்லாத வியாதிகளினாலும் வறுமையினாலும் வருந்தவார்கள்.

இன்று அவற்றில் பல நடைமுறைக்கு ஒவ்வாது போனாலும் அதைப் பின்பற்றுபவர்களே அதிகமானோர்.

பெண்களை மதிக்கும் தன்மையையும், அவர்களைச் சீர்வரிசைகள் பெறாது திருமணம் செய்யும் முறையையும், குடும்பத் தலைவர்கள் செயற்படுத்த வேண்டும்.

இந்நாளில் பெண்கள் ஆண்களுக்குச் சமமாக உழைக்கிறார்கள். ஊதியம் பெறுகிறார்கள். அதற்காகத் தன்னும் பெண்களை மதிக்க வேண்டும்.

ஒரு குடும்பத் தலைவன் தனது குடும்ப உறுப்பினர்களுக்கு நல்ல நண்பர்களை ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும். அது போலத் தானும் தனது குடும்ப உறுப்பினர்களோடு நண்பனைப் போலப் பழகுதல் வேண்டும்.

பெற்றோர் தமது பிள்ளைகளைவிடத் தம் பிள்ளைகளின் நண்பர்களைப் பற்றி நன்கு அறிந்திருத்தல் வேண்டும்.

தற்போதய மாணவர்கள் நண்பர்களால் தான் கெட்டழிகிறார்கள்.

பன்றியோடு சேர்ந்த கன்றும் மலம் தின்னும் என்பார்கள்.

நல்ல குடும்பத்தில் உள்ள ஒருவன் இன்னொரு நல்ல குடும்பத்தில் உள்ள ஒருவனோடு நட்புக் கொள்ளல் வேண்டும். இதைப் பெற்றோர் ஆராய்ந்து அறிந்து கொள்ளல் வேண்டும்.

நல்லவர்களானால் தொடர்ந்து பழக அனுமதிக்கலாம். கெட்டவர்களானால் அவர்களது உறவைத் துண்டிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

நல்ல நூல்களின் உட்பொருள் கற்கக் கற்க மேலும் மேலும் இன்பம் தருவது போல, நல்ல அறிவுடையவர்களின் நட்பும் பழகப் பழக இன்பம் தரும்.

நட்பு எப்பொழுதும் நன்மையையே செய்தல் வேண்டும்.

நட்பு சிரித்து மகிழ மட்டும் உதவுவதல்ல. அது எதிர்காலம் சிறக்கவும் உதவுதல் வேண்டும்.

நட்புக் கொள்ளுதல் ஒருவரோடு ஒருவர் சிரித்துப் பழகுவதற்கு அல்ல; நண்பர்கள் ஒழுக்கம் தவறும் போது கண்டித்துப் புத்திமதி கூறி திருத்துவதற்காகவே.

முகம் மலர்ந்து சிரித்துப் பேசுவது நட்பன்று, நெஞ்சம் மலரும் படியாக உள்ளன்பு கொண்டு உரிமையுடன் பழகுவதே நட்பு.

அழிவைத் தருகின்ற தீமைகள் செய்வதைத் தடுத்து நல்ல வழியில் நடக்கச் செய்து, அழிவு வந்த சமயத்திலும் உடனிருந்து துன்பப் படுவதே நட்பாகும்.

உடை அவிழும் போது கை உடனே உதவி மானத்தைக் காப்பது போல, துன்பம் வரும்போது அதை உடன் போக்குவது நட்பு.

நட்புக்கு இலக்கணம் எதுவென்றால், எப்பொழுதும் மனம் கோணாமல் முடியும் போதெல்லாம் உதவி செய்து தாங்கும் நிலை ஆகும்.

நண்பனாக ஒருவனை ஏற்குமுன் அவனைப் பற்றி நன்கு ஆராய்ந்து அறிந்து கொள்ளல் வேண்டும். ஆராயாது நட்புப் பூண்டால் அது சாவதற்கும் வழிவகுக்கும்.

ஒருவனுடைய குணத்தையும், குடிப்பிறப்பையும், அவனிடம் உள்ள குறைகளையும், அவனது இனத்தவரின் இயல்பையும் அறிந்த பின்பு தான் அவனுடன் நட்புக் கொள்ளல் வேண்டும்.

உயர்ந்த குடியில் பிறந்து, தனக்கு வரக் கூடிய பழிக்குஅஞ்சுகின்றவனைப் பொருள் கொடுத்தாவது நண்பனாக்கிக் கொள்ளல் வேண்டும்.

தீய செயல்களைச் செய்யும் போது வருந்தும் படியாக இடித்துச் சொல்லக்கூடியனவாகவும், உலக நடைமுறையை அறிய வல்லவனாகவும் உள்ளவனின் நட்பை ஆராய்ந்து கொள்ளல் வேண்டும்.

உரிமை கெடாமல் தொடர்ந்து நண்பர்களாய் இருப்பவர்களுள் ஒருவர் தவறு செய்த போதும், அவரது நட்பைக் கைவிடாதவரை உலகம் போற்றும்.

நல்லவர்களின் நட்பு நாள்ச் செல்லச் செல்ல அதனால் வரும் பயன் அதிகரிக்கும்.

தீயவர்களுடன் நட்பு வைக்கக் கூடாது.

அன்பு மிகுதியால் நலம் செய்வாரைப் போலத் தோன்றினாலும் நற்பண்புகள் இல்லாதவரது நட்பு வளர்வதை விடத் தேய்வதே மேலானது.

தமக்குத் தேவையுள்ள போது நட்புப் பூண்டு, பயன் இல்லாத போது நீங்கிச் செல்லும் தகுதியற்றவரின் நட்பைப் பெற்றாலென்ன? இழந்தாலென்ன?

கிடைக்கப் போகும் பயனை அளந்து பார்க்கும் நண்பரும், அன்பை நினைக்காமல் பொருளை விரும்பும் விலை மாதரும், திருடர்களும் சமமானவர் ஆவார்.

உள்ளத்தில் அன்பில்லாமல் வெளியே சிரித்துப் பேசும் தன்மை உடையவர்களின் நட்பை விடப் பகைவர்களால் பத்துக் கோடி மடங்கு நன்மை வரும்.

இலகுவில் முடியக் கூடிய செயலையும் முடியாதபடி செய்பவரின் நட்பைச் சொல்லாமலே கைவிட்டு விடல் வேண்டும்.

செய்யும் செயல் வேறாகவும் சொல்லும் சொல் வேறாகவும் உள்ளவர்களின் நட்பு, ஒருவனுக்குக் கனவிலும் துன்பத்தைத் தரும்.

தனியே இருக்கும் வேளைகளில் மிகுந்த நட்புள்ளவர்களைப் போலப் பழகி, பலர் கூடியுள்ள சபையில் இகழ்ந்து பேசுவோரின் நட்பு நம்மைச் சற்றும் நெருங்காதபடி பார்த்துக் கொள்ளல் வேண்டும்.

ஒருவனின் சிறந்த செல்வம் என்று சொல்லப்படுவது அவன் அறிவில்லாதவருடன் நட்புக் கொண்டிருந்தால், அந்த நட்பை நீக்கி அவரைக் கைவிடுவதாகும்.

ஊக்கம் குறைவதற்குக் காரணமான செயல்களை ஒருவன் எண்ணக் கூடாது. அது போலத் துன்பம் வந்த போது கைவிடுபவரின் நட்பைத் தொடரக் கூடாது.

துன்பம் வந்த போது விட்டுப் பிரிபவரின் நட்பை இறக்கும் போது நினைத்தாலும் நினைத்த உள்ளத்தைச் சுடும்.

குற்றமில்லாதவர்களின் நட்பை, விரும்பி ஏற்றுக் கொள்ளல் வேண்டும். ஒத்த பண்பில்லாதவருடைய நட்பைப் பொருளைக் கொடுத்தாவது கைவிடுதல் வேண்டும்.

ஆராயாது நட்புக் கொண்ட பின் நண்பர் தீயவராக இருந்தால் உடனே அவரது நட்பை நீக்குதல் வேண்டும்.

வெளியே சிறந்த நண்பரைப் போல நடித்துக் கொண்டு உள்ளத்தில் இகழ்கின்றவரை, நாமும் அது போலவே வெளியே சிரித்துப் பேசி அவர்களின் தொடர்பை அறுக்கும் வகையில் நடந்து கொள்ளல் வேண்டும்.

பகைவர் நண்பராகும் காலம் வந்தால் முகத்தளவில் நட்புக் கொண்டு, மனத்தளவில் நட்புக் கொள்ளாதிருத்தல் வேண்டும். சந்தர்ப்பம் வரும் போது கொண்ட முகத்தளவு நட்பையும் விட்டு விட வேண்டும்.

பகைவர் வணங்கித் தொழும் கையினுளும் கொலைக் கருவியை மறைத்து வைத்திருப்பர். பகைவர் அழுத கண்ணீரும் அத்தகையதே.

குடும்பத் தலைவன் பேதைமை இல்லாதவனாக இருந்தால் தான் குடும்ப உறுப்பினர்களும் பேதைமை இல்லாது வாழப் பழகுவர்.

பேதைமை என்று சொல்லப்படுவது என்னவென்றால், தனக்குக் கெடுதியானவற்றைச் செய்து கொண்டு நல்லவற்றைக் கைவிடுவதாகும்.

ஒழுக்கமில்லாத செயல்களில் விருப்பம் கொள்வது பேதமையாகும்.

தகாத செயல்களைச் செய்வதில் வெட்கப்படாமல் இருப்பது, செய்யத் தக்க செயல்களைச் செய்யாமல் இருப்பது, உயிர்களிடத்தில் அன்பில்லாமல் இருப்பது, காக்க வேண்டியவற்றைக் காக்காமல் இருப்பது ஆகியனவெல்லாம் பேதைமை உடையவர்களின் செயல்களாகும்.

சிறந்த நூல்களைக் கற்று, அதன் பொருளை நன்கு அறிந்து, பிறருக்கு அதைக் கற்பித்துக் கொண்டிருப்பவன், அந்த உயர்ந்த கருத்துக்களைத் தன் வாழ்வில் கடைப் பிடிக்கவில்லையென்றால் அவனை விடப் பேதைமை உள்ளவன் உலகில் எவனும் இல்லை.

ஒருவன் தனது ஏழுபிறப்பிலும் அடைவதற்குரிய நரகவேதனையைப் பேதை ஒருவன் தனது ஒரு பிறப்பிலேயே அனுபவிப்பான்.

ஒழுக்கமில்லாத பேதை ஒருவன் ஒரு செயலை மேற்கொண்டால் அச் செயல் நல்ல முறையில் முடிவு அடையாததோடு, அப்பேதை குற்றவாளியாக்கித் தண்டனையும் பெறுவான்.

பேதை ஒருவன் பெருஞ்செல்வத்தைப் பெற்றால் அவனோடு தொடர்பில்லாதவர்கள் பெரும் பயனைப் பெறுவர். உறவினர் பசியால் துன்பப்படுவார்கள்.

பேதையின் கையில் செல்வம் கிடைப்பது, பித்துப் பிடித்த ஒருவன் கள் குடித்துத் தடுமாறுவதை ஒக்கும்.

எவருடனும் பகை கொள்ளலாகாது. பகைவன் தருணம் வரும் வரை காத்திருந்து தாக்குவான். பகை ஏற்படுமிடத்து அதை நீக்கப்பழகுதல் வேண்டும்.

உட்பகை வராது பாதுகாத்துக் கொள்ளல் வேண்டும்.

வாளைப் போல வெளிப்படையாகத் தெரியும் பகைவர்களுக்கு அஞ்சவேண்டிய தில்லை. ஆனால் உறவினரைப் போல் உடனிருந்து உட்பகை கொள்பவரின் தொடர்புக்கு அஞ்ச வேண்டும்.

உட்பகைக்கு அஞ்சி ஒருவன் தன்னைக் காத்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் தளர்ச்சி ஏற்படும் போது

மட்கலத்தை அறுக்கும் கருவி போல அந்த உட்பகை அவனை அழித்து விடும்.

மனம் திருந்தாத உட்பகை ஒருவனுக்கு இருக்குமானால்,அது அவனைச் சேர்ந்தவர்கள் அவனுக்குத் துணை செய்யாமல் போவதற்குக் காரணமான பல குற்றங்களை உண்டாக்கும்.

ஒருவனுக்கு உறவினரோடு உட்பகை உண்டாகுமானால், அது அவனது உயிரை அழிக்கத் தக்க குற்றங்கள் பலவற்றைச் செய்யும்.

ஒருவனுக்கு அவனுடைய உற்றாரிடத்தில் பகை ஏற்படுமானால், அந்த உட்பகையால் அவன் அழியாது இருத்தல் அரிதாகும்.

செப்பின் கலப்பைப் போல புறத்தே சேர்ந்திருந்தாலும், உட்பகை உண்டான குடியில் உள்ளவர்கள் மனத்தினால் கூடியிருக்க மாட்டார்கள்.

உட்பகை உண்டான குடி, அரத்தினால் தேய்க்கப்பட்ட இரும்பைப் போல வலிமை கெட்டு அழிந்து விடும்.

எள்ளின் பிளவைப் போல உட்பகை சிறியதாக இருந்தாலும், அது ஒரு குடியை அழிக்கவல்ல கேட்டை உண்டாக்கும்.

மன ஒருமைப்பாடு இல்லாதவருடன் சேர்ந்து வாழ்வதென்பது, ஒரு குடிசையில் பாம்போடு கூடி வாழ்வதைப் போன்றது.

இவ்வாறு உட்பகையைப் பற்றி வள்ளுவர் கூறுகிறார்.

மனிதனைத் துன்பப்படுத்தி அவனது உடலை வருத்தி உயிரை வெளியேற்றுவது நோய்கள்.

நோய்கள் இல்லாமல் வாழ முடியும் என்று ரிஷிகளும் முனிவர்களும் கூறியுள்ளனர். அத்துடன் வாழ்ந்தும் காட்டியுள்ளனர்.

உணவைக் குறைத்தால் நோய்கள் வராது.

ஒவ்வாத உணவை உண்ணாது விட்டால் நோய்கள் வராது.

தினமும் உடற் பயிற்சிகள் செய்தால் நோய்கள் வராது.

மனதை ஒடுக்கினால் நோய்கள் வராது.

ஆசைகளின்றி வாழ்ந்தால் நோய்கள் வராது.

பொறாமை, சினம் கொள்ளாது வாழ்ந்தால் நோய்கள் வராது.

அன்புள்ளம் கொண்டவர்களாக வாழ்ந்தால் நோய்கள் வராது.

தேக உணர்வே நோய்க்கான காரணியாகும். பற்று மிகுதியினால் உணர்வுகள் உருவாகின்றன. உணர்வுகள் இருதயத்தையும் மனத்தையும் தாக்கும் வல்லமை கொண்டவை. உணர்வுகள் உடலுறுப்புக்களின் செயற்பாட்டை நிறுத்தும். ஆதனால் உணவு சமிபாடடைய மாட்டாது.

சமிபாடின்மை தான் வியாதிகளுக்கு மூலகாரணம்

உணவு பற்றி சத்திய சாய்பாபா கூறியதை உங்களுக்குத் தருகிறேன்.

சுவாமி – உணவு எப்படியோ உணர்வுகள் அப்படியே.
உணர்வுகள் எப்படியோ எண்ணங்கள் அப்படியே.
எண்ணங்கள் எப்படியோ செயல்கள் அப்படியே.
செயல்கள் எப்படியோ பலன்கள் அப்படியே.

எனவே, எல்லாவற்றிற்கும் உணவே பிரதானமாகும். உணவில் நியமம் மிகவும் அவசியம். *குழழனஇ ர்நயனஇ புழன* இவை மூன்றும் ஒரே வரிசையாக உள்ளன. *குழழன* எப்படி அமைகிறதோ, அதே போல் *ர்நயன* அமையும். எந்தவிதமான *ர்நயன* அமைகிறதோ, அதைப் பொறுத்துத்தான் *புழன* இருப்பார். அதிகமான உணவு மனக்கெடுதலை விளைவிக்கும். அதிகமான உணவு உட்கொள்வது தமோ குணத்தை வளர்க்கும். ‘‘ஏக புத்தம் யோகி’’ என்பர். தினமும் ஒரு முறை உண்பவன் யோகியாகிறான். ‘‘தவரிபுக்தம் ரோகி’’ என்பார்கள். இரண்டு தடவைக்கு மேல் தினமும் உண்பவர்கள் ரோகிகளாக ஆகின்றனர். (வியாதியஸ்தர்களாக)

சாத்வீகமான உணவை உட்கொண்டால், மனமும் சாத்வீகமாக அமையும், ரஜோ குண ப்ராதனமான உணவை உட்கொண்டால், மனக்கலங்கள், மன உளைச்சல்கள் உண்டாகும். மாமிச உணவை உண்பதால், தமோ குணம் ஏற்படும். மாமிச உணவுகள் உண்பதால் மிருகக் குணங்கள் வளர வழிவகுக்கும். வன்முறை, பிறரை ஆக்ரமிக்கும் குணம், தீயசெயல்கள், தீய குணங்கள் தமோ குண ப்ராதனமான உணவை உட்கொள்வதால் ஏற்படுகின்றன. இவ்விதமாக, உணவு, மனத்தின் தன்மைக்குக் காரணமாக அமைகின்றது.

உணவிற்கு.

பொருட்களின் சுத்தம் - பதார்த்த சுத்தி

தயாரிப்பதில் சுத்தம் - பாக சுத்தி

சமைக்கும் பாத்திரங்களின் சுத்தம் - பாத்ர சுத்தி

தயாரிப்பவரின் சுத்தம் - பாவ சுத்தி

இவை யாவும் மிக அவசியம். நல்ல பொருட்களைச் சுத்தமான பாத்திரங்களில் இட்டு, நல்லமுறையில், பவித்ரமான எண்ணங்களுடன் சமைத்திடல் வேண்டும். எண்ணங்கள் கூட மிகவும் முக்கியமானவையே. எல்லா இடத்திலும் காணப்படுகின்ற உணவை உண்பது தகாது.

முன்பு ஒரு சமயம், ஒரு சந்நியாசி, விருந்தினராக சென்று, ஒரு வியாபாரியின் வீட்டில் உணவு அருந்தி விட்டு வந்தார். அன்றிலிருந்து, ஒவ்வொரு இரவும் அந்தச் சந்நியாசிக்குக் கண்களில் நீர் வழிந்து கொண்டிருக்கும், 16 வயதுள்ள ஒரு பெண் கனவில் வருவது ஆரம்பமாகி விட்டது. அந்தச் சந்தியாசி, தன் குருவிடம் சென்று, மிகுந்த வினயத்துடன் நமஸ்கரித்து, தன் கனவில் கண்ணீருடன் காணப்படும் பெண்ணைக் குறித்து, தெரியப்படுத்தினார். குரு தனது தியானத்தில் காரணத்தைக் கண்டறிந்து, தன் சிஷ்யரிடம் சொன்னார். அந்த சந்நியாசியை, அந்த வியாபாரி உணவிற்கு அழைத்தது, தன் வீட்டில் நடந்த சிரார்த்தத்திற்காக. அந்த வியாபாரி தனது முதல் மனைவி இறந்த பிறகு, 16 வயதுள்ள ஒரு பெண்ணை மணம் புரிந்து கொண்டிருந்தார். அந்தப் பெண் தாயற்றவள், அநாதை, அவளது தந்தை, தன் குடும்பச் சுமை தாங்காமல், இந்த வியாபாரிக்குத் திருமணம் செய்து வைத்துவிட்டார். அந்தப்பெண், தன் புகுந்த வீட்டிற்கு வந்தபின், மிகுந்த துக்கமடைந்து, கண்ணீரும் கம்பலையுமாக நாட்களைக் கழித்து, தனது துக்கத்தைச் சகிக்கமுடியாமல், கிணற்றில் குதித்துத் தற்கொலை செய்து கொண்டாள். அந்த சமயத்தில் அந்தப் பெண்ணின் 13ம் நாள் சாப்பாட்டிற்காக இந்த சந்நியாசியை அழைத்ததனால் அவர் அங்கு உணவு

உட்கொண்டதன் காரணத்தால் தான் அவருடைய கனவில் அந்தப் பெண் கண்ணீர்மல்கக் காணப்பட்டாள் என்பதைக் குரு விளக்கினார். எனவே, எப்படிப்பட்ட உணவு என்று அறியாயமல் உட்கொள்ளுதல் கூடாது.

இப்படித்தான், முன்பு, நித்யானந்தரின் ஆஸ்ரமத்தில் ஒரு சிஷ்யருக்குக் கூட இப்படி ஒரு அனுபவம் நிகழ்ந்தது. இந்த சிஷ்யர், ஒருவரின் வீட்டிற்கு விருந்திற்காக சென்று வரும் போது, அந்த கிருகஸ்தரின் வீட்டிலிருந்து ஒரு வெள்ளிக் கிண்ணத்தைத் திருடி எடுத்துக் கொண்டு வந்து விட்டார். ஆஸ்ரமத்திற்கு வந்த பின்பு, அவருக்கு உறக்கமே வரவில்லை. மிகவும் மனக்கஷ்டம் அடைந்தார். ஆஸ்ரமவாசியாகவும், சந்நியாசியாகவும் இருந்து கொண்டு, ஒரு திருட்டுத்தனம் செய்ததை நினைத்து மிகவும் மனவேதனையுற்றார். பிறகு, குருவின் பாதங்களில் வீழ்ந்து, நமஸ்கரித்து, தன்னை மன்னிக்கும் படி வேண்டினார். நித்யானந்தர்தன் தியான சக்தியின் மூலம், இதற்கான காரணத்தைக் கண்டறிந்தர். ஆன்று சிஷ்யர் விருந்துண்ட வீட்டில் சமையல் செய்த சமையல்காரர் ஒரு காலத்தில் திருடனாக வாழ்க்கை நடத்தியவர். அந்தக் காரணத்தினால் சமையல் காரரின் உணர்வுகள் அந்தச் சமையலில் கலந்திடவே, இந்த சந்நியாசிக்குக் கூட அந்த வெள்ளிக் கிண்ணத்தைத் திருடி எடுத்து வரும்படியான எண்ணத்தை ஏற்படுத்தியது. அதனால் சமையல் செய்பவரின் எண்ணங்கள் புனிதமானவையாக இருத்தல் மிகவும் அவசியம்.

உணவு உண்பதற்கு முன் எவ்வளவு லேசாக இருக்கிறானோ, அவ்வாறே உணவு உண்ட பின்பும் இருத்தல் வேண்டும். பாதி வயிறு காலியாக இருத்தல் வேண்டும். மீதி

பாதியில் ½ பாகம் உணவாலும் ½ பாகம் நீராலும் நிரப்பப்பட வேண்டும். கிழங்குகள் எற்றவையல்ல, கெட்டியான பாலும், கெட்டியான தயிரும் நல்லவை அல்ல. அப்படிப்பட்டவற்றை உண்ணக்கூடாது. அதனால் கொஞ்சம் தண்ணீரைக் கலந்து கொள்ள வேண்டும். எவ்வளவு ஊயடழசநைள தேவையோ, அதற்கு ஏற்ற உணவையே உட்கொள்ள வேண்டும். ஒருமுறை உணவு உட்கொண்ட பின் மறுபடியும் உணவு உட்கொள்வதற்கு குறைந்தது 4 மணி நேரமாவது இடைவெளி இருத்தல் வேண்டும். பசுமையான காய்கறிகள் ஏற்றவையே. அதிகமாக எண்ணெயில் பொரிக்கப்பட்ட உணவு நல்லவை அல்ல. மதியம் உணவு உண்ட பின் சிறிது ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டும். இரவு உணவு உண்ட பின் சிறிது நடக்க வேண்டும் அதற்காகத்தான்

*ஞடநநி ய றாடைந யகவநச டரஹெர யனெ*

*றுயடம ய அடைந யகவநச னைநைெச*

என்பார்கள். கடுமையாக உழைத்தால் பற்கள் நெரியும் வரை உண்ணவும் முடியும். இவ்வாறு பாபா கூறுகிறார்.

பெற்றோர் உடலுக்கு உபாதைகள் கொடுக்காத உணவு வகைகளைத் தாமும் உண்டு, தமது பிள்ளைகளுக்கும் உண்ணப் பழக்குதல் வேண்டும். ஒழுக்கம், கல்வி, சுத்தம் என்பது போல உணவுப் பழக்கமும் முக்கியமான தென்பதை ஒவ்வொரு பெற்றோரும் உணர்ந்து கொள்ளல் வேண்டும்.

வள்ளுவர் உணவை மருந்து என்று கூறுகிறார். அவர் மருந்து என்ற அத்தியாயத்தில் கூறுவதைப் பாருங்கள்.

மருத்துவ நூலோர் வாதம், பித்தம், சிலோத்துமம் என்று கூறியுள்ள மூன்றும் அளவுக்கு அதிகமானாலும், குறைந்தாலும் நோய் உண்டாகும்.

முன்னர் உண்ட உணவு சமிபாடு அடைந்த பின்பு, அடுத்த வேளை உணவை அளவோடு உண்டால் உடம்புக்கு மருந்து என ஒன்று வேண்டியதில்லை.

முன்னர் உண்ட உணவு சமிபாடு அடைந்த பிறகு, அளவோடு நல்ல உணவை அறிந்து உண்பதே நீண்ட காலம் வாழ்வதற்கான வழியாகும்.

முன்னர் உண்ட உணவு சமிபாடு அடைந்த பின், தனது உடம்புக்கு ஏற்ற உணவு வகைகளை நன்றாக அறிந்து பசி ஏற்பட்ட பின்னரே உண்ண வேண்டும்.

தனக்கு ஒவ்வாத உணவு வகைகளை ஒதுக்கி, அளவுக்கு அதிகமாக உணவை உண்ணாமல் வாழ்கின்றவனுடைய உடம்பில் துன்பத்திற்கிடமான நோய்கள் உண்டாகாது.

குறைந்தளவு உணவை அது இன்ன தென்று அறிந்து உண்பவனிடம் இன்பம் நிலைத்திருக்கும். அளவுக்கதிகமாக உண்பவனிடத்தில் நோயே நிலைத்து நிற்கும்.

பசித்தீயின் அளவு அறிந்து உண்ணாமல் அளவுக்கதிகமாக உண்பவன் அளவில்லாத நோய்களுக்குள்ளாக்கி அவதிப்படுவான்.

வாழ்க்கையின் பெரும் பகுதியைத் துன்பப்படுத்துவதோடு உழைப்பின் பெரும் பகுதியை அழிப்பது நோய்.

கவனமாக வாழ்வதன் மூலம் நோய்களைக் கட்டுப் படுத்தலாம்.

நாவைக் கட்டுப்படுத்தினால் எல்லா வகையிலும் இன்பம் உண்டாகும்.

கண்டபடி கதைக்கா விட்டால் சுற்றம் சேரும். உதவிகள் பெருகும்.

கண்டபடி உண்ணா விட்டால் நோய்கள் வராது. ஆதனால் நாவைக் கட்டுப்படுத்துங்கள் நடப்பவை யாவும் நல்லவையாக இருக்கும்.

நோய்களைப் பற்றிக் கற்ற வைத்தியர்களையும் நோய் விட்டு வைப்பதில்லை.

சிலருக்கு சிறு சிறு நோய்கள் வரும். இவை கைமருந்துடன் குணமாகி விடும்.

சிலருக்குப் பல நோய்கள் ஒன்றாக வரும்.

குணப்படுத்த முடியாத பலநோய்கள் உண்டு.

இவை வந்தால் மரணம் அடையும் வரை குணமாகாதிருந்து துன்பங்களைக் கொடுத்துக் கொண்டிருக்கும்.

முற்பகலில் செய்தால் பிற்பகலில் பயனைப் பெறலாம். என்றொரு முது மொழி உண்டு.

சமயம் துன்பங்களைப் பற்றிச் சொல்லி அவற்றிலிருந்து விடுபடும் வழிவகைகளையும் கூறியுள்ளது.

விரதங்கள் உணவு முறைகளைப் பற்றிக் கூறுகின்றன.

விரத வேளைகளில் உண்ணும் உணவுகளால் தீங்கு உண்டாகாது.

உண்மையாக விரதம் அனுட்டிப்பவன் உப்பு, புளி, காரம், மசாலா வகைகளைச் சேர்க்கக்கூடாது.

இவற்றை உண்ணாமல் விடுவதற்காகத் தான் இந்து சமய தத்துவங்கள் உணவுவகைகளைப் பற்றிக் கூறியுள்ளன.

முனிவர்களும் ரிஷிகளும் நோயின்றி வாழ்ந்ததாக எமது சமய இலக்கியங்கள் கூறுகின்றன.

இலை குழைகளையும் கிழங்கு வகைகளையும் பச்சையாக உண்ணலாம்.

வாரத்தில் ஓரிரு நாட்களுக்கு சுவையான உணவுகளை உண்ண வேண்டும். மற்றய நாட்களில் சத்தான உணவு வகைகளை உண்ணுதல் வேண்டும்.

உணவு வகைகளைப் பற்றி நான் ‘இன்பத்தை அள்ளித்தரும் இந்துமதம்’ என்ற நூலில் எழுதியுள்ளேன்.

இந்துக்கள் ஊன் உண்ணக் கூடாது.

உரிய வயதில் தீட்சை பெறல் வேண்டும்.

தீட்சை பெற்றவர்கள் உணவு விஷயத்தில் மிகுந்த கட்டுப்பாட்டுடன் இருப்பார்கள்.

உடற்பயிற்சி செய்வதால் உடல் உறுதி பெறும். உடலை வருத்தித் தொழில் செய்வோர் உடற்பயிற்சி செய்யத் தேவையில்லை.

உடலை வருத்தி வேலை செய்யாத உயர் அதிகாரிகள் கட்டாயம் உடற் பயிற்சி செய்தல் வேண்டும்.

உடற்பயிற்சியை வற்புறுத்தத்தான் இந்து சமயம் வணக்க முறைகளை அறிமுகம் செய்தது.

பஞ்சாங்க நமஸ்காரம், அட்டாங்க நமஸ்காரம், தோப்புக்கரணம் போன்றன சிறந்த அப்பியாசங்களாகும்.

வீதியைச்சுற்றி வலம் வருவது மிகமிகச் சிறந்த பயிற்சி

எனக்கு நீரிழிவு நோய் இருக்கிறது. 2008 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் தொடக்கம் எனது இரத்தத்தில் சர்க்கரையின் அளவு 180 புள்ளிகளுக்கு மேல் இருந்தது.

காலை உணவு உண்ணாது இரத்தத்தைப் பரிசோதித்தால் 120 புள்ளிகள் இருத்தல் வேண்டும்.

வைத்தியர் பல விதமான மாத்திரைகளை மாற்றி மாற்றித் தந்தும் சர்க்கரையின் அளவு குறையவில்லை.

ஐந்து மாதங்கள் குறைவடையாததால் நான் வைத்திய நிபுணர் சிவன்சுதனிடம் சென்றேன்.

பல பரிசோதனைகளைச் செய்த அவர் நான் உட்கொள்ளும் மாத்திரைகள் சிலவற்றைத் தவிர்த்தார். பின் காலையில் தினமும் இருபது நிமிடங்கள் நடக்கும் படி கூறி நாற்பத்திரண்டு நாட்களின் பின் வருமாறு கூறினார்.

நான் நடந்தேன். ஐந்து நிமிடங்கள் தான் ஆரம்பத்தில் நடக்க முடிந்தது. சில தினங்கள் செல்லப் படிப்படியாக நடக்கும் நேரத்தை அதிகரித்தேன்.

நாற்பது நாட்களின் பின் இரத்தத்தைப் பரிசோதனை செய்த போது அதில் சர்க்கரையின் அளவு 83 ஆக இருந்தது. நடக்கத் தொடங்கிய பின்பு உடல் உரம் பெற்றது. குனிய நிமிர முடியாதிருந்த நான் தற்பொழுது குனிந்து வளைந்து பல வேலைகளைச் செய்கிறேன்.

உடல் உறுதி பெற வேண்டுமானால் உடற்பயிற்சி செய்தல் வேண்டும். வாழ்க்கையை இன்பமாக வாழ நினைப்பவர்கள் உடலை நன்கு கவனித்தல் வேண்டும்.

ஓவ்வொரு குடும்பத் தலைவனும் தலைவியும் கட்டாயம் காமத்தைப் பற்றி அறிந்து கொள்ளல் வேண்டும்.

பலர் இன்பத்தைப் பற்றிக் கதைப்பது குற்றம் என்றும், கடவுளால் வெறுக்கப்படுவதென்றும் நினைக்கிறார்கள். இது தவறு

இந்து தர்மம் கிரகஸ்தப் பருவத்தில் ஓர் இளைஞன் ஒரு பெண்ணை மணம் புரிந்து இன்பமாக வாழ வேண்டும் என்று கூறுகிறது.

திருமணம் புனிதமானது என்கிறார்கள். திருமணம் என்பது ஓர் ஆணும் பெண்ணும் இல்லற இன்பம் அனுபவிப்பதற்குக் கடவுளின் முன்னிலையில் பெரியோர்களிடம் அனுமதி பெறுதலாகும்.

திருமணம் செய்யாத பெண்ணும் ஆணும் சேர்ந்து வாழ்வது தான் குற்றம், தவறு. அதற்குத் தண்டனை கூட உண்டு.

கடவுளின் சந்நிதானத்தில் பெரியவர்களின் அனுமதியுடனும் ஆசீர்வாதத்துடனும் தொடங்கும் உறவில் வெட்கப்படவோ, அருவருப்புக் கொள்ளவோ, தயக்கம் கொள்ளவோ கூடாது.

இருவரும் விரும்பியவாறு விரும்பியபடி இன்பம் அனுபவித்தல் வேண்டும்.

இந்துக் கடவுள்கள் இன்பம் எவ்வாறு அநுபவித்தனர் என்று நான் இன்பத்தை அள்ளித்த தரும் இந்து மதத்தில் எழுதியுள்ளேன்.

கோயில்களில் உள்ள கோபுரங்களையும், ரதங்களையும், சுவர்ச்சித்திரங்களையும் பாருங்கள். அவை எல்லாம் காம ரஸபத்தைத் தூண்டுவனவாகவே உள்ளன.

காமத்தை அடக்காது பூர்த்தி செய். காமம் பூர்த்தியானால் எந்தச் சலசலப்பும் யாரையும் ஆட்கொள்ள மாட்டாது.

காமத்தை வென்றால் கடவுளைக் காணலாம்.

மகிழ்ச்சியாக வாழலாம்.

வாழ்க்கையில் நிம்மதியம் பிடிப்பும் ஏற்படும்.

இவ்வாறு நான் கூறவில்லை இந்து தத்துவ நூல்கள் கூறுகின்றன.

பகவத்கீதையில் உள்ள அனைத்தும் திருக்குறளில் உள்ளது.

அதை விட இன்பத்தைப் பற்றி மிகவும் சுவையாகக் கூறுவது திருக்குறள்.

பெண்கள் போகப்பொருட்கள் அல்ல ஆண்களை மகிழ்ச்சிப்படுத்தவும், அவர்களின் ஆத்ம விடுதலைக்கு உதவவுமே ஆண்டவன் பெண்களைப் படைத்தான்.

பெண்ணைப் பற்றிக் கூறியவர்கள் திருவள்ளுவரைப் போலக் கூறவில்லை.

கண்டும், கேட்டும், உண்டும், முகர்ந்தும், தொட்டும் அனுபவிக்கின்ற ஐம்புல இன்பங்களும் ஒளி பொருந்திய வளையலை அணிந்த இவளிடம் உள்ளன.

தாமரைக் கண்ணனின் தேவருலகம், தான் விரும்பும் காதலியின் மென்மையான தோள்களில் சாய்ந்து தூங்குவதை விட இனிதாகுமோ...?

மலர்களை அணிந்த கூந்தலை உடைய இவளது தோள்கள், நான் விருப்பமான பொருள்களை நினைத்து விரும்பும் போது அப்பொருள்களைப் போலவே இன்பந் தருகின்றன.

அவளது தோள்களைத் தழுவும் போதெல்லாம் என்னுயிர் தளிர்க்கும் படி தீண்டுவதால், இவளது தோள்கள் அமிழ்தத்தினால் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

நல்ல நூல்களைக் கற்கின்ற ஒவ்வொரு முறையும் அறியாதவற்றை அறிவது போல, அணிகலன்களை அணிந்து

அழகோடு இருக்கும் இவளைக் கூடும் போதெல்லாம் புதுமையான இன்பம் ஏற்படுகின்றது.

மென்மையான மொழிகளைப் பேசுகின்ற இவளுடைய தூய பற்களில் ஊறிய நீர், பாலுடன் தேன் கலந்ததைப் போன்ற சுவையுடையது.

தெரிந்தெடுத்த ஆபரணங்களை அணிந்திருக்கும் இவளைக் கூடும் போது உயிருக்கு வாழ்வு தருபவள் போல் இருக்கிறாள் பிரியும் போது உயிருக்குச் சாவு தருபவள் போல இருக்கிறாள்.

வாழ்க்கையைப் பற்றி முழுமையாகக் கூறும் நூல் திருக்குறள். தமிழ் நூல்களும், அறிஞர்களும் திருக்குறளின் மூன்றாம் பாலான இன்பத்துப்பாலைப் பெரிதாக எடுப்பதில்லை. அது இன்றும் மறை பொருளாகவே உள்ளது.

ஒரு குடும்பத்தவன் அறவழியில் பொருட்களைத் தேடுதல் வேண்டும். அதை அறவழியில் செலவு செய்தல் வேண்டும். அற வழியில் இன்பம் பெற வேண்டும். என்பதே திருக்குறளின் சாரம்.

எதை அநுபவிப்பதாக இருந்தாலும் விதியின் படியே அனுபவிக்க முடியும்.

விதி வலியது.

ஒருவனது கைப்பொருள் வளர்வதற்கு காரணமான ஊழால் முயற்சி உண்டாகும்; கைப் பொருள் அழிவதற்குக் காரணமான ஊழால் சோம்பல் ஏற்படும்.

பொருள் இழப்பதற்குக் காரணமான ஊழ், ஒருவனை அறிவற்றவனாக்கும்; பொருள் சேர்வதற்குக் காரணமான ஊழ் அவனை அறிவாளி யாக்கும்.

ஒருவன் நுட்பமான நூல்கள் பலவற்றைக் கற்றுத் தேர்ந்து பாண்டித்தியம் பெற்றாலும், ஊழிற்கு ஏற்றவாறு அவனுக்கு உள்ளதாகும் அறிவே மேற்பட்டுத் தோன்றும்.

செல்வத்தை தேடுகின்ற முயற்சிக்கு, ஊழால் நல்லவை யாவும் தீயவையாதலும் உண்டு; தீயவை நல்லவையாதலும் உண்டு.

ஊழின் காரணத்தால் தமக்குரியவை அல்லாத பொருள்களை வருந்திக் காப்பாற்றினாலும் தங்காமல் போய்விடும்; தமக்குரியவையை கொண்டு போய்க் கொட்டினாலும் போகாது.

கோடி கோடியாகச் செல்வத்தைச் சேர்த்தாலும், ஊழ் வகுத்த படி தான் செல்வத்தை அனுபவிக்க முடியும்.

ஊழை விட மிக்க வலிமையுள்ளது பேறு எதுவும் இல்லை. ஊழை விலக்கும் பொருட்டு மாற்று வழியைத் தேடினாலும் அங்கும் ஊழே முன்வந்து நிற்கும்.

பலர் பொருளிருந்தும் அழகிய பெண்ணை மனைவியாகப் பெற்றும் இன்பமான வாழ்வைப் பெறவில்லை.

சிலர் பொருளில்லாமலேயே இன்பத்தை அளவுக்கதிகமாக அனுபவிக்கிறார்கள் பொருளில்லாமலே.

அழகென்பது ஒவ்வொருவரினதும் மனத்தின் பிரதிபலிப்பு.

ஒரு பெண் ஒருவனுக்குத் தேவதையாகத் தெரிகிறாள். இன்னொருவனுக்குப் பேயாகத் தெரிகிறாள்.

அவரவருக்குப் பிடித்த பெண்ணையே திருமணம் செய்தல் வேண்டும்.

இந்த நடைமுறை மனிதன் படைக்கப்பட்ட நாளில் இருந்து நடைமுறையில் இருந்து வருகிறது.

அன்மைக் காலமாகப் பிற நாடுகளுக்குச் சென்ற பின்பு மக்கள் மாறிவிட்டனர்.

எல்லா விடயங்களிலும் பணம் அரசோச்சுகிறது அதனால் வாழ்க்கையின் நடைமுறைகள் யாவும் மாறி விட்டன.

பணம் தேவைகளை அதிகரிக்கச் செய்கிறது.

மனம் போன போக்கில் வாழ்க்கையை அனுபவிக்கத் தூண்டுகிறது.

பாவங்களை அதிகரிக்கச் செய்கிறது.

அதிகாரம், ஆணவம், அகங்காரம் என்பவற்றை உருவாக்குகிறது.

அன்பைத் தொலைக்க உதவுகிறது.

அதனால் பணம் தான் வாழ்க்கை என்று நினைப்பவர்கள் வாழ்க்கையைத் தொலைக்கிறார்கள்.

தர்மமான முறையின் தேடப்படும் பணம் ஒருபோதும் தேடியவனை விட்டுச் செல்லமாட்டாது. அநீதியான முறையில் தேடப்பட்ட பணம் உள்ள பணத்தையும் சேர்த்துக் கொண்டு போய்விடும்.

யாரும் நினைத்தபடி வாழ்வதில்லை

ஒருவன் ஒரு பெண்ணைக் காதலிக்கிறான். பெற்றோர் விரும்பவில்லை இன்னொருத்தியைத் திருமணம் செய்கின்றான்.

ஒருவன் ஒரு வியாபார நிலையத்தை ஆரம்பிக்கிறான். உள்ள முதலும் பறிபோய்ப் பிச்சைக்காரனாகிறான்.

பணமில்லாதவன் சிறு வியாபாரம் செய்கிறான். அதன் மூலம் கோடீஸ்வரனகிறான்.

கற்ற ஒருவன் பெரியதொரு தொழிலைப் பெறுகிறான். அந்தத் தொழிலை அவனால் நல்ல முறையில் செய்ய முடியவில்லை.

திறமை உள்ள ஒருவனுக்கு தகுந்த தொழில் கிடைக்கவில்லை. இப்படியான பிரச்சினைகள் நிறைந்தது தான் வாழ்க்கை. இதைப் புரிந்து கொண்டவனுக்குத் துன்பம் இல்லை.

சிலருக்குத் தொட்டதெல்லாம் துலங்கும். சிலருக்குத் தொட்டதெல்லாம் துன்பத்தைக் கொடுக்கும்.

சிலருக்கு மனைவி வந்ததும் பணம் கூரையைப் பிய்த்துக் கொண்டு கொட்டும். சிலருக்கு உள்ள பணமும் போகும்.

இது போலத்தான் பிள்ளைப் பேறும். சில பிள்ளைகள் பணத்தோடு பிறப்பார்கள். அவர்கள் தொட்டதெல்லாம் பொன்னாகும். சில பிள்ளைகள் பிறந்தால் வீட்டில் உள்ள அனைத்தும் அழிந்து விடும்.

இது தான் வாழ்க்கை

இவையாவும் எனக்கு மட்டும் தான் வருகிறது என்று யாரும் எண்ணுதல் கூடாது. அடுத்தவரைப் பார்த்தால் அவனுக்கு உன்னை விடத் துன்பங்கள் அதிகமாக இருக்கும்.

எனக்குத் தெரிந்தவர் ஒருவர் இருந்தார். அவர் மிகுந்த செல்வமும் செல்வாக்கும் உடையவர். அவரிடம் வாகனங்கள் பல இருந்தன. பல எடுபிடியாட்கள் இருந்தனர். ஊரில் நடைபெறும் வைபவங்கள் எவையும் அவரில்லாவிட்டால் நடைபெறாது.

திடீரென்று அவர் நோய்வாய்ப்பட்டார். அவர் செய்த தொழில்கள் யாவும் முடங்கின. கடன்காரர் வீட்டை முற்றுயையிட்டனர். தனது பொருட்கள், வாகனங்கள், வீடு வளவுகள் யாவற்றையும் விற்றும் அவரது கடன் தீரவில்லை.

தானம் செய்வதானாலும் கூடத் தனது பொருளையே தானம் செய்தல் வேண்டும்.

ஆடம்பரம் அழிவைத் தேடித்தரும்.

துன்பம் வந்தால் கலங்காது துணிவுடன் முயற்சிக்க வேண்டும்.

அதை விடுத்துக் கண்ணீர் வடிப்பதாலோ அல்லது பிறருக்குச்சொல்லிக் கவலைப் படுவதாலோ வந்த துன்பம் தீராது. நீதான் உனது துன்பத்தை அகற்ற முயற்சித்தல் வேண்டும். நீ நல்ல முறையில் முயற்சித்தால் ஆண்டவன் உனது முயற்சிக்கு உறுதுணையாக இருப்பார்.

வாழ்க்கையை எடுத்தால் துன்பம், ஏமாற்றம், பற்றாக்குறைகள் என்று பலவும் வரும்.

எது வந்தாலும் அதை பெரும் சுமையாக எண்ணாது சுலபமாக எடுத்துக் கொண்டால் மனதில் பிரச்சினைகள் வராது. சிறிய துன்பத்தைப் பெரிய தென்று நினைத்தால் மனம் குழம்பிவிடும்.

மனம் குழம்பினால் குடும்பம் குழம்பும். குடும்பம் குழம்பினால் வாழ்க்கை நாசமாகி விடும்.

மனதின் இயல்புதான் உடலின் செயற்பாடு.

மனம் சோம்பினால் உடலும் சோம்பும்.

மனம் துணிந்தால் உடலும் துணியும்.

உடலுக்கு நோய் வந்தால் மருந்தால் மாற்றலாம். மனதிற்கு நோய் வந்தால் மருந்தால் குணப்படுத்த முடியாது.

இன்று நாட்டில் எத்தனையோ பிரச்சினைகள். அதனால் மனம் குழம்பியவர்கள் பலர்.

மனம் குழம்பாதிருந்தால் இழந்த சொத்துக்களை, இழந்த இன்பங்களைக் கூடப் பெறலாம்.

நம்பிக்கை தான் வாழ்க்கையை வளம் படுத்தும். நம்பிக்கையில்லாதவனது மனம் அடிக்கடி மாறுபடும். மாறுபடாத மனம் உறுதி மிக்கதாக இருக்ம்.

மனதைப் பற்றி சுவாமி விவேகானந்தர் பின்வருமாறு கூறுகிறார்.

“உன்னால் சாதிக்க இயலாத காரியம் எவையும் இருப்பதாக ஒரு போதும் நினைக்காதே. அப்படி நினைப்பது சமயத்திற்கு மிகப்பெரிய முரண்பட்ட கருத்தாகும். பாவம் என்று ஒன்று உண்டென்றால், அது ‘நான் பலவீனமானவன், மற்றவர்கள் பலமானவர்கள்’ என்று சொல்வது தான்.

நீ நம்பிக்கையுடன் எதை நினைக்கிறாயோ அதை நீ சாதிப்பாய் நீ உன்னை வலிமை உடையவன் என்று நினைத்தால் வலிமை படைத்தவனாவாய்

சுவாமி விவேகானந்தரின் இந்த மஹா வாக்கியம் தான் என்னைப் பல சாதனைகள் புரிய வைத்தது.

கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்தை இலங்கையில் உள்ள பெரிய பாடசாலைகளுக்குச் சமமாக உயர்த்த வேண்டும் என்று திடசங்கற்பம் பூண்டேன். பாடசாலை உயர்ந்தது.

கட்டிடங்கள் கட்ட வேண்டும் என்று நினைத்தேன். கட்டினேன்.

விளையாட்டு மைதானம் வாங்க வேண்டும் என்று நினைத்தேன் வாங்கினேன்.

பாடசாலையைச் சுற்றி சீமெந்து மதில் கட்ட வேண்டும் என்று நினைத்தேன். கட்டினேன்.

நீர்த்தாங்கி, விஞ்ஞான கூடம், கணணி அறை என்பன அமைக்க வேண்டுமென்று நினைத்தேன். அமைத்தேன்.

பாடசாலைக்குள் ஒரு விநாயகர் ஆலயம் கட்ட வேண்டும் மென்று நினைத்தேன் கட்டினேன்.

பாடசாலையை அரசாங்கம் சுவீகரித்த வா்த்தமானி அறிவித்தலைத் தேடி எடுக்க வேண்டு மென நினைத்தேன் தேடி எடுத்தேன்.

1330 திருக்குறள்களுக்கும் கதை எழுத வேண்டும் என்ற நினைத்தேன் எழுதி முடித்தேன்.

அது போல 700 பகவத் கீதைச் சூத்திரங்களுக்கும் கதை எழுத வேண்டுமென்று நினைத்தேன் எழுத முடித்தேன்.

நல்லூா் கோட்டக் கல்விப்பணிப்பாளராகக் கடமை ஏற்றதும் நல்லூா் கல்விக் கோட்டத்தைத் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தேசிய ரீதியாக முதலிடம் பெறவைக்க வேண்டுமென நினைத்தேன். 2007 ஆம் 2008 ஆம் ஆண்டுகளில் நல்லூா்க் கோட்டம் முதலிடம் பெற்றது.

மனிதரின் 90 சதவீதமான சக்தி வீணாகிவிடுகிறது.

“செய்ய முடியாத செயல்கள் எவையுமில்லை. என்னால் இயலாது என்று ஒருபோதும் சொல்லாதே. ஏனெனில் நீ வரம்பில்லாத வலிமை உள்ளவன். நீ எதையும் எல்லாவற்றையும் சாதிக்கக் கூடியவன்”. என்று சுவாமி விவேகானந்தா் கூறுகிறாா்.

பலவீனமானவா்களின் மனம் நம்பிக்கை கொள்ளாது. அப்படியானவா்கள் முதலில் கடவுள் மீது நம்பிக்கை வைத்தல் வேண்டும். கடவுள் அன்பே உருவானவா். அவா் எனக்கு உதவி

செய்வார். எனக்கு வரும் கஷ்டங்களை நீக்குவார் என்று நம்பிய பின் தொடங்குங்கள். கட்டாயம் கடவுள் உதவி செய்வார்.

கடவுள் உனக்கு உதவி செய்வதானால் முதலில் உனது மனதைத் திடப்படுத்துவார். பின்பு நம்பிக்கை கொள்ளச் செய்வார். அதன் பின் உன்னைக் கொண்டே உனக்கு வெற்றிகளைத் தேடித் தருவார். உனக்கு எந்நாளும் பிறர் உதவி செய்ய மாட்டார்கள். உனது உடல் தான் உனக்கு உதவி செய்யும்.

எல்லாவற்றையும் எழுதலாம், சொல்லலாம், வாசிக்கலாம் ஆனால் அவையெல்லாம் நடப்பதில்லை என்று பலர் சந்தேகிப்பதுண்டு.

எந்நாளும், எவ்வேளையிலும் மனம் துணிவுடன் இருக்காது, கடவுளின் மீது நம்பிக்கை வைக்காது. இதற்கு காரணம் அளவிட முடியாத துன்பங்கள் சில வாழ்வில் குறுக்கிடுவது தான்.

எனக்குத் தெரிந்த ஒருவர் வேதங்களையும் உபநிடதங்களையும் இதிகாச புராணங்களையும் கற்றவர். மற்றவர்களுக்கு ஆலோசனைகள் கூறுபவர். கடவுள் பக்தி மிக்கவர். அவரது ஒரே ஒரு மகன் பாடசாலையால் வரும் போது விபத்தில் சிக்கி இறந்து விட்டான்.

அன்றிலிருந்து அவர் கோயிலுக்கு வருவதில்லை, கடவுளை வணங்குவதில்லை. தேவார திருவாசகங்களை ஓதுவதில்லை. அதனால் மக்கள் கோயிலுக்கு நிதி சேகரிக்கும் போது கூட அவரிடம் கேட்பதில்லை.

இதற்கு என்ன சொல்வதென்று எனக்கு இதுவரை புரியவில்லை.

விதிப்பயன் என்பதா?

முன்வினை என்பதா?

இறைவனின் சோதனை என்பதா?

அவரைப் பற்றி ஊரில் உள்ளவர்கள் பலவாறு கதைப்பார்கள்.

“அநியாயங்கள் செய்பவர்கள், ஏமாற்றுபவர்கள், நம்பிக்கைத் துரோகம் செய்வோர், கலப்படம் செய்வோர் நல்லபடி வாழ்கிறார்கள். பாவம் கடவுளை நம்பிய மனிதன் இன்று வாய்பேசாது மௌனமாகி விட்டது” என்று எனது நண்பன் எனக்குச் சொல்வான்.

நான் எழுதும் தத்துவத்தைக் கேலி செய்வதில் அவனுக்கு அலாதியான இன்பம்.

நான் எதுவும் பேசுவதில்லை. பேச முடியாத நிலை.

எல்லாவற்றிற்கும் ஒரு மூலம் இருக்கும். அது பிறருக்குத் தெரியாமல் இருக்கலாம்.

காரணமில்லாமல் காரியம் நடைபெற மாட்டாது.

மகனை இழந்த நண்பரின் வீட்டுக்கு நான் அடிக்கடி செல்வேன். அவர் கதைக்க மாட்டார். அவரது மனைவி என்னைக் கண்டதும் விம்மி விம்மி அழுவாள்.

நான் சிறிது நேரம் இருந்து விட்டு வருவேன்.

காலத்தை அறிந்து கொள்ளும் தன்மையாருக்கும் இல்லை.

சோதிடர்களாற் கூட நாளை நடைபெறுவதைச் சொல்ல முடியாது. ஆனால் சிவனடியார்கள் சொல்வார்கள். ஞானிகள் சொல்வார்கள். கடவுள் சொல்வார்.

கடவுள் பக்தர்களுக்கு நேரடியாக வந்து உதவுவார்.

எனக்கு தேவைகள் ஏற்படும் போது எனது குலதெய்வமான வெள்ளெருவை விநாயகனையும், நான் ஸ்தாபிதம் செய்த நாவலர் ஸ்ரீ வித்தியா மஹா கணபதியையும் வேண்டுவேன். எனது தேவைகள் யாவும் நிறைவுறும்.

எல்லாப் பொறுப்புக்களையும் உங்கள் குல தெய்வத்திடம் விட்டு விட்டு நிம்மதியாக இருங்கள். யாவும் நல்ல முறையில் நடைபெறும். இது நான் கண்ட உண்மை.

நிம்மதி தான் மனிதனுக்குத் தேவையானது. நிம்மதியாக இருப்பவனிடம் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். மகிழ்ச்சி தேவையானவற்றை யெல்லாம் கொடுக்கும். மகிழ்வுடன் இருப்பவர்களை எல்லோரும் விரும்புவார்கள். அதனால் மகிழ்ச்சியாக இருங்கள்.

துன்பங்கள் ஒருபோதும் குறையாது.

ஏழைகளுக்குச் சாப்பாடு இல்லை என்ற துன்பம். பணக்காரர்களுக்கு சுவையான உணவை உண்ண முடியவில்லையே என்று துன்பம்.

காதலித்துத் திருமணம் செய்தால் இன்பம் என்று பலர் நினைக்கிறார்கள். காதலித்துத் திருமணம் செய்த பலர் பிரிந்து வாழ்கிறார்கள்.

காதலித்துத் திருமணம் செய்பவர்களைக் கொலை செய்பவர்கள் உண்டு.

காதலித்துத் திருமணம் செய்தவள் இன்னொரு ஆடவனுடன் கள்ள உறவு வைப்பதும் உண்டு.

பேசிச் செய்யும் திருமணங்கள் பல குழப்பத்தில் பிரிவதுண்டு.

திருமணம் செய்தும் குழந்தைகள் இல்லாத குடும்பங்கள் உண்டு.

அளவுக்கதிகமான குழந்தைகளைப் பெற்று அவதிப்படுபவர்களும் உண்டு.

பணக்காரனின் பிள்ளைகளில் சிலர் கல்வியில் அக்கறை காட்டுவதில்லை. பெற்றோர் வற்புறுத்தியும் அவர்கள் கற்பதில்லை.

ஏழைகளின் பிள்ளைகளில் உயர் கல்வி கற்பவர்கள் பலர் உண்டு.

உயர் கல்வி கற்று உயர் பதவிகளைப் பெற்றோர் அதைச் செய்ய முடியாமல் அவதிப்படுவதும் உண்டு.

இதெல்லாம் இயற்கையின் திருவிளையாடல்கள். இவற்றை உணர்ந்து கொள்பவர்கள் எப்பொழுதும் மகிழ்ச்சியுடன் வாழ்வார்கள்.

எப்பொழுதும் குடும்பத்தில் குறைகள் இருக்கும். அதை நிறைகளாக்கிக் கொள்ளல் வேண்டும்.

குடும்பத்தில் பெரும்பாலும் துன்பங்கள் பல வழிகளாலும் வரும். அவற்றைத் தாங்கிக் கொள்ளல் வேண்டும்.

குடும்பத்தின் எதிர்காலம் குடும்பத் தலைவனைத்தான் சார்ந்திருக்கிறது. எனவே செயலற்று வாழ்க்கையை வீணாகக் கழிக்காது உற்சாகத்துடன் செயற்பட்டு குடும்பத்தை முன்னேற்றல் வேண்டும்.

எதைச் செய்தாலும் சிலர் குறை கூறுவார்கள். சிலர் பாராட்டுவார்கள். பிறர் கூறும் குறைகளையும் பாராட்டுக்களையும் ஏற்றால் உங்களால் மகத்தான காரியம் எதையும் செய்ய முடியாது.

நான் கந்தசஷ்டிக் கவசத்திற்கு உரை எழுதி வெளியிட்டேன். கணனியின் தவறால் ஒரு வரி அச்சாகாமல் போய்விட்டது. அதைக் கவனியாது கொடுத்துவிட்டேன். மறுநாள்

ஒருவர் அதைக்குறிப்பிட்டு ஊரில் உள்ள பிரமுகர்களுக்குக் கடிதம் எழுதினார். ஒரு வரி விட்டது மகாபாவம் என்று அவர் குறிப்பிட்டார். மறு நாள் அதை நான் திருத்தினேன். தவறு ஏற்பட்டால் அதைச் சுட்டிக்காட்டலாம். சம்பந்தப்பட்டவருக்குத் தான் அதைச் சுட்டிக் காட்டல் வேண்டும்.

மனிதர் ஒவ்வொருவரும் ஆயிரம் வகையான குணங்களைக் கொண்டவர்கள். இவற்றை உணரல் வேண்டும்.

யார் எதையும் சொல்லட்டும்.

உலகம் இருந்தாலும் சரி, அழிந்தாலும் சரி, நீ உனது கடமைகளைச் செய், செய்து கொண்டே இரு. காலப்போக்கில் உனது செயலைப் பாராட்டப்பலர் தோன்றுவார்கள்.

கனவுகள் கண்டு கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. அவற்றை அஞ்சாது செயற்படுத்தினால், முன்னேற்றம், வெகுமதி, புகழ் யாவும் சேர்ந்து வரும்.

தைரிய சாலிகள் அஞ்சமாட்டார்கள். அவர்கள் நேர்மையாக நடந்தால் உலகையே வெல்வார்கள்.

குடும்பத்தில் உள்ளோர் உடல் பலவீனமோ, மனப்பலவீனமோ கொள்ளாதவாறு குடும்பத் தலைவர்கள் நடந்து கொள்ளல் வேண்டும். முதலில் குடும்பத் தலைவர்கள் உடற் பலவீனமும், மனப்பலவீனமும் இல்லாதவர்களாக இருத்தல் வேண்டும்.

பலவீனனான ஒருவன் பலசாலிகளை உருவாக்க முடியாது.

ஒரு தலைவன் மனப்பலமுள்ளவனாகவும், உடல் வலிமை உள்ளவனாகவும், தாயைப் போல இரக்கமுள்ள இதயமுள்ளவனாகவும் இருத்தல் வேண்டும்.

குடும்பத்தின் நன்மைக்காக அவனுடைய மிகவும் சிறந்த உத்தமமான பிள்ளைகளின் செயற்பாடுகள் அமைக்கப்படல் வேண்டும்.

குடும்பத்தின் நன்மைக்காக, குடும்ப உறுப்பினா்களின் இன்பத்திற்காகக் குடும்பத் தலைவா்கள் தங்களைத் தியாகம் செய்தல் வேண்டும். என்றென்றும் நிலைத்த மாறாத அன்பும், தியாக மனப்பாங்கும், கருணையும் பொருந்திய குடும்பத் தலைவா்களே இன்றைய வேளையில் தேவைப்படுகின்றனா்.

எதற்கும் மற்றவா்களை எதிா் பாா்க்கக் கூடாது. உடலையும் மனதையும் வலிமையுடைய தாக்கிக்க கொண்டால் தமக்குத் தேவையான அத்தனையையும் தானே உருவாக்கிக் கொள்ளலாம். இப்படியான கல்வியும் பயிற்சியும் தான் இன்றைய உலகிற்குத் தேவை என்பதை ஒவ்வொருவரும் உணா்ந்து கொள்ளல் வேண்டும்.

ஒருவன் குற்றம் குறைகளுடன் துன்பப்பட்டுக் கொண்டிருப்பதற்குக் காரணம் அவன் தொடா்ந்து துன்பங்களைப் பற்றியும், அடுத்தவரைக் கெடுப்பதைப் பற்றியும், அடுத்தவரிடமிருந்து எல்லாவற்றையும் பெறவேண்டும் என்றும் எண்ணுவதுதான். அவன் தவறுகள் செய்வதற்குக் காரணமும் அவை தான். இவற்றை எண்ணுவதை விட்டு விட்டு உயா்ந்த இலட்சியங்களை எண்ணினால் நிட்சயமாக அவன் துன்பங்களிலிருந்து விடுதலை அடைவான். உயா்ந்த இலட்சியங்கள் எவையெவையென அறிந்து குடும்ப உறுப்பினா்களுக்குச் சொல்லுங்கள். உயா்ந்த இலட்சியங்களை அறியாதவா்கள் தான் தொடா்ந்து துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறாா்கள். மக்களில் பெரும்பான்மையானவா்கள் நல்லவற்றை அறிந்து கொள்ளவோ, கடைப்பிடிக்கவோ

விரும்புவதில்லை. இதனால் தான் துன்பங்கள் கொடுமையாகத் தாக்குகின்றன.

அடுத்தவர்களை கெடுக்க நினைப்பவர்கள் பழிக்குப் பழிவாங்கவே விரும்புகிறார்கள். திருடுபவர்கள் மீண்டும் மீண்டும் திருடவே விரும்புகிறார்கள். தண்டனைகளைப் பெற்றபோதும், அவமானப்பட்ட போதும் அவர்கள் திருந்துவதாக இல்லை. கற்றவர்கள் கூட இதற்கு விதிவிலக்காவதில்லை. எனவே பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு நீதிக்கதைகளையும் ஒழுக்கக் கோட்பாடுகளையும் அவர்கள் புரியும்படி சொல்லிக் கொடுத்தல் வேண்டும்.

வாழ்க்கை என்பது இவ்வளவுதான். தத்துவங்களை மட்டும் எடுத்துச் சொன்னால் அது பலருக்குப் புரியாது. வெறும் கதை என்று நினைப்பார்கள். நிஜத்தைச் சொல்ல வேண்டுமானால் அனுபவத்தைச் சொல்லுதல் வேண்டும். பிறருக்கு ஏற்படும் அனுபவங்களை நாம் அறிய முடியாது. அதனால் தான் நான் எனக்கு ஏற்பட்ட அனுபவங்களை எழுதி வருகிறேன். அவற்றை வாசித்து பயனடையுங்கள். மீண்டும் இன்னொரு நூலோடு சந்திப்போம்.

## பின்னட்டை

“தொட்டதனைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்கு கற்றனைத்தூறும் அறிவு” என்ற வள்ளுவர் குறளுக்கு இலக்கணமாய் வாழ்ந்துகாட்டி, மணிவிழாக் கண்ட நல்லூர் கோட்ட கல்விப்பணிப்பாளர் திரு. கே. வி.குணசேகரம் அவர்கள், கல்வித்துறையில் ஆற்றிய அரும்பணிகள் மகத்தானவை. கற்றோம், பட்டம் பெற்றோம், தொழிலொன்று பெற்றோமென்பதோடு அமையாது தாம் பெற்ற கல்வியைத் தனது அறிவுத் தேடலின் மூலம் அற்புதமான இலக்கியங்களைப் படைத்துத் தனது அடையாளத்தைக் கல்விச் சமூகத்தில் தனித்துவப்படுத்தியுள்ளார். சிறுவர் முதல் பெரியோர் வரை எந்தத் தரப்பினர்க்கும் ஏற்ற வகையில் ஆக்கங்களைத் தந்த இவர், தர்மத்தின் வழி வழுவாது நிற்கும் சமூகமொன்றை உருவாக்கும் நன்நோக்கில் ஔவையின் ஆத்திசூடியை, வள்ளுவனின் குறளை, கண்ணனின் கீதையை இலகுநடையில் கதைகளாக்கி எவர்க்கும் விளங்க வைத்த பாங்கு போற்றற்குரியது. நல்லாசானாய் சேவையை ஆரம்பித்து நன்மாணாக்கரை உருவாக்கிய கே. வி. குணசேகரம் அவர்கள் பின்நாளில் நல்லூர்க் கோட்டக் கல்விப் பணிப்பாளராகச் சேவையாற்றும் போது கல்வித்துறையில் சமூகத்தின் நலன் சார்ந்த சாதனைகள் பல புரிந்து நாளைய சந்ததிக்கு நல்லதொரு வழிகாட்டியாய்த் திகழ்கிறார். அதுபோல தனது சமூகப்பணிகளை மேலும் தொடர மனமுவந்து வாழ்த்துகின்றேன்.

க. கணேஷ்
அரசாங்க அதிபர்,
யாழ்ப்பாணம்.